# வரலாறு

## தரம் - 7

**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**



சகல பாடநூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு
**www.edupub.gov.lk** வலைத்தளத்தை நாடுங்கள்.

| | |
|---|---|
| முதற்பதிப்பு | - **2015** |
| இரண்டாம் பதிப்பு | - **2016** |
| மூன்றாம் பதிப்பு | - **2017** |
| நான்காம் பதிப்பு | - **2018** |
| ஐந்தாம் பதிப்பு | - **2019** |

எல்லா உரிமையும் இலங்கை அரசினருக்கே

ISBN 978-955-25-0108-1

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக
சிசாரா பிரின்ட்வே பிரைவட் லிமிட்டட்,
அச்சகத்தினால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

ஆனந்த சமரக்கோன்
கவிதையின் பெயர்ப்பு.



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி


கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.



***அகில விராஜ் காரியவசம்***
***கல்வி அமைச்சர்***

# முன்னுரை

உலகின் சமூக, பொருளாதார, தொழினுட்ப, கலாசார விருத்தியுடன் சேர்ந்து கல்வியின் நோக்கங்கள் மிக விரிந்த தோற்றமொன்றைப் பெற்றுள்ளன. மானிட அனுபவங்கள், தொழினுட்ப மாற்றங்கள் ஆராய்ச்சி மற்றும் புதிய குறிகாட்டிகளின்படி கற்றல் கற்பித்தல் செயற்பாடும் நவீனமயமாக்கப்பட்டுள்ளது. அதன்போது மாணவர் தேவைக்குப் பொருந்தும் விதமான கற்றல் அனுபவத்தை ஒழுங்கமைத்து கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களிற்கிணங்க பாடம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிப் பாடநூல்களை ஆக்குவது அவசியமாகும். பாடநூல் என்பது மாணவரின் கற்றல் சாதனம் மாத்திரமல்ல. அது கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்கும் அறிவு, பண்பு விருத்திக்கும் நடத்தை மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியுடன் உயர்ந்த கல்வியொன்றை பெற்றுக் கொள்வதற்கும் மிகவும் உதவக்கூடியதுமாகும்.

இலவசக் கல்விக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் தரம் 6 முதல் தரம் 11 வரை சுமார் 91 வகையான பாடநூல்கள் அரசினால் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்நூல்களிலிருந்து உயர்ந்தபட்சப் பயன்களைப் பெற்றுக்கொள்வதுடன், அவற்றைப் பாதுகாப்பதும் உங்களது கடமையாகும் என்பதையும் நினைவூட்டுகின்றேன். பூரண ஆளுமைகொண்ட நாட்டிற்குப் பயனுள்ள சிறந்ததொரு பிரசையாகுவதற்கான பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு இப்பாடநூல் உங்களுக்குக் கைகொடுக்கும் என நான் எண்ணுகிறேன்.

இப்பாடநூலாக்கத்தில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.10

**கண்காணிப்பும், மேற்பார்வையும்**

| | | |
|---|---|---|
| *டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க* | - | *கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்*<br>*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்* |

**வழிகாட்டல்**

| | | |
|---|---|---|
| *டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி* | - | *ஆணையாளர் (அபிவிருத்தி)*<br>*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்* |

**இணைப்பாக்கம்**

| | | |
|---|---|---|
| *ஜே. சந்திரபாலன்* | - | *உதவி ஆணையாளர்*<br>*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்* |

**பதிப்பாசிரியர் குழு**

| | | |
|---|---|---|
| *பேராசிரியர் ராஜ் சோமதேவ*<br>BA (Special), MPhil (*களனி*) | - | *தொல் பொருள்*<br>*பட்டப்பின் கல்வி நிறுவனம்*<br>*களனிப் பல்கலைக்கழகம்* |
| *பேராசிரியர் பத்மசிறி கன்னங்கர*<br>BA, MA, (*ஸ்ரீ ஜயவர்த்தனபுர*) | - | *வரலாற்றுக் கல்விப் பிரிவு*<br>*ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்* |
| *கலாநிதி அனுஷியா சேனாதிராஜா*<br>BA, MA, M Phil, Ph, D | - | *சிரேஷ்ட விரிவுரையாளர்*<br>*தென்கிழக்குப் பல்கலைக்கழகம்* |
| *சந்திமா நிஷானி தர்மபால*<br>BA (*களனி*) PGDE (*கொழும்பு*)<br>MSc (*மலேசியா*) | - | *சிரேஷ்ட விரிவுரையாளர்*<br>*தேசிய கல்வி நிறுவகம்* |

**எழுத்தாளர் குழு**

| | | |
|---|---|---|
| *அருட் சகோதரி மேரி டொனேட்டா*<br>BA, (*பேராதனை*)<br>MA, (*இந்தியா*)<br>PGDE (*தேசிய கல்வி நிறுவகம்*) | - | *ஓய்வு நிலை பிரதி அதிபர்* |
| U.L.M *பசீர்*<br>BA. Dip in Education | - | *ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்* |
| *கே. எஸ். ரஞ்சனி*<br>BA, (*ஸ்ரீ ஜயவர்த்தனபுரம்*)<br>MA, (*இலங்கை திறந்த பல்கலைக்கழகம்*)<br>PGDE (*தேசிய கல்வி நிறுவகம்*) | - | *ஆசிரிய ஆலோசகர்*<br>*வலயக் கல்விக் காரியாலயம், ஹொரண* |

| | | |
|---|---|---|
| டப்ளியு. ஏ. இந்திராணி<br>BA (கொழும்பு) | - | ஆசிரியர் சேவை<br>பாலன் இயேசு தேசிய பாடசாலை |

**பதிப்பாசிரியர் (மொழி)**

| | | |
|---|---|---|
| சோ. பாலசுந்தரம் BA<br>PGDE (தேசிய கல்வி நிறுவகம்) | - | ஓய்வு நிலை பிரதி பரீட்சை ஆணையாளர்<br>பரீட்சைத் திணைக்களம். |

**சரவை நோக்கு**

| | | |
|---|---|---|
| ஆர். கருணா<br>BA (பேராதனை)<br>PGDE (தேசிய கல்வி நிறுவகம்) | - | ஆசிரியர்<br>மட் / பட் / முனைத்தீவு சக்தி மகா வித்தியாலயம்,<br>பெரியபோரதீவு. |

**அட்டைப்படம்**

| | | |
|---|---|---|
| ஆறுமுகம் அன்பரசி | - | கணினி உதவியாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |

**கணினி வடிவமைப்பு**

| | | |
|---|---|---|
| நாகரட்னம் பரமேஸ்வரி | - | கணினி உதவியாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |

## பொருளடக்கம்

**1. எமது புராதன வாழ்க்கை முறை** **1 - 19**

பொருளாதாரம்
கலாசாரம்

**2. எமது கீர்த்திமிக்க அரசர்கள்** **20 - 44**

மானவர்ம அரச பரம்பரை
அரச நிர்வாக ஒழுங்கமைப்பு
விஜயபாகு மன்னன்
மகா பராக்கிரமபாகு மன்னன்
நிசங்கமல்ல மன்னன்

**3. எமது கலாசார மரபுரிமைகள்** **45 - 65**

எமது கலாசார மரபுரிமை என்றால் என்ன?
தொட்டுணரக் கூடிய மரபுரிமைகள்
தொட்டுணர முடியாத மரபுரிமைகள்

**4. பிற்கால ஆட்சி மையங்கள்** **66 - 77**

அறிமுகம்
தம்பதெனிய இராசதானிக் காலம்
யாப்பகுவ
குருணாகலை
கம்பளை
கோட்டை

**5. ஐரோப்பாவின் புராதன நாகரிகங்கள்** **78 - 92**

கிரேக்க நாகரிகம்
உரோம நாகரிகம்

# 1 எமது புராதன வாழ்க்கை முறை

**அறிமுகம்**

எமது நாட்டின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு நாங்கள் ஆசைப்படுகி றோம். ஆகையால் வரலாறு பற்றி எழுதப்பட்டுள்ள நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், கதைகள் ஆகியவற்றை நாங்கள் வாசிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறோம். முற்காலத்தில் எமது நாட்டை ஆட்சி செய்த மன்னர்கள், நிர்வாகத்தில் சம்பந்தப்பட்ட உத்தியோ கத்தர்கள், சமயத்தலைவர்கள், குளங்கள் முதலானவை பற்றி இதுவரைக்கும் பல விடயங்களை நாம்அறிந்து கொண் டுள்ளோம். இப்பாடத்தின் மூலம் முற் காலத்தில் எமது நாட்டில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையுடன் சம் பந்தப்பட்ட தகவல்களை உங்களுக்கு முன்வைக்கப்போகிறோம்.

## பொருளாதாரம்

முற்காலத்தில் எமது நாட்டில் வாழ்ந்த மக்கள் வாழ்வாதாரத்திற்காகப் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். விவசாயம், வர்த்தகம், கைத்தொழில்கள் என்பவற்றில் ஈடுபட்டதோடு, மந்தை வளர்ப்பும் அவ்வாறான முயற்சிகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. அவற்றின் மூலம் புராதன வாழ்க்கை முறை மூன்று துறைகளின் கீழ் இடம்பெற்று வந்துள்ளது. அவையாவன:

- விவசாயம்
- கைத்தொழில்
- வர்த்தகம்


## விவசாயம்

முற்காலத்தில் எங்கள் நாட்டவர்களில் பெரும்பாலானோர் கிராமங்களிலேயே வாழ்ந்து வந்தனர். அவர்கள் இன்றைய மக்களைப் போலன்றி மிகவும் எளிமையான வாழ்க்கை முறையைக் கைக்கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர். அவர்களுடைய தேவைகளும் வரையறுக்கப்பட்டனவாய் இருந்து வந்துள்ளன. வாழ்வதற்குத் தேவை யான உணவு, பானங்களை உற்பத்தி செய்து கொள்வது அவர்கள் எதிர்நோக்கிய பிரதான சவாலாகும். இதனை எதிர் கொள்வதற்காகப் பெரும்பாலானோர் விவசாயத்தைப் பிரதான வாழ்வாதாரத் தொழிலாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந் தனர். அது இருவகைப்படும் :

- சேனைப்பயிர்ச் செய்கை அல்லது மேட்டு நிலப் பயிர்ச்செய்கை.
- நெற்செய்கை அல்லது சேற்று நிலப் பயிர்ச்செய்கை.

## சேனைப்பயிர்ச் செய்கை

சேனைப்பயிர்ச் செய்கையை மேட்டுநிலப் பயிர்ச்செய்கை என்றும் குறிப்பிடுவர். அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான தானியங்கள், மரக்கறிகள், கிழங்குகள் போன்றவை சேனைகளில் பயிரிடப்பட் டன. மழை நீரைக் கொண்டே சேனைப் பயிர்ச்செய்கை நடைபெற்றுவந்தது.




சேனைப்பயிர்ச்செய்கை உலகின் புராதன விவசாய முறையொன்றாகும். இலங்கையிலும் புராதன காலத்தில் இருந்தே சேனைப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது.

காட்டைத் தீயிட்டுக் கொளுத்திய பின்னர் துப்புரவு செய்து கொள்ளப்படும் நிலம் சேனை எனக் குறிப்பிடப்படும். உம்மக்க ஜாதக நூலில் '**சேன்**' என்றும் கல்வெட்டுக்களில் '**பிட்டபிம்**' என்றும் முற்காலத்தில் நிலவிய சேனைப்பயிர்ச் செய்கை குறிப்பிடப்பட்டுள்ளது. சேனைச் செய்கைக்குத் தெரிவு செய்து கொள்ளப்படுவது பெரும் காட்டுநிலப் பகுதியாகும். அது விவசாயிகள் வாழும் பிரதேசத்தில் இருந்து சற்று தூரத்தே அமைந்திருப்பவையாகும். ஒருவரினதோ அல்லது பலரினதோ கூட்டுமுயற்சியால் சேனை உருவாக்கப்படுகின்றது.

காவந்திஸ்ஸ மன்னனுடைய காலத்தில் உருகுணைப் பிரதேசத்தில் கிரி என்ற குடியிருப்பில் நிசெல்விட்டிய கிராமத்தில் வாழ்ந்த குடும்பம் ஒன்றின் சகோதரர்கள் ஐவரும் ஒன்று சேர்ந்து காடு ஒன்றைச் சுத்திகரித்து உளுந்து பயிரிடுவதற்கு சேனை ஒன்றை உருவாக்கிக் கொண்டது தொடர்பான கதை ஒன்று மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சேனைப்பயிர்ச்செய்கை ஒன்றை உருவாக்கிக் கொள்ளும் போது விவசாயி மிகவும் கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டி இருந்தது. அறுவடையைப் பெற்றுக் கொள்ளும்வரை, சேனை பயிர்ச்செய்கையாளன் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பலவாகும்.

**சேனைப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட விதம்**

1. சேனைப்பயிர்ச்செய்கைக்கான நிலம் ஒன்றைத் தெரிவு செய்து கொள்ளுதல்
2. காட்டை அழித்து, தீயிட்டுக் கொளுத்தி அதனைச் சுத்திகரித்துக் கொள்ளுதல்
3. மரம், அடிப்பகுதிகள் என்பவற்றைத் தீயிட்டுப் பொசுக்கி நிலத்தைப் பண்படுத்திக் கொள்ளுதல்

இவ்வாறு தீயிட்டுப் புதிதாக உருவாக்கிக் கொள்ளப்பட்ட நிலத்தை 'நவதெளிசேனை' என்று குறிப்பிடுவர். இது மிகவும் செழிப்பான விளைநிலமாகக் காணப்பட்டது.



உரு 1.1. நவதெளிசேனை நிலம்

4. யானை, பன்றி, மான், மரை, முள்ளம்பன்றி, குரங்கு போன்ற காட்டு விலங்குகளிலிருந்து சேனையைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் அறுவடை மேற்கொள்ளும்வரை சேனையை நன்கு பராமரித்துக் கொள்வதற்குமான தேவை அவ்விவசாயிக்கு இருந்துவந்தது. அப்போது சேனையைப் பாதுகாத்துக் கொள்வதற்குப் பல்வேறு வழிமுறைகளை அக்கால விவசாயிகள் கையாண்டு வந்துள்ளனர்.

- கம்புகளினால் வேலியை அமைத்தல்.
- பாதுகாப்புக்காகத் தீயை மூட்டி வைத்திருத்தல்.
- குடிசையில் (பரண்) தங்கிப்பயிர்களைப் பாதுகாத்துக்கொள்ளல்.

5. மழைக் காலம் தொடங்கும்போது சேனைகளில் பயிரிட ஆரம்பிப்பர். இவற்றில் பெரும்பாலும் உலர் தானியப் பயிர்கள் பயிரிடப்பட்டன. தினை, சாமை, குரக்கன் போன்றவை அவ்வாறான உலர் தானியப்பயிர்களில் சிலவாகும். அத்தோடு பயறு, இஞ்சி, கடுகு, கரைநெல், எள்ளு என்பவற்றோடு பருத்திப்பஞ்சு, கரும்பு என்பனவும் வட்டுக்காய், கத்தரிக்காய், சுண்டைக்காய், சாம்பல் வாழை, பூசணி போன்ற மரக்கறி வகைகளும் சிறுகிழங்கு, வற்றாளை போன்ற கிழங்கு வகைகளும் சேனைகளில் பயிரிடப்பட்டதாக இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆரம்ப காலத்தில் நெற்செய்கையும் சேனைச்செய்கையாகவே மேற்கொள்ளப்பட்டு வந்தது. சேனைகளில் பயிரிடப்பட்ட நெல், கரைநெல் எனக் குறிப்பிடப்பட்டது. கரைநெல் பயிரிடப்படுவதற்கு என்றே சேனைகளும் இருந்தன. கரைநெல் பற்றி பழைய இலக்கிய ஆக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

துட்டகைமுனு மன்னனின் மகன் சாலிய குமாரனுக்கு அப்பெயர் சூட்டப்பட்டமை, அவன் பிறந்த காலத்தில் கரைநெல் பேரளவில் விளைந்தமையாலாகும் என்று **சீஹ லவத்து** எனும் நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது. சாலி என்பது கரைநெல் லைக் குறிக்கும் இன்னொரு சொல் லாகும். முற்காலத்தில் கரைநெல் சில சந்தர்ப்பங்களில் வயல்களிலும் பயிரிடப்பட்டன. பல்வேறு கரை நெல்வகைகள் காணப்பட்டன.

6. ஒருமுறையோ இருமுறையோ விளைச்சலைப் பெற்றுக்கொண்ட பின்னர் சேனைகள் கைவிடப்பட்டு விடும். அப்போது சேனை நிலம் மீண்டும் காடாகமாறும். விவசாயி பயிர்ச்செய்கைக்காக வேறு சேனை நிலத்தை நாடிச்செல்வான்.

சேனைச் செய்கைக்காக வீச்சரிவாள், மண்வெட்டி, அரிவாள் போன்ற எளிமையான உபகரணங்களையே பயன்படுத்தி வந்தனர். சேனைச் செய்கையின்போது விவசாயி கையாண்ட பல்வேறு சொற்பிரயோ கங்களும் அறியப்பட்டுள்ளன. அநுராதபுர காலம் போன்ற புராதன காலத்திற்கு முன்னர் பிரயோகத்தில் இருந்த சொற்கள் இப்போது வழக்கில் இல்லாவிட்டாலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அண்மைக்கால சொற்பிரயோகங்கள் சேனைக்குரிய சொற்பதங்களைத் தெரிந்து கொள் வதற்கு உதவுகின்றன.



உரு 1.2 முற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட சில விவசாய உபகரணங்கள்

நவதெளி சேனை : புதிய சேனை நிலங்கள்

கினியாதிகாவ : காடுகளுக்குத் தீயிட முன்னர் அங்குள்ள விலங்குகளை விரட்டு வதற்கு ஒலி எழுப்புதல்.

ஹெலிகடா : பானை ஒன்றைத் தலையாகக் கொண்டு செய்யப்பட்ட வெருளி.



உரு 1.3 வெருளி

செயற்பாடு

சேனைச்செய்கையை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| பயிர்கள் | விசேட பண்புகள் | பயன்படுத்திய உபகரணங்கள் | பயன்படுத்தப் பட்ட சொற்கள் |
|---|---|---|---|
| | | | |

## சேற்று நில விவசாயம்

சேனைச்செய்கைக்கு மேலதிகமாக முற்காலத்தில் மிகவும் பரவலாக மேற் கொள்ளப்பட்ட இன்னொருவகைப் பயிர்ச் செய்கை சேற்றுநிலப்பயிர்ச் செய்கையாகும். சேற்றுநிலப்பயிர்ச் செய்கையானது நெற்பயிர்ச்செய்கை, நீர்ப்பாசனப் பயிர்ச்செய்கை எனவும் பெயர் பெற்றது. வயற்செய்கை பெரும்பாலும் நீர்ப்பாசனத்தின் உதவியுடனேயே மேற் கொள்ளப்பட்டு வந்தது. அணைகள் கட்டி, குளங்களை உருவாக்கி வயல்களுக்கு நீரைப் பெற்றுக் கொண்டுள்ளனர். மழை நீரால் வயல்நிலங்களில் பயிரிடலும் சிறு அளவில் இடம்பெற்று வந்தது.

குடும்பம் ஒன்றின் சீவனோபாயத்துக்குத் தேவையான நெல்லைப் பயிரிடுவதற்கு அக்குடும்ப அங்கத்தவர்களின் உழைப்புப் போதியதாக இருந்தாலும் சனத்தொகைப் பெருக்கத்துடன் உற்பத்திக்குப் பயன்படுத் தப்படும் நிலத்தின் அளவும் அதிகரித்துச் சென்றது. அநுராதபுர காலத்தில் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு குளம் இருந் ததாகத் தெரிய வந்துள்ளது. இவை குளக் கிராமங்கள் எனப்பட்டன. புராதன கல் வெட்டுக்களில் வெவ்ஹமிக, வாபி ஹமிக எனக் குறிப்பிடப்பட்டிருப்பது, கிராமக் குளங்கள் அமைத்தவர்களையோ அல்லது அதன் உரிமையாளர்களையோ குறிப்பதாக இருக்கலாம்.

பெரிய அளவில் வயல்களில் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு, கிராமி யக் குளங்களின் நீர் போதியதாக இல்லா மையால் மன்னர்கள் பாரிய அணைக் கட்டுகளைக் கட்டி, பெருங்குளங்களை உருவாக்கினர். மின்னேரி வாவியை உருவாக்கிய மகாசேன மன்னர் பிற் காலத்தில் ‘மின்னேரித் தெய்வம்’ எனப் போற்றப்பட்டதற்கு அவர் நீர்ப்பாசனத் துறைக்குப் புரிந்த பாரிய பணியே காரண மாகும்.

நெற்செய்கை வருடத்திற்கு இரு முறை மேற்கொள்ளப்பட்டது. அவை போகங்கள் எனப்படும். அவ்வாறான இரு போகங்கள் பற்றி அடிக்கடி கூறப்பட்டுள்ளன:

- பெரும் போகம் (மகாபோகம்)
- சிறு போகம் (யாலபோகம்)

இவ்விரு போகங்களையும் விட சில வேளைகளில் இடைப் போகப் பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது.

தோணிகல கல்வெட்டில், அகலஹஸ (பெரும்போகம்), மெதஹஸ (இடைப் போகம்), பிடதடஹஸ (சிறு போகம்) என்று மூன்று போகங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கப்பட்டு அவை இயற்கையான பசளையாக மாறியன. இக்காலத்தில் உழுவதற்குப் பயன்படுத்தப்படும் இயந்திர சாதனங்களால் பூமிக்குப் பெருந்தீங்கு ஏற்பட்டாலும் புராதனகால உழுதல் முறையினால் சூழலுக்கு பாதிப்பு ஏற்படவில்லை.

விவசாயத்திற்குத் தேவையான நீரைத் தேக்கி வைத்துக் கொள்வதற்கும் முறையாக நீரை வெளிப் பாய்ச்சுவதற்கும் இயைந்த முறையில் விவசாயி நிலத்தை



உரு 1.4. நிலத்தை உழுதல்

நெல் பயிரிடுவதற்கு வயல் ஒன்றைத் தயார்ப்படுத்திக் கொள்வதற்கு பெருமளவு முயற்சி செய்ய வேண்டியிருந்தது. அதற்காக விவசாயிகள் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுமிருந்தது.

எருமை மாடுகளைப் பிணைத்து ஏர் பூட்டி பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமான முறையில் நிலத்தைப் பண்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. இது நிலத்தை உழுதல் எனப்பட்டது. நிலம் புரட்டப்படுவதால் புல் பூண்டுகள் நசுக்

வடிவமைத்துக் கொண்டான். இவ்வாறு பண்படுத்தப்பட்ட நிலத்தில் தேர்ந்து எடுக்கப்பட்ட நெல்வகைகள் விதைக்கப்பட்டன.

நெற்பயிர்ச் செய்கைக்குப் பெருமளவில் கிருமிகளாலும் பறவைகளாலும் பாதிப்புகள் ஏற்படும். பயிரிடப்பட்டதில் இருந்து அறுவடையைப் பெற்றுக் கொள்ளும் வரை பயிரைப் பாதுகாப்பதற்கு பல்வேறுபட்ட பாரம்பரிய முறைகள் கையாளப்பட்டன.

- வயலிலும் வரப்பிலும் இடத்திற் கிடம் தென்னோலைகளை நடல்
- எண்ணெயில் நனைக்கப்பட்ட திரி களை எரித்தல்

என்பன இது போன்ற பாரம்பரிய முறை களில் சிலவாகும்.

துணியைக் கிழித்து திரிகளாகத் திரித்து இலுப்பெண்ணெயில் ஊறவைத்து அவற்றைக் காஞ்சிரைக் குச்சிகளில் கட்டி எரிப்பதன் மூலம் ஈக்களைக் கட்டுப்படுத் திய முறை அக்காலத்தில் மிகவும் பிரசித் தமானதாகும்.

ஏர், மட்டப்பலகை, அரிவாள், மண் வெட்டி போன்ற உபகரணங்கள் வயற் செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டன. வேளாண்மை விளைந்த பின்னர் அறு வடையை மேற்கொண்டனர்.

முற்காலத்தில் இவை முழுமையாக மனித உழைப்பாலேயே மேற்கொள்ளப்பட்டன. அறுவடைசெய்யப்பட்டவேளாண்மையை எருதுகளைக் கொண்டு சூடடிக்கப்பட்டு நெல் வேறாக்கப்பட்டு, அதனை நுகர்வு செய்யும்வரை பாதுகாப்பாக வைத்திருப் பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதற்காக விவசாயிகள் நெற்குதிர்களை நிர்மாணித்திருந்தனர்.

உணவுக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் போது பச்சை அரிசி, புழுங்கல் அரிசி என நெல்லைப் பதப்படுத்திக் கொண்டனர். நெல்லைக் குற்றி, பச்சை அரிசியைப் பெற்றுக் கொண்டதுடன் நெல்லை அவித்து, உலர்த்தி, குற்றிப் புழுங்கல் அரிசியைப் பெற்றுக் கொண்டனர்.

அடுத்த போகத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் வரை புராதன விவ சாயிகள் தானியங்களைப் பாதுகாத்து, சிக்கனமாக நெல்லைப் பயன்படுத்திக் கொள்ளும் நல்ல பண்புகளைக் கொண்டி ருந்தனர்.



உரு 1.5 பழைய அரிவாள் ஒன்று



உரு 1.6 ஒன்றுபட்டு அறுவடையை மேற்கொள்ளல்



உரு 1.7 நெற்குதிர்

சேற்று நிலப் பயிர்ச்செய்கையில் பயன் படுத்தப்பட்ட சொற்களாவன :

**வேளாண்மைக்குதிர் (உப்பட்டிக் குவியல்)**

அறுவடை செய்யப்பட்ட வேளாண்மையைக் குவியலாக அடுக்கி வைத்திருத்தல்

**சூடடித்தல் :**

வேளாண்மையைக் குவித்து எருமை மாடுகளைக் கொண்டு மிதித்து, நெல்லை வேறாக்கல்

**களம் :**

சூடடிக்கப் பயன்படுத்தப்படும் இடம்.

செயற்பாடு

சேற்று நிலப் பயிர்ச்செய்கையை அடிப்படையாகக் கொண்டு பின் வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| பயரிடப் படும் போகங்கள் | சிறப்பியல் புகள் | பயன்படுத் தப்பட்ட சொற்கள் | பயன்படுத்தப் பட்ட உபகர ணங்கள் |
|---|---|---|---|
| | | | |

## விலங்கு வளர்ப்பு

மேலே குறிப்பிடப்பட்ட சேனைப் பயிர்ச்செய்கை, நெற்பயிர்ச் செய்கைகளைத் தவிர விலங்கு வளர்ப்பும் அக்கால வாழ்க்கை முறையின் ஓரங்கமாக இருந்து வந்தது. விலங்கு வளர்ப்பின் மூலம் பால், இறைச்சி, முட்டை என்பவற்றைப் பெற்றுக்கொண்டதோடு விவசாய நடவடிக்கைகளுக்கும் போக்குவரத்திற்குப் பயன்படுத்துவதற்காகவும் மிருகங்கள் வளர்க்கப்பட்டன. இதற்காக ஆடு, மாடு, பன்றி, கோழி போன்ற விலங்குகள் ஆதிகாலந்தொட்டே வளர்க்கப்பட்டமை தெரிய வருகின்றது.

மாடுகள் பாலைப் பெற்றுக் கொள்வதற்காகவும் விவசாய, போக்குவரத்து நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப் பட்டன. இதற்காக முற்கால சமூகத்தில் மாடு வளர்ப்பு பொதுவாக இடம்பெற்று வந்தது. பாலைப் பெற்றுக் கொள்வதற்காக வளர்க்கப்பட்ட பசுக்கள் 'கிரிகெரி' எனக் குறிப்பிடப்பட்டன.ஆதிகாலத்தில் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் எனும் ஐவகை போசணைப் பொருட்களை பசு விலிருந்து பெற்றுக் கொண்டுள்ளனர். இவை பஞ்சரப்பொருள்கள் (பஸ்கோரச) எனக் குறிப்பிடப்படுகின்றன. அக்காலத் தில் இறைச்சிக்காக மாடுகள் வளர்க்கப்பட வில்லை என்பதோடு மாட்டிறைச்சி சாப்பிடுதல் சமூகத்தில் பரவலான ஒரு பழக்கமாகவும் இருக்கவில்லை. மாட்டை வளர்ப்பவர் கோபாலர்கள் எனக் குறிப் பிடப்பட்டனர். புராதன மூலாதாரங் களில் இவர்கள் வாழ்ந்த கிராமங்கள் கோபாலகம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பண்டுகாபயமன்னன்,பிள்ளைப் பராயத் தில் வாழ்ந்தது தொரமடலாவ எனும் கோபாலர்களின் கிராமத்திலாகும்.

இன்று போல் வளர்ச்சி அடைந்த போக்குவரத்து முறை அக்காலத்தில் காணப்படாமையால், மனிதர்களையும் பொருட்களையும் கொண்டு செல்வதற்கு மாட்டு வண்டிகள் பயன்படுத்தப்பட்டன. போக்குவரத்துக்குப் பயன்படுத்தபட்ட மாடுகள் வண்டி எருமைகள், வண்டி மாடுகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளன. மாடுகளின் முதுகில் பொருள்களை ஏற்றிச் செல்வது தவளம் முறை எனக் குறிப்பிடப்பட்டது.

முட்டை, இறைச்சி ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதற்காகக் கோழி வளர்ப்பு இடம் பெற்றது. இவற்றோடு பாலுக்கும் இறைச்சிக்குமாக ஆடுகள் வளர்க்கப் பட்டன.



உரு 1.8 தவளம் எனும் பொதி மாடுகள்



உரு 1.9 விலங்குகளைப் பயன்படுத்தி சூடுமிதித்தல்

## கைத்தொழில்

முற்கால மனிதர்களின் பல்வேறு தேவைகளுக்காகவும் கைத்தொழில்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு பொருளையும் உற்பத்தி செய்துகொள்வதற்கு ஆற்றல் வாய்ந்த தொழிலாளர்கள் இக்கைத்தொழில்களில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இவர்கள் கைவினைஞர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். சில வேளைகளில் இவர்கள் கூட்டமாக ஒரே இடத்தில் வாழ்ந்துள்ளனர். மூலப் பொருள்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய பிரதேசங்களை அண்டிக் கைத்தொழில்கள் இடம் பெற்றிருந்ததைக் காணக்கூடியதாயிருந்தது. கீழே தரப்பட்டிருப்பது அவ்வாறான கைத்தொழில்களாகும்.

| கைத்தொழில் | கைவினைஞர் | உற்பத்திப் பொருள்கள் |
|---|---|---|
| உலோகம் (இரும்பு, தங்கம், செம்பு, வெள்ளி) | இரும்புத்தொழில் செய்வோர் லோகுரு (கொல்லர்)<br>செப்புலோகத் தொழில் செய்வோர்<br>ரன்கருவன் (பொற்கொல்லன்)<br>தம்பகர (கம்மாளர்) | **விவசாய உபகரணங்கள்**<br>மண் வெட்டி, கத்தி, கோடரி, அரிவாள், ஏர்வாள், கேடயம், ஈட்டி, அம்பு<br>**அணிகலன்கள்**<br>மாலை, வளையல், தோடு, நெற்றிப்பட்டம்,<br>கோவில் மணி, குத்துவிளக்கு |




உரு 1.10 இடது: இரும்பை உருக்குவதற்குப் பயன்படுத்தப்படும் சூளையுடன் கூடிய ஊதுளைக் கருவி
வலது: அகழ்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட புராதன கால இரும்பு ஆணிகள்

| கைத்தொழில் | கைவினைஞர் | உற்பத்திப் பொருள்கள் |
|---|---|---|
| களிமண் | மட்பாண்டங்கள் செய்வோர் (கும்பகார, கும்பல்லு) குயவர் | ஓடு, செங்கல், மட்பாண்டங்கள் (சட்டி பானை) |



உரு 1.11 வனைதல் சில்லை பயன்படுத்தி மட்பாண்டங்களை உற்பத்தி செய்தல்

| கைத்தொழில் | கைவினைஞர் | உற்பத்திப் பொருள்கள் |
|---|---|---|
| கரும்பு | | பாணி, கருப்பட்டி,சீனி |
| பஞ்சு | நெசவாளர் (பெஹெகார) | துணிமணிகள் |
| இரத்தினக்கல் | இரத்தினக்கல் பட்டை தீட்டுவோர் (மணிகர) | மாணிக்க ஆபரணங்கள், பட்டை தீட்டுதல் |

செயற்பாடு

புராதன இலங்கையில் கைத்தொழில்கள் தொடர்பான தகவல் களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| கைத்தொழில் | கைவினைஞர் | உற்பத்திப் பொருள் | பயன்படுத்திய கருவிகள் |
|---|---|---|---|
| | | | |

## வர்த்தகம்

முற்கால மக்களின் மற்றுமொரு பிரதான ஜீவனோபாய மார்க்கம் வர்த்தகமாகும். இதனால் முற்கால இலங்கையில் மிகவும் முன்னேற்றகரமான வர்த்தகமுறை ஒன்று நிலவிவந்தது. இன்று போலவே அன்றும் வர்த்தகம் இரண்டு விதமாக நடைபெற்று வந்தது.

1. உள்நாட்டு வர்த்தகம்
2. வெளிநாட்டு வர்த்தகம்

நாட்டினுள்ளே இடம்பெற்றது உள்நாட்டு வர்த்தகமாகும். அந்நிய நாடுகளுடன் நாட்டிற்கு வெளியே இடம்பெற்றது வெளிநாட்டு வர்த்தகமாகும்.

## உள்நாட்டு வர்த்தகம்

உள்நாட்டு வர்த்தகம் தொடர்பாக பண்டமாற்று முறையே பெருமளவிற்கு இடம்பெற்று வந்தது. பணப் பரிமாற்றம் மிகக்குறைந்தஅளவிலேயேகாணப்பட்டது

பொருள்களைக் கொடுத்து, பொருள்களைப் பெறுவது பண்டமாற்று முறையாகும். பொருள்களைப் பெறுவதற்குப் பணம் கொடுக்க வேண்டி இருந்தாலும் இங்கு பணத்திற்குப் பதிலாக பொருள்களைக் கொடுப்பதன் மூலம் கொடுக்கல் வாங் கல்கள் நடைபெற்றன.

வர்த்தகம் விருத்தி அடைந்ததுடன் வணிக நகரங்கள் தோன்றின. அநுராதபுரமும் மகாகமையும் அவ்வாறான இரு வணிக நகரங்களாகும். இவ்வாறான வணிக நகரங்கள் வரலாற்று மூலாதாரங்களில்




உரு 1.12 அம்பாறை ரஜகலை தொல்பொருள் ஆய்வின் போது பெறப்பட்ட ஹஸ்எபு கஹபண நாணயம்

இடது புறத்தில் நாணயமும் வலது புறத்தில் அதன் மாதிரி உருவும் காணப்படுகின்றன. ஹஸ்எபு கஹபண நாணயம் 2000 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் முதலில் பாவனையில் இருந்த நாணயம் ஒன்றாகும். வெள்ளியிலான இந்நாணயத்தில் மரம், யானை, சூரியன் எனும் குறியீடுகள் காணப்படுகின்றன. கி.மு முதலாம் நூற்றாண்டாகும் போது அநுராதபுரம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களிலும் பணப்புழக்கம் இருந்துள்ளதென்பது அம்பாறை பிரதேசத்திலிருந்து நாணயங்கள் கிடைக்கப் பெற்றதிலிருந்து தெளிவாகின்றது.

‘நிகம்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளன. வர்த்தகத்தால் பணத்தைச் சம்பாதித்துக் கொண்ட செல்வந்தர்கள் இந்நகரங்களில் வாழ்ந்து வந்தனர். இவர்களுள் உள்நாட்ட வரும் வெளிநாட்டவரும் இருந்துள்ளனர். வர்த்தகத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் வேறு குழுவினராகத் தனி அமைப்புகளை உருவாக்கிக் கொண்டு செயற்படத் தொடங்கினர். அவ்வர்த்தக அமைப்புகள் ‘**புக**’ என்று குறிப்பிடப்பட்டுள்ளன. வெளிநாட்டு வர்த்தகர்கள் ஒன்றுபட்டு செயற்பட்ட பல்வேறு தராதரங்களிலான வர்த்தக அமைப்புக்கள் இங்கு செயற் பட்டன. நானாதேசிகர், வலஞ்சியர், ஐந் நூற்றுவர் எனும் தென்னிந்திய வர்த்தக அமைப்புக்களை இதற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இந்த ஒவ்வொரு வணிக அமைப்பும் தமது தனித்தன்மைகளை வெளிப்படுத்திக் கொள்வதற்காக குறியீடு களைப் பயன்படுத்தியுள்ளன. இவை இலச்சினைகள் எனப்படும்.

நகரங்களுக்கு மேலதிகமாக வர்த்தகத்துடன் சம்பந்தப்பட்ட வணிகக் கிராமங்களும் இருந்து வந்தன. பட்டணகம் என்றோ பட் டுன்கம் என்றோ இவ்வணிகக் கிராமங்கள் குறிப்பிடப்பட்டன.

நகரங்களின் கடைகளில் பல்வேறுபட்ட பண்டங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டி ருந்தன. மட்பாத்திரங்கள், புடைவைகள், ஆபரணங்கள், உணவு, குடிபானங்கள் என்பவை அவற்றிற் சிலவாகும்.

மகாகமையில் இருந்துவந்த சுரநிமல எனும் மாமல்லன் (யோதயா) அநுராத புரத்தில் இருந்த கடை ஒன்றில் நறுமணம் பொருள் களை வாங்கிய விடயம் ஒன்று இலக்கிய மூலாதாரங்களில் இடம்பெற்றுள்ளது.

4 ஆம் உதய மன்னன் (கி.பி. 946 - 954) மகியங்கனை விகாரைக்கு வருகைதந்த போது, அதன் அருகில் உள்ள சொரபொர பிரதேசத்தில் இருந்த ஹோபிட்டிகம சந்தை யில் முறைகேடுகள் இடம் பெறுவதாக பிரதேசவாசிகள் மன்னரிடம் முறையீடு செய்தனர். அம்முறைகேடுகளை ஒழிப் பதற்காக அரசரால் தூண் கல்வெட்டு ஒன்று உருவாக்கப்பட்டது. அது பதுளைத் தூண் கல்வெட்டு என்று குறிப்பிடப்படுகிறது. அதில் காணப்படும் சந்தை ஒன்றின் நிர்வாகம் தொடர்பான சட்டதிட்டங்கள் சிலவருமாறு :

- சந்தைக்குக் கொண்டு வரப்படும் பொருள்களை இடைவழியில் சென்று கொள்வனவு செய்யக் கூடாது.
- அனுமதி பெறாத தராசு, படிகளைப் பயன்படுத்தக் கூடாது.
- வெற்றிலை, பாக்கு என்பவற்றைக் குறிப்பிட்ட மண்டபங்களினுள் வைத்து விற்க வேண்டும்.
- விற்பனைக்காக சந்தைக்கு கொண்டுவரப்படும் பொருள்களுக்கு அன்றி, சந்தையூடாக கொண்டு செல்லப்படும் பொருள்களுக்கு வரி அறவிடல் தவிர்க்கப்பட வேண்டும்.

செயற்பாடு

புராதன இலங்கையின் உள்நாட்டு வர்த்தகம் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

## வெளிநாட்டு வர்த்தகம்

இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருப்பதால், ஆரம்பகாலத்திலிருந்து வெளிநாடுகளுடன் மிக வெற்றிகரமான வர்த்தக உறவுகளைக் கொண்டிருந்தது. இந்தியா, சீனா, உரோம், பாரசீகம், அரேபியா, தென் கிழக்கு ஆசிய நாடுகள் என்பன இவற்றுள் அடங்கும்.

அக்காலத்தில் எமது நாட்டில் கிடைக்கப்பெற்ற யானைத் தந்தம், முத்து, இரத்தினக் கற்கள், வாசனைத் திரவியங்கள், மருந்து வகைகள், பெறுமதி வாய்ந்த மரங்கள், யானைகள் என்பவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இலங்கை இரத்தினத்துவீபம் என்று முற்காலத்தில் அறியப்பட்டிருந்ததற்குக் காரணம் எங்களது நாடு இரத்தினக் கற்களுக்குப் பிரசித்தி பெற்றிருந்தமையாலாகும்.

பீங்கான், பட்டுத்துணி, நறுமணப் பொருள்கள், குதிரைகள் போன்றவை வெளிநாடுகளில் இருந்து எமது நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டன.

இலங்கையில் ஜம்புகோளபட்டினம் (காங்கேசன் துறை), மாதோட்டம் (மன்னார்), கோகண்ண (திருகோணமலை), கொடவாய (அம்பாந்தோட்டை) எனும் துறைமுகங்கள் வெளிநாட்டு வியாபாரத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப்படும் பொருள்களும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் பொருள்களும் இத்துறைமுகங்களுக்கூடாகவே ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்டன.



உரு 1.13 இலங்கையில் கண்டறியப்பட்ட சீன மட்பாண்டங்கள்

தொல்பொருள் அகழ்வுகளின்மூலம் முற்காலத்தில் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் சிதைவுகள், வெளிநாட்டு நாணயங்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அநுராதபுர இராச்சியத்தை ஆண்ட பாதிகாபயமன்னன் ருவன்வெலிசாயவின் அலங்கார வேலைப்பாடுகளுக்குத் தேவையான கண்ணாடி மணிகளைப் பெற்றுக்கொள்வதற்காக உரோமாபுரிக்குத் தூதுவர்களை அனுப்பியதாக மூலாதாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



உரு 1.14 இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட புராதான சீன நாணயங்கள் சில

இவ்வர்த்தக நடவடிக்கைகள் கடல் மார்க்கமாகவே மேற்கொள்ளப்பட்டன. பொருள்களையும் மனிதர்களையும் கொண்டு செல்வதற்கு வெவ்வேறு அள

விலான கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன. இதனால் இந்தியா, பாரசீகம் போன்ற நாடுகளினுடைய கப்பல்கள் தொடர்ந்தும் எமது நாட்டிற்கு வந்து போனதாகத் தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாடிகளையும் படிவரிசைகளையும் கொண்ட உறுதிமிக்க இலங்கைக்குச் சொந்தமான கப்பல்கள் சீனத் துறை முகங்களில் காணப்பட்டதாக அந்நாட்டு மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வெளிநாட்டு வர்த்தகத்தை நிர்வகிப் பதற்கு பல்வேறு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களுள் துறைமுகங்களில் கடமை புரிந்த சுங்க அதிகாரிகள் தொடர்பான தகவல்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

துறைமுகங்களுக்கு வரும் கப்பல்களில் இருந்து தீர்வை அறவிடுவது இவர்களது பொறுப்பாகும். உதாரணமாக கொட வாய துறைமுகத்தில் அறவிடப்பட்ட சுங்கத்தீர்வைகள் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

செயற்பாடு

வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| வர்த்தகத் தொடர்பு நாடுகள் | இறக்குமதி செய்த பொருள்கள் | ஏற்றுமதி செய்த பொருள்கள் | இலங்கைத் துறை முகங்கள் |
|---|---|---|---|
| | | | |

## கலாசாரம்

இலங்கை பல்வேறு மக்கள் குழுக்கள் வாழ்கின்ற நாடாகும். சிங்கள, தமிழ், முஸ்லிம்களைக் கொண்ட மக்கள் குழுவினர் இங்கு வாழ்கின்றனர். இவர்கள் வெவ்வேறு கலாசாரங்களைக் கொண்டவர்களாவர். இதனால் எமது நாட்டில் பன்மைக் கலாசாரப் பண்புகளைக் காணக்கூடியதாய் உள்ளது. கலாசாரம் என்பதை, குறிப்பிட்ட ஒரு சமூகத்தில் வாழ்கின்ற மக்கள் குழுவினரின் நடத்தை நம்பிக்கைகள், சமூகப் பழக்கங்கள், ஆடை, ஆபரணங்கள், உணவுப் பழக்கங்கள், விழுமியங்கள், இரசனை ஆகிய பண்புகள் சகலவற்றினதும் ஒன்றிணைவாகக் குறிப்பிடலாம்.

தேவநம்பிய திஸ்ஸ மன்னனின் ஆட்சிக் காலத்தில் எமது நாட்டிற்குப் பௌத்தசமயம் அறிமுகமானதைத் தொடர்ந்து, புராதன சமூகத்தில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. இதனால் சமூகத்திற்கு ஒழுக்கமும் போதனையும் கிடைக்கப் பெற்றன. ஒருவருக்கு ஒருவர் உதவி உபகாரம் புரிந்து கொண்டு வாழும் அந்நியோன்னிய வாழ்வு முறை வளர்ச்சியுற்றது. தாதுகோபங்களை நிர்மாணித்தல், விகாரைகளைக் கட்டுதல், குளங்கள், அணைகள் கட்டுதல், தெருக்களை அமைத்தல் போன்ற பொதுப் பணிகளில் எல்லோரும் ஒன்றுபட்டு ஒற்றுமையாகச் செயற்பட்டுள்ளமை தெரிய வருகின்றது. அவ்வாறான குணாம்சங்கள் இன்றைய சமூகத்துக்குக்கூட, இறந்த காலத்தில் இருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய சிறந்த முன்மாதிரிகளாகும். அக்கால சமூகத்தில் காணப்பட்ட நல்ல பழக்க வழக்கங்கள் தெளிவாகத் தெரியும் சந்தர்ப்பங்கள் பலவற்றை உதாரணமாகக்

கொண்டு இந்நிலையை மேலும் பரிசீலித்துப்பாருங்கள்.

## அத்தம் முறை

உழைப்புக்கு உழைப்பைப் பரிமாறிக் கொள்வதே அத்தம் முறை என இலகுவாகப் பொருள் கொள்ளலாம். எங்கள் நாட்டில் வாழ்ந்த பெரும்பாலானோரின் வாழ்வாதாரமாகத் திகழ்ந்தது விவசாயமாகும். அதில் அறுவடை செய்தல் போன்ற செயற்பாடுகளுக்காகப் பெருந் தொகையான தொழிலாளர்கள் தேவைப் பட்டனர். இதற்காக விவசாயிகள் அண்டை அயலாரைத் தமது தேவைக்குப் பயன் படுத்திக் கொண்டனர். இதனால் ஒருவரோடு ஒருவர் நட்புறவுடனும் ஒத்துழைப்புடனும் உதவிபுரிந்து வாழும் பண்பு வளர்ச்சியுற்றது.

தமக்கு ஏனையோர் புரிந்த உதவிக்குப் பதிலுதவி புரியும் வண்ணம் விவசாயி, அடுத்தவர்களின் வேலைகளில் அதற்குச் சமனான உழைப்பால் உதவும் முறை அக் கால சமூகத்தில் காணப்பட்டது. சாதாரண மனிதர்கள் மட்டுமின்றி, முற்கால மன்னர்களும் விவசாய நடவடிக்கைகளில் பங்குபற்றியது தொடர்பான கதைகள் மூலாதாரங்களில் காணக்கிடக்கின்றன.

அநுராதபுரத்தை ஆண்ட மகாசூலி மகா திஸ்ஸ மன்னன் விவசாயியாக வேடம் பூண்டு வயல் ஒன்றில் அறுவடைக்குச் சென் றதாகக் கதை ஒன்றுள்ளது.

## திருமணம்

திருமணம் என்பது ஒவ்வொரு மனிதரதும் வாழ்க்கையிலும் விசேடமான ஒரு விடயமாகும். புராதன சமூகத்தில் திருமணம் என்பது மிகவும் கௌரவ மான ஒன்றாகக் கருதப்பட்டது. ஏனெனில் குடும்பம் என்கின்ற அமைப்பு ஒன்று உருவாவது திருமணத்தின் பின்னரேயாகும்.

புராதன காலத்தில் தமது குடும்பத்திற்கும் குலத்திற்கும் பொருத்தமான விவாகம் ஒன்றைத் தமது பிள்ளைகளுக்குச் செய்து வைப்பதற்குப் பெற்றோர் மிகுந்த முயற்சியுடன் செயற்பட்டனர்.

பெற்றோரின் விருப்புடனும் ஆசீர்வாதத்துடனும் சம்பிரதாயங்களைப் பேணி, திருமண உறவில் பிரவேசிப்பது புராதன சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முறையாகும்.

ஒழுக்கமாகவும் பண்பாகவும் வளர்ந்த பிள்ளைகள் பெரியவர்களின் பாராட்டுதலுக்கு உரியவர்களாயினர். இன்று போல் அலங்கார ஆடம்பரங்கள் இல்லா விட்டாலும் ஆதிகாலத் திருமண முறைகள் எளிமையான பொருள் பொதிந்த கௌரவமான முறையில் மேற் கொள்ளப்பட்டு வந்துள்ளன.

பெற்றோரின் பாதுகாப்புடன் புதல்வியர் வளர்க்கப்பட்டு ஆளாக்கப்பட்டனர். உணவு சமைத்தல், வீட்டை அழகாகவும் சுத்தமாகவும் வைத்திருத்தல் போன்றவற்றில் அவர்கள் நல்லதொரு பயிற்சியைப்பெற வேண்டியவர்களாய் இருந்தனர்.

சாலிய இளவரசனின் மனைவியான அசோகமாலா சுவையான உணவு சமைத்ததாக சத்தர்மாலங்காரவில் குறிப் பிடப்பட்டுள்ளது.

சமையற் கலையில் சிறப்புப் பெற்ற

பெண்கள் 'மதுபாச்சிகா' என்று மூலா தாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

முற்காலத்தில் பிள்ளைகள், தமது குடும் பத்தை வளமூட்டுவதற்கும் நல்ல முறை யில் நடத்திச் செல்வதற்கும் பெற்றோ ரின் கண்காணிப்பில் பயிற்சிகளையும் பழக்கவழக்கங்களையும் பெற்றமை எமக்கு ஒரு முன்னுதாரணமாகும்.

## மரணச்சடங்கு

புராதன சமூகத்தில் மரணச் சடங்குகளுக் காக வெவ்வேறு மக்கள் குழுவினருக்கு என்று வெவ்வேறு மயானங்கள் காணப் பட்டுள்ளன. இறுதிக் கிரியைகளை மேற்கொள்ளுதல், பின்னர் அவற்றின் அஸ்தியைப் புதைத்தல், சடலங்களைக் காட்டிலுள்ள கல்லறைகளில் வைத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

பண்டுகாபய மன்னனின் காலத்தில் பிணங் களை எடுத்துச் செல்வதற்கு புலையர்கள் 150 பேர் நியமிக்கப்பட்டிருந்தனர். சூத்திரர்களுக்கு என்று தனியான மயா னங்கள் இருந்ததாகவும் மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது. பிணத்தைத் துணி ஒன்றினால் சுற்றி, பாடை ஒன்றில் வைத்து, நான்கு பேர் தூக்கிச் சென்றதாக சில மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

யாராவது ஒருவர் மரணமுற்றால் அவரின் உறவினர்கள், அக்குடும்பத்திற்கு அடுத்துத் தலைமைதாங்க இருப்பவரிடம் பணம், பண்டங்களை அன்பளிப்பாக வழங்கி யுள்ளனர். பொருளாதார வகையில் ஏதாவது கஷ்டங்கள் இருந்தால் அதற்குப்பரிகாரமாக இந்நற்செயலைச் செய்திருக்கலாம். உற வினர், அயலவர்களினது ஆபத்திலோ துன்பத்திலோ தயங்காது பங்கேற்று உதவு வதற்கு முன்வருதல் புராதன மக்களிடையே காணப்பட்ட உயர்ந்த பண்பாகும்.

மரண ஊர்வலங்கள் வழிபாட்டுத் தலங்களின் முன்னால் செல்கையில், வாத்தியங்கள் முழங்காது அமைதியாகச் செல்லுதல் அக்காலத்தில் காணப்பட்ட ஒரு சிறந்த பழக்கமாகும்.

## பழக்க வழக்கங்களும் பண்பாடும்

நீண்ட வரலாற்றை உடைய எமது சமூகத்தின் பழக்க வழக்கங்கள், பண்பாடுகள் மிகவும் செழுமையானவையாகும். தமது கடமைப் பொறுப்புகளில் அதி கவனம் செலுத்திய அக்கால மக்கள், மூத்தோரை மதித்தல், அவர்களை கௌரவித்தல் என்பவற்றைத் தவறாது மேற்கொண்டு வந்தனர். சாதாரண மனிதர்கள் மட்டுமல்லாது மன்னர் கூட தமது தாயாரைக் கவனித்துக் கொண்ட முறை பற்றிய உதாரணத்தை மூலாதாரத்தில் இருந்து அறிந்து கொள்ளக் கூடியதாயுள்ளது. அநுராதபுர மன்னரான எட்டாம் அக்கபோதி தனது தாயாருக்குப் புரிந்த பணிவிடைகள் பற்றி மகாவம் சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இரவும் பகலும் தனது தாய்க்குப் பணி விடை செய்யக்கிடைத்தமையால் மன்னர் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருந்தார். அதிகாலையில் இருந்தே பணிவிடை தொடங்கி, தலைக்கு எண்ணெய் தடவி, முடியைச் சீவி, வியர்வையைத் துடைத்து, நறுமணப்பொருள்களைத் தடவி, நகத்தைக் கத்தரித்து, விரல்களைச் சுத்திகரித்து, அவரை ஆறுதல் படுத்தி உள்ளார். பின்னர் சௌகரியமான ஆடைகளை அணிவித்து விட்டு, தனது கைகளாலேயே தாயாரின்

அழுக்குத் துணிகளைக் கழுவியதாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கால மக்கள் சமய போதனைகளுக்கு அமைவாக தார்மீக வாழ்க்கையை மேற் கொண்டு வந்தோராவர். தமது தகுதிக்கு ஏற்ற முறையில் தானதர்மங்களைப் புரிந்து புண்ணியம் பெற்றுக் கொண்டதுடன், நல்ல குடிமக்களாக வாழ்ந்தோர் என்று புராதன காலத் தகவல்களில் இருந்து தெரிய வருகிறது.

செயற்பாடு

''புராதன சமூகத்தில் இருந்து இன் றைய சமூகம் பெற்றுக்கொள்ளக் கூடிய முன்மாதிரிகள்'' எனும் தலைப்பில் கட்டுரை ஒன்று வரைக.

சாராம்சம்

- விவசாயம் கைத்தொழில், வர்த்தகம் என்பன புராதான மக்களின் பிரதான சீவனோபாயமாகும்.
- சேனைப்பயிர்செய்கை ஆதிகாலத் திலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வந்த முதற் பயிர்ச்செய்கை முறை யாகக் கருதப்படுகிறது. இப்பயிர்ச் செய்கையின் கீழ், மக்களின் வாழ்க் கைக்குத் தேவையான தானியங்கள், கிழங்கு வகைகள், மரக்கறிகள், பழ வகைகள் என்பன உற்பத்தி செய்து கொள்ளப்பட்டன.
- நெல் சேனைப் பயிர்ச் செய்கையாக மேற் கொள்ளப்பட்டு வந்தாலும் பிற்காலத்தில் சனத்தொகைப் பெருக்க முறவே பாரிய அளவிலான வயற்செய்கை ஆரம்பமாகியது.
- இரு போகங்களுக்கு நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டாலும் ஆதியிலிருந்தே சிறு, பெரும் போகங்களுடன் இடைப் போகமும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.
- உணவு வீண் விரயத்தைத் தவிர்த்துக் கொள்வதற்காகவும் எதிர் காலத்திற்காக அவற்றைச் சேமித்து வைத்துக் கொள்வதற்கும் மக்கள் பழக்கப் பட்டிருந்தார்கள். நெற்குதிர் இதற்குச் சிறந்த ஓர் உதாரணமாகும்.
- கைத்தொழில் துறையில் சிறப் புத்தேர்ச்சி பெற்றிருந்தோரைக் கொண்ட தொழில் நுட்பவியலாளர் குழுக்கள் காணப்பட்டமை.
- இலங்கை ஆரம்ப காலத்தில் இருந்தே இந்தியா, அராபியா, சீனா, பாரசீகம், கிரேக்கம் மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளுடன் முன்னேற்றகரமான வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்தது.
- முற்காலத்தில் வாழ்ந்த மக்கள், பெற்றோரை அனுசரித்தல் போன்ற உயர் குணாம்சங்களையும் பழக்க வழக்கங்களையும் தவறாது கைக் கொண்டு அந்நியோன்னியமான உதவி ஒத்தாசையுடன் வாழ்ந்த வர்களாவர்.

# 2 எமது கீர்த்திமிக்க அரசர்கள்

**அறிமுகம்**

அநுராதபுர காலத்தின் முற்பகுதியில் எமது நாட்டிலிருந்த சிறந்த ஆட்சியாளர்களான பண்டுகாபயன், தேவநம்பிய தீசன், துட்டகைமுனு, வலகம்பா, வசபன், மகாசேனன், தாதுசேனன் போன்ற அரசர்கள் பற்றி தரம் 6 இல் நீர் கற்றுள்ளீர். அநுராதபுர இராச்சிய இறுதிக் காலத்திலும், பொலன்னறுவைக் காலத்திலும் எமது நாட்டின் நலன்கருதி மிகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய மன்னர்கள் சிலரைப் பற்றி இந்தப் பாடத்தில் கற்கப்போகின்றீர்கள்.

## மானவர்ம மன்னன் ஆட்சிக்கு வருமுன்னரான அரசியல் நிலை

வசபன் இலம்பகர்ண வம்சத்தைச் சேர்ந்த ஆட்சியாளனாவான். தாதுசேனன் மௌரிய வம்சத்தைச் சேர்ந்தவனாவான். அநுராதபுர காலத்தில் இலம்பகர்ண, மௌரிய வம்ச மன்னர்களே நீண்ட காலம் இந்நாட்டை ஆட்சி செய்தனர். எனினும் சில சந்தர்ப்பங்களில் அரசியல் ஆதிக்கம் பெறுவதற்கு இந்த இரு வம்சங்களுக்கிடையே மோதல்கள் ஏற்பட்டன. மானவர்மன் அரசனாவதற்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரும் இலம்பகர்ண மௌரிய வம்சங்களுக்கிடையே அரசியல் மோதல்கள் ஏற்பட்டன. அக்கால கட்டத்தில் இந்நாட்டு அரசியலில் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்த சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

- உள்நாட்டு மோதல்கள் காரணமாக நாட்டில் நிலையான ஆட்சி இன்மை
- போர் காரணமாக நாட்டின் செல்வம் பெருமளவில் அழிவுற்றமை.
- ஆட்சி அதிகாரத்தைப் பெறும் பொருட்டு, இலம்பகர்ண, மௌரிய வம்சத் தலைவர்கள் தென் இந்தியப் படையை இங்கு வரவழைத்தமை.
- அரசியல் மோதல்கள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றமை.

## மானவர்ம மன்னன் (கி. பி. 684 - 718)

மானவர்ம மன்னன் இரண்டாம் காசியப்ப மன்னனின் மகனாவான். இரண்டாம் காசியப்ப மன்னன் கி.பி 650 ஆம் ஆண்டளவில் ஆட்சிக்கு வந்து ஒன்பது ஆண்டுகள் ஆட்சி செய்தான். நோயின் காரணமாக இவன் மரணமடைந்த போது மானவர்மன் சிறுவனாக இருந்தான். இரண்டாம் காசியப்ப மன்னனின் மரணத்தின் பின்னர் ஆட்சியைப் பெறும் பொருட்டு மோதல்கள் ஏற்பட்டன. இந்த மோதல்களில் ஈடுபடாத மானவர்மன் பாதுகாப்பின் பொருட்டு ஒளிந்து வாழ்ந்தான். அவ்வேளையில் ஆட்சியாளனாக இருந்த இரண்டாம் தாடோபதீசன், மானவர்மனைத் தேடிக் கொண்டிருந்ததால் அவன் இந்தியாவுக்குத் தப்பியோடினான்.

இந்தியாவில் பல்லவ அரசுக்குத் தப்பிச் சென்ற மானவர்மன் முதலாம் நரசிங்கவர்மன் என்ற பல்லவ மன்னனுக்கு விசுவாசமாகப் பணியாற்றினான். மானவர்மன் பல்லவ அரசனின் போர்களில் உதவியதால்

மானவர்மன் மீது பல்லவ மன்னன் நல்லெண்ணம் வைத்திருந்தான். அவனுக்கு நன்றிக்கடன் செலுத்தும் பொருட்டுப் படை ஒன்றைக் கொடுத்து இலங்கைக்குச் சென்று ஆட்சியைக் கைப்பற்ற உதவினான். அந்தப் படையின் உதவியுடன் மானவர்மன் இலங்கைக்கு வந்து இரண்டாவது தாடோபதீசனுக்கு எதிராகப் போர் தொடுத்தான். எனினும் போர் செய்து கொண்டிருக்கும் போது இந்தியாவிலிருந்த பல்லவ மன்னன் நோயுற்றதால் உதவிக்கு வந்த படை இந்தியாவுக்குத் திரும்பியது. இதனால் போரை இடை நிறுத்தி விட்டுப் பாதுகாப்புக்கோரி மானவர்மன் மீண்டும் இந்தியாவுக்கு சென்றான். இவ்வாறு மீண்டும் இந்தியா சென்ற மானவர்மன் தனது குறிக்கோளை நிறைவேற்ற உதவிப் படையொன்றைப் பெறும் பொருட்டு மேலும் 20 ஆண்டுகள் பல்லவ மன்னனுக்குப் பணி புரிந்தான்.

அக்காலத்தில் பல்லவ மன்னனாக இருந்த இரண்டாம் நரசிங்கவர்மன் மீண்டும் படையைக் கொடுத்ததால் அந்தப் படையுடன் இலங்கைக்கு வந்த மானவர்மன் இந்நாட்டின் ஆட்சியாளனாக இருந்த ஹத்ததாட மன்னனைத் தோற் கடித்து கி.பி 684 ஆம் ஆண்டில் ஆட்சி யைக் கைப்பற்றினான். மானவர்மன் அரசனானது இந்நாட்டின் வரலாற்றில் முக்கிய நிகழ்வாகும். குறிக்கோளுடனும், பொறுமையுடனும் செயற்பட்டுத் தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்ட மையை அவனது வாழ்விலிருந்து காணக் கூடியதாக உள்ளது.

மானவர்மன் அரசனாவதற்கு முன்னர் ஐம்பது ஆண்டுகள் வரை நாட்டில் உள்நாட்டுப் பூசல்கள் இருந்தமையால் அரசியல், பொருளாதாரம் என்பன சீர்குலைந்து காணப்பட்டன. இருபது ஆண்டுகளுக்கு மேலாகப் பல்லவ அரசில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதால் மானவர்மனால் தனது வாழ்வின் நடுத்தர வயதிலேயே அர சாட்சியைப் பெற முடிந்தது. எனினும் 35 ஆண்டுகள் வரையிலான நீண்ட காலம் ஆட்சி செய்ய இவனால் முடிந்தது. இதனால் மீண்டும் நாட்டில் நிலையான ஆட்சி தோன்றியது. இவனது ஆட்சியின் போது நாட்டின் மரபு ரீதியான நிர்வாக முறை ஏற்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. அரச உரிமை தொடர்பான மரபு முறை ஆரம்பமானது. மானவர்மனின் பின்னர் அவனது பிள்ளைகள் முறையே ஆட்சிக்கு வந்தனர். மானவர்ம வம்சம் அநுராதபுர காலத்தின் இறுதிவரை 300 ஆண்டுகள் வரை நிலவியது.


## முதலாம் சேனன் (கி.பி. 833 - 853)

முதலாம் சேனன் மானவர்ம வம்சத்தைச் சேர்ந்த இரண்டாம் தப்புல மன்னனின் மகனாவான். இரண்டாம் தப்புல மன்னன் 16 ஆண்டுகள் ஆட்சி செய்தான். அவனுக்குப் பின் அவனது மகனான 9 ஆம் அக்போதி ஆட்சிக்கு வந்தான். அவனது ஆட்சிக் காலம் 3 வருடங்களாகும். அவனுக் குப் பின்னர் அவனது சகோதரனான முதலாம் சேனன் கி.பி 833 ஆம் ஆண்டு அரசனானான். அவனது ஆட்சிக் காலம் 20 வருடங்களாகும். அவனது ஆட்சியின் முற்பகுதியில் இலங்கை பாண்டியரால் ஆக்கிரமிக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் தென்னிந்தியாவில் பாண்டியரின் ஆதிக்கம் மேலோங்கி இருந்தது. ***ஸ்ரீ மாற ஸ்ரீ***

**வல்லபன்** என்ற பாண்டிய மன்னன் பெரும் சேனையுடன் இலங்கையை ஆக்கிரமித்த போது 1 ஆம் சேனனின் படை தோல்வியடைந்தது. சிங்கள மன்னருக்காக யுத்த களத்திற்கு சென்ற மன்னனின் சகோதரனான மகிந்தனும், இளவரசனான காசியப்பனும் போரில் இறந்தனர். தனது படை தோல்வியைத் தழுவியதும், 1 ஆம் சேனன் பாதுகாப்புக் கருதி மலையரட்டைக்குத் தப்பியோடினான்.

அநுராதபுர நகரினுள் நுழைந்த பாண்டியப்படை அந்நகரை முற்றிலும் சூறையாடியது. பின்னர் பாண்டிய மன்னனுக்கும், 1 ஆம் சேன மன்னனுக்கும் இடையே சமாதான உடன்படிக்கை செய்ததன் விளைவாகப் பாண்டியர்கள் சேன மன்னனுக்கு மீண்டும் அரசை ஒப்படைத்து விட்டு இந்தியா சென்றனர். இந்த ஆக்கிரமிப்பின் நோக்கம் நாட்டைக் கைப்பற்றுவதைவிட பெறுமதியான செல்வங்களைக் கொள்ளையடிப்பதேயாகும். தலைநகருக்கு மீண்ட 1 ஆம் சேன மன்னன் ஆக்கிரமிப்பாளர்களால் சிதைவுற்ற பிரதேசங்களை மீண்டும் நன்னிலைக்குக் கொண்டுவர முயன்றான். இவை தவிர்ந்த ரிட்டிகல ஆராமை, ஜேத்தவனராம, அபயகிரி ஆகிய விகாரைகளுக்கு அருகில் புதிய கட்டிடங்கள் பலவற்றை அமைத்தான்.

மன்னனின் சகோதரர்கள் இருவர் பாண்டியனுடனான போரில் மரணித்ததோடு மற்றொரு சகோதரனாகிய உதயன் இளவரசனாக நியமிக்கப்பட்டான். எனினும் இளவரசன் உதயன் குறுகிய காலத்தில் நோயினால் இறந்தான். இதனால் மேல் குறிப்பிட்ட போரில் இறந்து போன காசியப்ப இளவரசனின் மூத்த புதல்வனாகிய சேனன் இளவரசன் யுவராஜாவாக நியமிக்கப்பட்டு உருகுணைப் பிரதேசத்தின் ஆட்சி அதிகாரத்தைப் பொறுப்பேற்றான்.



உரு 2.1 ரிடிகலை பாதை

## இரண்டாம் சேனன் (கி.பி. 853 - 887)

இரண்டாம் சேனன் என்பவன் முதலாம் சேன மன்னனின் சகோதரனாகிய பாண்டிய ஆக்கிரமிப்பின் போது உயிரிழந்த காசியப்ப இளவரசனின் மகனாவான். மன்னன் முதலாம் சேனனின் மரணத்தின் பின் அக்காலத்தில் யுவராஜனாக இருந்த இரண்டாம் சேனன் மன்னனாக முடிசூடினான். அவனின் ஆட்சிக்காலமான 35 (கி.பி. 853 - 887) வருடங்களில் நாட்டில் சமாதானம் நிலவியது. அரசியல் ரீதியாக நிலவிய அமைதியான சூழ்நிலையின் காரணமாக நாட்டில் பழைய செழிப்பான நிலையை மீண்டும் ஏற்படுத்தவும் பொருளாதார மற்றும் புத்தசாசனத்

துறையில் பாரிய பணிகளை ஆற்றவும் மன்னன் இரண்டாம் சேனனுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

முதலாம் சேனனின் காலத்தில் பகைவர் களின் ஆக்கிரமிப்பினால் அழிந்து போன அனைத்தையும் மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கை இரண்டாம் சேன மன்னனால் முழுமையாக நிறைவேற்றப்பட்டது. புத்தசாசனத்திற்காக ஆற்றிய பணிகளுக்கு மேலதிகமாக மிகிந்தலையில் வைத்திய மனையைத் தாபித்தமை, மகாவலி கங்கையில் மணிமேகலா (மினிப்பே) எனும் அணைக் கட்டை புனரமைத்தமை, மின்னேரியாக் குளத்தில் மதகு ஒன்றைக் கட்டியமை என்பன மன்னன் இரண்டாம் சேனன் மக்களுக்காற்றிய பணிகளுக்குச் சிறந்த உதாரணங்களாகும்.

இரண்டாம் சேனன் பாண்டிய இராச் சியத்தை ஆக்கிரமித்தது அவனது அர சாட்சிக் காலத்தில் முக்கிய நிகழ்வாகும். முதலாம் சேனனின் காலத்தில் பாண்டியர் இந்நாட்டை ஆக்கிரமித்துப் பெறுமதி யான சொத்துக்களை அபகரித்துச் சென்றமை குறித்து மன்னனின் மனதில் வேதனை இருந்திருக்க வேண்டும். அதனால் ஏற்பட்ட அபகீர்த்தியைப்போக்கி பாண்டியர் அபகரித்துச் சென்ற சொத்துக் களை மீண்டும் இந் நாட்டிற்குக் கொண்டு வர மன்னன் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந் தான். பாண்டிய இளவரசனாகிய இரண்டாம் வரகுணவர்மன் பாண்டிய சிம்மாசன உரிமைப் போராட்டத்தில் தனக்கு உதவும்படி கேட்டு இந்நாட்டிற்கு வந்தமையால் அவனது உதவியோடு பாண்டிய நாட்டை ஆக்கிரமிப்பதற்கு இரண்டாம் சேனனுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.



உரு 2.2 மிகிந்தலை புராதன வைத்தியசாலையின் இடிபாடுகள்

இரண்டாம் சேனன் தனது திறமையான தளபதியாகிய குட்டக எனும் தளபதியின் தலைமையில் பலம் வாய்ந்த படையொன்றைப் பாண்டிய நாட்டை ஆக்கிரமிப்பதற்காக அனுப்பினான். பாண்டியப் படைகளுக்கும் இலங்கைப் படைகளுக்கும் இடையே ஏற்பட்ட போரில் பாண்டியப் படையினர் தோல்வி அடைந்தனர். பாண்டியரின் தலைநகராகிய மதுரையைச் சுற்றி வளைத்து நடத்திய தாக்குதலில் ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் எனும் பாண்டிய மன்னன் மரணமடைந்தான். அதன் பின் வரகுணவர்மன் இலங்கைப் படையினரால் பாண்டிய நாட்டின் சிம்மாசனத்திற்கு நியமிக்கப்பட்டான். இதன்போது பாண்டியன் இலங்கையில் இருந்து அபகரித்துச் சென்ற பொருள்கள் மாத்திரமல்லாது பாண்டியனின் சொத்துக் களையும் எடுத்துக் கொண்டு இலங்கைப் படையினர் வெற்றியோடு நாடு திரும்பினர். இரண்டாம் சேனன் பெற்ற இந்த வெற்றி குறித்து இந்நாட்டின் சில கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அநுராதபுரப் பிரதேசத்தில் அமைந்துள்ள இரிபின்னியாவ எனும் இடத்தில் கிடைத்த கல்வெட்டில் குட்டா செனவிரதாணன் என குறிப்பிடப்பட்டுள்ளது. பாண்டிய ஆக்கிரமிப்பை நடத்திய குட்டக தளபதியையே இது குறிக்கும் என்பது தெளிவு.

## அரசாட்சி அமைப்பு முறை

### மத்திய ஆட்சி

மன்னனும் மன்னனுக்கு உதவும் அதிகாரிகள் குழுவும் நாடு முழுவதும் தமது அதிகாரத்திற்குக் கட்டுப்படும் விதத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் ஆட்சி முறையையே மத்திய ஆட்சி எனக் கருதலாம். மன்னன் மத்திய ஆட்சியின் தலைவராவார். மன்னன் ஒருவனுக்குப் பின் அடுத்த மன்னன் அரசாட்சிக்கு வந்தது அரசுரிமைக்குரிய பாரம்பரிய முறையிலேயே ஆகும். அநுராதபுர காலத்தில் பெரும்பாலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த அரசுரிமை முறை இரண்டாகும்.

- தந்தைக்குப் பின் மகனுக்கு அரசுரிமை கிடைத்தல்

  உதாரணம் : பண்டுகாபய மன்னனுக்குப் பின் அவரின் மகனாகிய மூத்த சிவன் அரசுரிமையைப் பெற்றமை.

- மூத்த சகோதரனுக்குப் பின் இளைய சகோதரன் அரசுரிமையைப் பெறல்

  உதாரணம் : துட்டகைமுனு மன்னனுக்குப் பின் அவரின் சகோதரனாகிய சத்தாதிஸ்ஸன் ஆட்சி உரிமையைப் பெறல்.

எதிர்கால ஆட்சி உரிமை உள்ள இளவரசர்களுக்கு பிள்ளைப்பருவத்தில் உயர்ந்த கல்வியைப் பெற்றுக் கொடுப்பதில் மன்னர்கள் அதிக அக்கறை செலுத்தினர். மொழியறிவு மற்றும் ஆவணங்கள் குறித்த பாரம்பரிய கல்வியை அதிகமாகப் பௌத்த பிக்குகளே வழங்கினர். ஆட்சியாளர் ஒருவருக்கு அக்காலத்தில் அவசியமான வில்வித்தை, வாட்போர் என்பவற்றுக்கு அவ்வவ்துறை நிபுணர்களின் கீழ் பயிற்சி வழங்கப்பட்டது.

புதிய மன்னர் ஒருவர் அரசுரிமை பெற்ற பின்னர் பட்டாபிஷேகம் செய்வது வழக்கமாக இருந்தது. பட்டாபிஷேகம் என்பது மன்னன் தனது பொறுப்புகளைச்

சட்டரீதியாகப் பொறுப்பெடுக்கும் ஒரு சந்தர்ப்பமாகும்.

நாட்டில் மத்திய ஆட்சியின் உயர் நிர்வாகி மன்னன் என்பதால் அவருக்கே உரித்தான கடமைகள் பல உள்ளன. கீழ்க் குறிப்பிட் டுள்ள செயற்பாடுகள் அத்தகையவற்றிற்கு சில உதாரணங்களாகும்.

- நாட்டில் சட்டத்தையும் அமைதி யையும் பேணல்.
- உள்நாட்டு, வெளிநாட்டு பகை வர்களின் தொல்லைகளிலிருந்து நாட்டைப் பாதுகாத்தல்.
- மத்திய ஆட்சிக்கும் பிரதேச நிர் வாகத்திற்கும் உரிய அதிகாரிகளை நியமித்தல்.
- நாட்டின் பொருளாதார நடவடிக் கைகளை மேம்படுத்தல் மற்றும் வரிவிதித்தல்.
- நீதிசார் நடவடிக்கைகளை மேற் கொள்ளல்.

அரசாட்சி நடவடிக்கையின் போது மன் னனுக்கு உதவும் அதிகாரிகள் பலர் இருந்தனர். யுவராஜன் (எதிர்கால அரச னாகும் உரிமை பெற்றவன்) சேனாதிபதி, பொருளாளர், ஆவணப்படுத்துபவர் (ஆவண நடவடிக்கைக்கு பொறுப்பான பிரதானி) என்போர் அத்தகைய அதிகாரி களில் முக்கியமானவர்கள். மன்னனுக்கு உதவும் இத்தகைய அதிகாரிகளைக் கொண்ட அரச சபை ஒன்றிருந்தது. நாட்டின் முக்கிய பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட அரசனின் தலைமையில் அரச சபை கூடும். அநுராதபுர காலத்தில் சில கல்வெட்டுகளில் **அதெகவரு** எனும் அதிகாரிகள் குறித்து குறிப்பிடப் பட்டுள்ளன. இது சமஸ்கிருத மொழி யில் பணிப்பாளர் என்ற பதவிக்கு சமனா னதாகும்.

**அஷ அதெக** குதிரை பரிபாலகர் (குதிரைகள் குறித்த விடயங்களுக்கான பிரதானி).

**அதி அதிக** யானைப் பரிபாலகர் (யானைகள் குறித்த விடயங்களுக்கான பிரதானி).

மேல் குறிப்பிட்ட உதாரணங்களில் உள்ள அதெக, அதிக ஆகிய அதிகாரிகள் அவ்வவ் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரதானிகள் எனக் கருதலாம்.

மானவர்மன் ஆட்சிக்கு வருவதற்கு முன் நாட்டின் உள்நாட்டு மோதல்கள் இடம்பெற்ற வேளையில் பாரம்பரிய அரச உரிமையைக் கவனத்திற்கொள்ளாது சிலர் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுள்ளனர். எனினும் மானவர்ம அரச வம்சம் ஆட்சி அதிகாரத்தில் இருந்த காலத்தில் பண்டைய அரசுரிமை முறை மீண்டும் வழமைபோல் நடைமுறைக்கு வந்தது. இந்தக் காலத்தில் சில அரசர்கள் தமது கல்வெட்டின் மீது தாம் ஏப்பா (ஆதிபாத) மாப்பா (மஹாதிபாத) ஆகிய பதவிகளை வகித்து வரிசைக்கிரமப்படி மன்னனாக வந்ததைக் குறிப்பிட்டுள்ளனர். ஏப்பா, மாப்பா போன்ற உயர் பதவிகளுக்கு அரச குடும்ப இளவரசர்களே நியமிக்கப்பட்டனர். இதனால் அந்தப் பதவிகளை வகித்து எதிர்கால அரசாட்சிக்குத் தேவையான பயிற்சிகளை உரிய முறையில் பெற்றுக் கொண்டமையை அறியலாம்.

## பிரதேச ஆட்சி

அநுராதபுர காலத்தில் அரசு முறையாக அமைக்கப்பட்ட நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மன்னனின் தலைமையில் நடத்தப்பட்ட ஆட்சிக்கு மேலதிகமாக அந்தந்தப் பிரதேசங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளின் மூலம் பிரதேச ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது. நாட்டின் தலைநகராகிய அநுராதபுரத்தை சூழவுள்ள பிரதேசங்கள் வடக்கு, தெற்கு, கிழக்கு மேற்கு என திசைகளுக்கு ஏற்ப பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக 'ரட' அல்லது 'ரட்த' என அழைக்கப்பட்ட ஆட்சிப்பகுதி இருந்தது. இவற்றின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்ட அதிகாரிகள் **ரட்லது** அல்லது **ரட்டலத்தன்** என அழைக்கப்பட்டனர்.

தலைநகரில் இருந்து தொலைவில் அமைந்திருந்த பிரதேசங்களான மலைய ரட்டை, மாயரட்டை, உருகுணை என்பன வெவ்வேறு ஆட்சி அதிகாரிகளின் கீழ் இருந்தன. நாட்டின் மிகச்சிறிய நிர்வாக அலகு கிராமம் ஆகும். அநுராதபுர யுகத்தின் ஆரம்ப காலத்தில் கிராமத்தை நிர்வகித்த பிரிவினர் கமிக என அழைக்கப்பட்டனர். அநுராதபுர யுகத்தின் பின்னரைக் காலத்தில் கிராமத்தை நிர்வகித்தோர் **'கம்லத்தன்'** என அழைக்கப்பட்டனர்.

## அரசகொள்கையும் சமூக நலன்புரி நடவடிக்கைகளும்

அநுராதபுரத்தில் அரச கொள்கையை செயற்படுத்தும் போது கீழ் குறிப்பிட்ட விடயங்கள் குறித்து மன்னர்கள் விசேட கவனம் செலுத்தினர்.

- நாட்டின் பாதுகாப்பைத் திட்டமிடல்
- சட்டத்தையும் சமாதானத்தையும் பேணுதல்
- பொருளாதார மேம்பாட்டை உரு வாக்குதல்
- புத்தசாசன முன்னேற்றத்திற்கான நட வடிக்கைகளை மேற்கொள்ளல்.

மானவர்ம வம்சம் ஆட்சியில் இருக்கும் காலத்தில் இந்த அடிப்படைக் கொள்கை களை அப்படியே நடைமுறைப்படுத்தி யதாக அறியமுடிகிறது.

## நாட்டின் பாதுகாப்பைத் திட்டமிடல்

நாட்டைப் பாதுகாக்கும் போது மன்னனின் சேனாதிபதி, படையினர் மற்றும் பிரதேச ஆட்சியாளர்கள் மன்னனுக்கு உதவினர். அநுராதபுர காலத்தின் முன்னரைப் பகுதியில் மன்னனின் படைகள் யானை, குதிரை, தேர்ப்படை மற்றும் காலாட்படை என நான்கு வகை சேனைகளைக் கொண்டிருந்தன. மானவர்ம வம்சத் தின் ஆட்சியில் மன்னனுக்குப் பலம் வாய்ந்த படையொன்று இருந்ததோடு தென் இந்தியப் படை வீரர்களைக் கொண்ட சம்பளம் பெற்ற இராணுவக் குழுவொன்றும் அவர்கள் மத்தியில் இருந்ததாக அறிய முடிகிறது.

இலங்கை மன்னர்கள் நகர நிர்மாணத்தின் போது அவற்றின் பாதுகாப்புக் குறித்து கவனம் செலுத்தினர். அநுராதபுர நகரம் ஆரம்ப காலந்தொட்டே நகரம், மதில், வாயில் கதவு என்பனவற்றுடனும் முழுமை யான பாதுகாப்பு அமைப்புடனும் கூடிய விதத்தில் கட்டி எழுப்பப்பட்டிருந்தது.

உள்நாட்டு வெளிநாட்டு பகைவர்களின் தொல்லைகளுக்கு முகம் கொடுக்கும் போது கோட்டைகளை நிர்மாணிப்பதும் பாதுகாப்பு இடங்களில் காவலரண்களை அமைப்பதும் பாதுகாப்பு உபாயங்களாக இருந்தன.

## சட்டத்தையும் சமாதானத்தையும் பேணல்

அநுராதபுரயுகத்தில் நாட்டில் சிறந்த நீதித்துறைக் கட்டமைப்புகளை நடைமுறைப்படுத்தியதாகத் தெரிகிறது. மானவர்ம அரச வம்சத்தினர் ஆட்சியில் இருந்த காலத்திற்குரிய இந்த சட்டதிட்டங் களைக் கூறும் கல்வெட்டுக்கள் பல கிடைத்துள்ளன. அந்த சட்டத் தொகுதிக்குள்,

- காணி உரிமை குறித்த சட்டம்
- வர்த்தகம் சம்பந்தமான சட்டம்
- விவசாயம் மற்றும் வரி சம்பந்தமான சட்டங்கள்
- குற்றவியல் குறித்த சட்டம்

எனப் பலவகைச் சட்டங்கள் இருந்தன.

கி.பி 10 ஆம் நூற்றாண்டிற்குரிய வேவெல் கெட்டிய கல்வெட்டு அக்காலத்தில் நடைமுறையில் இருந்த சட்டதிட்டங்கள் குறித்துக் குறிப்பிடும் மிகமுக்கிய ஆவணமாகும். பத்துக்கிராம நிர்வாகம் மற்றும் குற்றவழக்குகளைத் தீர்க்க அதற்குரித்தான சட்டங்கள்பல அந்தக் கல்வெட்டில் விபரிக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் இவ்வாறான கல்வெட்டுகள் பல கண்டுபிடிக்கப்பட்டமையால் அரசன் சட்டதிட்டங்களைப் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன என்பது தெளிவாகின்றது.

அநுராதபுர யுகத்தின் பின்னரைப் பகுதியில் மன்னர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் சிற் சில நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் விசேட அதிகாரங்களையும் வரப்பிரசாதங் களையும் வழங்கியிருந்தமையை **அந்தானி தூண்களில்** பொறிக்கப்பட்டதன் மூலம் பொது மக்களுக்கு அறிவுறுத்த நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன்படி அந்தானி தூண் எனப்படுவது, அரசகொடுப்பனவு குறித்த கல்வெட்டு வகையாகும்.

## பொருளாதார மேம்பாட்டை உருவாக்குதல்

நாட்டின் பொருளாதார நன்மைகளுக்காக சிறந்ததோர் ஆட்சியை நடத்துவதே அக்காலத்தில் இந்நாட்டின் அரச கொள்கையாக இருந்தது. அநுராதபுர காலத்தில் மன்னர்கள், குளங்கள் மற்றும் கால்வாய்களை அமைப்பதிலும் அதனைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதிலும் அதிக அக்கறை செலுத்தியதன் காரணம் அது மக்களின் நல்வாழ்க்கைக்கும் சுபீட்சத்திற்கும் அத்தியாவசியமாக இருந்தமையாலேயே ஆகும்.

நிர்வாக நடவடிக்கைகளின் போதும் வரி விதிக்கும் போதும் ‘பெரசிரித’ படி செயற்பட வேண்டிய நிலை மன்னனுக்கு ஏற்பட்டது. பெரசிரித என்பது முன்பு மன்னர்கள் கடைப்பிடித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளாகும். பெரசிரித கடைப்பிடிக்க வேண்டியது எந்தளவிற்கு முக்கியமானதென்றால் அநுராதபுர காலத்தின் பின்னரைக் காலப்பகுதியில் சில

மன்னர்கள் தாம் **பெரசிரித** வை மீறாமல் செயற்பட்டதாகக் கல்வெட்டுக்களில் எழுதி வைத்துள்ளனர்.

மானவர்ம வம்சத்தின் ஆட்சிக் காலத்தில் நாட்டில் சிறந்த அடிப்படை முகாமைத்து வக்கொள்கை நிலவியதாக சான்றுகள் உள்ளன. நான்காம் மகிந்த மன்னனின் (கி.பி 956 - 972) மிகிந்தலை சுவர்க் கல்வெட்டு அக்காலத்தில் நிலவிய அடிப்படை முகாமைத்துவம் குறித்த மிக முக்கியமான ஆவணமாகும். மிகிந்தலை விகாரையில் உள்ளக நிர்வாகம் மற்றும் பௌத்த மதகுருமார் பின்பற்ற வேண்டிய பழக்க வழக்கங்கள் என்பன குறித்து அக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி விகாரைக்கு நாள்தோறும் கிடைக்கும் வருமானம் ஆவணம் ஒன்றில் பௌத்த மதகுருமாரால் பதியப்பட வேண்டும்.

அதேபோல் விகாரையின் செயற்பாடுகளுக் காக நாள்தோறும் செலவாகும் செலவினை பஞ்ஷிகா புத்தகத்தில் (கணக்குப் புத்தகம்) எழுதி, குறிப்பிட்ட அதிகாரியின் கையொப் பத்தைப் பெற்று முத்திரையிடப்பட்ட பெட்டியில் இடவேண்டும்.

மாதக் கடைசியில் மாதத்தின் செலவு முழுவதும் வேறொரு கையேட்டிற்கு கொண்டு வந்து நீக்க வேண்டும். பன்னி ரண்டு மாதங்களின் இறுதியில் அந்தந்த செலவினங்களைப் புத்தகத்தில் எழுதி பௌத்த மதகுருமார் முன்னிலையில் வாசித்து அனுமதியைப் பெற வேண்டும்.

இதன்படி விகாரையின் வரவு செலவு குறித்து நாளாந்த, மாதாந்த அறிக்கை தயாரித்து வருட இறுதியில் வருடாந்த வரவு செலவு ஆவணமொன்று தயாரிக்கப் பட்டதாக அறிய முடிகிறது.



உரு 2.3 நான்காம் மகிந்த மன்னனின் மிகிந்தலை சுவர்க்கல்வெட்டு

அநுராதபுர காலத்தில் மன்னர்கள் சமூக நலன்புரி நடவடிக்கைகள் குறித்து விசேட கவனம் செலுத்தினர். அது குறித்து சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- புத்ததாச மன்னன் சகல பத்து கிராமங்களுக்கும் ஒவ்வொரு வைத்தியர் வீதம் நியமித்து மருத்துவம் செய்வித்தமை.
- முதலாம் உபதிஸ்ஸ மன்னன் பார்வை இழந்தவர்களுக்கும் நோயாளிகளுக்கும் வைத்தியசாலைகளையும் தானசாலைகளையும் நிறுவியமை.
- முதலாம் உதய மன்னன் பொலன்னறுவையிலும் பதவியாவிலும் வைத்திய சாலைகளை நிறுவி அவற்றை நடாத்திச் செல்வதற்கு காணிகளை வழங்கியமை.
- ஐந்தாம் காசியப்ப மன்னன் தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அநுராதபுர நகரத்தில் வைத்திய சாலையை நிறுவியதுடன் நகரத்தில் சிகிச்சை நிலையங்களை அமைத்தமை.

## பௌத்த சாசனத்தின் அபிவிருத்தி

பௌத்த மதம் இந்நாட்டிற்கு வந்த பின் அனைத்து அரசர்களும் புத்தசாசனத்தின் நன்மைக்காக நடவடிக்கைகளை மேற்கொண்டமை இந்நாட்டு வரலாற்றில் ஒரு விசேட அம்சமாகும். பௌத்த மதகுருமார்கள் மன்னனின் அறிவுரையாளர்களாக செயற்பட்டமையால் மன்னனுக்கும் புத்த சாசனத்திற்கும் இடையில் சிறந்த தொடர்பு நிலவியது. இதனால் விகாரைகளை நிறுவுதல், அவற்றை நடாத்துவதற்குத் தேவையான கிராமங்களை வழங்குதல் பிக்குகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக பிரிவெனாக்களை உருவாக்குதல் உள்ளிட்ட புத்தசாசனத்தின் உயர்விற்காக மேற்கொள்ள வேண்டிய சகல நடவடிக்கைகளையும் மன்னர்கள் மேற்கொண்டார்கள்.


- **வலய அரசியல் போக்கும் வெளிநாட்டுக் கொள்கையும்**

அநுராதபுர காலத்தின் பின்னரைக்காலத்தின் போது தென் இந்தியாவின் அரசியல் நிலை இந்நாட்டின் அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தும் நிலையைத் தோற்றுவித்தது. இதனால் தென் இந்திய அரசியல் நிலையைக் குறித்து இங்கு சுருக்கமாகப் பார்ப்பது மிகவும் முக்கியமாகும்.

இக்காலத்தில் இலங்கை மீது நேரடி தாக்கத்தை ஏற்படுத்திய தென் இந்திய இராச்சியங்கள் மூன்று இருந்தன.

⏭ **பாண்டிய அரசு**

தென் இந்தியாவின் கிழக்குக் கரையோரமாக இலங்கைக்கு மிகவும் அருகில் பாண்டிய அரசு அமைந்திருந்தது. கி.பி 6 ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலம் முதல் பாண்டிய அரசு மிகவும் பலம் வாய்ந்ததாக உருவெடுத்ததோடு இலங்கை மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மதுரை பாண்டிய அரசின் தலைநகரமாகும்.




### ⏭ பல்லவ அரசு

தென் இந்தியாவில் சோழ அரசு இருந்த நிலப்பகுதிக்கு வடக்கே பல்லவ அரசு இருந்தது. காஞ்சிபுரம் பல்லவ இராச்சியத்தின் தலைநகரமாகும். தென் இந்தியாவில் முதல் முதலாக பாரிய பேரரசு ஒன்றைக் கட்டி எழுப்பியதும் பல்லவர்களேயாவர். கி.பி 7 ஆம் நூற்றாண்டில் பல்லவர்கள் பலம் பொருந்திய ஆட்சியைக் கட்டி எழுப்பி இருந்ததோடு 9 ஆம் நூற்றாண்டு வரை பல்லவர்களின் அதிகாரம் நிலை கொண்டிருந்தது.

### ⏭ சோழ அரசு

பாண்டிய அரசிற்கு வடக்கே தென் இந்தியாவின் கிழக்குக் கரைக்கு அருகில் இந்த அரசு அமைந்திருந்தது. தற்போதைய

தஞ்சாவூர் நகரை தலைநகராக்கிய சோழர்கள் சில சந்தர்ப்பங்களில் பாண்டிய அரசிற்கெதிராக ஆக்கிரமிப்புகளை மேற் கொண்டனர். கி.பி 9 ஆம் நூற்றாண்டி லும் 10 ஆம் நூற்றாண்டிலும் சோழர்கள் மாபெரும் அரசை நிறுவி பேரரசு பலத்தைக் கட்டி எழுப்பினர். இராஜராஜன் மற்றும் இராஜேந்திரன் ஆகிய சோழ மன்னர்களால் அநுராதபுர அரசு வீழ்ச்சி அடைந்தது.

தென் இந்தியாவில் நிலவிய இந்த அரசியல் நிலைமைக்கு முகம் கொடுப் பதற்காக இலங்கை மன்னர்கள் பாண்டி யருக்கு எதிராக பல்லவர்களுடனும் சோழர்களின் அதிகாரத்திற்கெதிராக பாண்டியர்களுடனும் ஒன்றிணைந்து செயல்பட்டனர். இராஷ்ட்ரகூடர் எனும் மற்றொரு இந்திய அரசு எழுச்சி அடையும் போது அந்நாட்டுடன் ஒற்றுமையாக செயல்பட்டதன் மூலம் இந்நாட்டு மன்னர்கள் ஆக்கிரமிப்புக்களைத் தவிர்த்துக் கொள்ள முயற்சித்தனர். இலங்கை மன்னர்கள் எந்தளவிற்கு தந்திரரோபாய மாக செயல்பட்டாலும் இந்தியாவின் ஒவ்வொரு இராச்சியத்திற்குமிடையே நிலவிய பகைமையாலும் அதிகாரத்தை விரிவுபடுத்த வேண்டும் என்ற முயற்சி காரணமாகவும் அநுராதபுர காலத்தின் பின்னரைப் பகுதியில் தென் இந்திய ஆக்கிரமிப்புகள் சில இந்நாட்டின் மீது ஏற்பட்டன.

கி.பி 8 ஆம் நூற்றாண்டு முதல் இந்து மகா சமுத்திரத்தில் வர்த்தக ஆதிக்கத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டன.

மானவர்ம அரச வம்சத்தினரின் ஆட்சியின் கீழ் அநுராதபுர அரசு சுபீட்சம் நிறைந்ததாக இருந்த பொழுதிலும் ஐந்தாம் மகிந்தனின் ஆட்சிக் காலத்தில் (கி.பி 982 - 1017) மத்திய ஆட்சி பலவீனமடைந்து உள்ளக மோதல்கள் உக்கிரமடைந்தன. காலத்திற்கு காலம் இலங்கைக்கு வந்த இந்தியப் படைகள் அப்பொழுது அநுராதபுர நகரத்தில் தங்கியிருந்தன. நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்தமையால் படையினருக்கு சம்பளம் கொடுக்கவும் மன்னனால் முடியவில்லை. அதனால் தென் இந்தியப் படையினர் அரச மாளிகையைச் சுற்றிவளைத்தனர்.

5 ஆம் மகிந்த மன்னன் பாதுகாப்புத் தேடி உருகுணை இராச்சியத்திற்கு தப்பி ஓடினான். இலங்கையில் காணப்பட்ட இந்த மோசமான அரசியல் சூழ்நிலையில் இராஜராஜன் எனும் சோழப் பேரரசன் அநுராதபுரத்தை ஆக்கிரமித்தான். நாட்டைக் கைப்பற்றிய சோழர்கள் அநுராதபுரம், பொலன்னறுவை உட்பட இராச ரட்டையின் பெரும்பகுதியைக் கைப்பற்றிக் கொண்டனர். பொலன்னறுவையைத் தமது தலைநகராக்கி சோழப் பேரரசின் ஒரு பகுதியாக இராசரட்டைப் பிரதேசத்தை ஆட்சி செய்தனர்.

இவ்வாறு 14 நூற்றாண்டு காலமாக சுபீட் சத்திற்கும் நன்மதிப்பிற்கும் நாகரிகத்திற்கும் அடித்தளம் இட்ட அநுராதபுர இராசதானி 1017 இல் வீழ்ச்சி அடைந்தது. சோழப் பேரரசின் ஆட்சியின் கீழ் இருந்த இராச ரட்டையின் பெரும்பாலான பகுதியை அவ்வாட்சியில் இருந்து விடு வித்து இலங்கையர்களின் நன் மதிப்பை மீண்டும் கட்டியெழுப்பியவன் முதலாம் விஜயபாகு மன்னனாவான்.

செயற்பாடு

மானவர்ம அரச வம்சம் தொடர்பான குறு வினாவிடை அடங்கிய நூல் ஒன்றைத் தயாரிக்குக.

## மகா விஜயபாகு மன்னன் (கி.பி. 1055 - கி.பி. 1110)

முதலாம் விஜயபாகு மன்னன் எனும் மகா விஜயபாகு மன்னன் இலங்கை வரலாற்றில் ஒரு முக்கியமான ஆட்சியாளனாவான். விஜயபாகு மன்னன் அரசனாவதற்கு முன் சிறு வயதில் கீர்த்தி அல்லது கித்தி எனும் பெயரில் அழைக்கப்பட்டான். இளவரசனின் தந்தையார் மஹாசாமி மொக்கல்லான ஆவார். தாய் லோகிதா தேவி. இம்மன்னன் பற்றிய முக்கிய வரலாற்று மூலங்கள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- மகாவம்சம்
- பனாகடுவ செப்பேடு
- அம்பகமுவ கல்வெட்டு

கி.பி. 1017 ஆம் ஆண்டில் தென் இந்தியாவின் சோழப் பேரரசின் ஆட்சியாளனாகிய முதலாம் இராஜேந்திர சோழ மன்னன் இலங்கையை ஆக்கிரமித்து மன்னன் ஐந்தாம் மகிந்தனை கைது செய்து சோழப்பேரரசுக்கு அழைத்துச் சென்றான். அன்றிலிருந்து கி.பி. 1070 ஆம் ஆண்டு வரை இராசரட்டை சோழ ஆட்சியாளர்களால் ஆளப்பட்டது. இக்கால கட்டத்தில் சோழர்கள் இந்நாட்டில் அரசுரிமைக்கு உரித்துடைய இளவரசர்களைத் தேடிக் கொலை செய்ய முயற்சித்தனர். ஐந்தாம் மகிந்தனை கைது செய்த சோழர் அவனது மகனாகிய காசியப்பனை (விக்கிரமபாகுவை) தேடிக் கண்டுபிடித்து கொலை செய்யப் பல முறை எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்தன.


மன்னன் ஐந்தாம் மகிந்தன் கி.பி. 1029 ஆம் ஆண்டு சோழநாட்டில் மரணமானான். அதன் பின் இலங்கையர்கள் உருகுணையைத் தலைமையகமாகக் கொண்டு சோழர் எதிர்ப்பு இயக்கமொன்றை ஆரம்பித்தனர்.

இக்கால கட்டத்தில் தமக்கு எதிராக உருகுணையில் அரசியல் சக்தி ஒன்று கட்டியெழுப்பப்படுவதைத் தடுப்பதற்காக சோழர்கள் தந்திரோபாய நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அங்கு சோழர்கள் மேற்கொண்ட தந்திரோபாயங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- இடையிடையே பொலன்னறுவையில் இருந்து உருகுணைக்குப் படை எடுத்து உருகுணையிலுள்ள வளங்களை அழித்தல்
- உருகுணை அரசிற்கு உரிமையுடையவர்களைக் கொலை செய்தல்.

இவற்றின் மூலம் உருகுணையில் அரசியல் ரீதியில் உறுதியற்ற நிலையை உருவாக்க சோழர்கள் முயற்சித்தமை தெளிவாகின்றது. விஜயபாகு மன்னன் உருகுணையில் ஆட்சியதிகாரத்தைப் பெறுவதற்கு முன் அப்பிரதேச ஆட்சியாளரிடையே ஒற்றுமை இருக்கவில்லை. இந்நிலையை சோழர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

**பனாகடுவ செப்பேடு**



இது தென் பகுதியில் மொரவக்க கோறளையில் பனாகடுவ எனும் கிராமத்தில் வயலொன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டது. மன்னனின் இளமைக்காலம் முதலான விபரங்கள் இங்கு காணப்படுகின்றன. இளமைக்காலத்தில் இவன் அனுபவித்த துன்பங்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. உணவு, நீர் இன்றி இவன் கஷ்டங்களை அனுபவித்துள்ளான். அக்காலகட்டத்தில் அவனுக்கும் பெற்றோருக்கும் புத்தராஜா அல்லது சித்தாரும்பி புதல்னா எனும் சேனாதிபதியே பாதுகாப்பு வழங்கினான். அவன் உருகுணையில் இருந்த மக்கள் தலைவனாவான். புதல்னாவுக்கு வழங்கப்பட்ட வரப்பிரசாதகங்கள் பற்றி இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விஜயபாகு உருகுணையில் அரசனாதல்

விஜயபாகுவிற்கு பிள்ளைப் பருவத்தில் இருந்தே உதவி புரிந்த பிரபு ஒருவர் இருந்தார். உருகுணையின் சித்தாரும்பி புதல்னா அல்லது புத்தராஜ என்பவரே அந்தப் பிரபுவாவார். புத்தராஜ அவர்கள் கீர்த்தி இளவரசரின் குடும்பம் உள்ளிட்ட அரச குடும்பத்திற்குப் பாதுகாப்பு வழங்கி எதிரிகளுக்கு எதிராகப் போர் நடவடிக்கைகளை மேற்கொண்டு அவனுக்கு உருகுணையின் ஆட்சி அதிகாரத்தை பெறுவதற்கு பெரிதும் உதவி புரிந்தார். புத்தராஜ சேனாதிபதியின் சேவைகள் குறித்துப் பனாகடுவ செப்பேட்டில் தகவல்கள் உள்ளன. மன்னன் விஜயபாகுவின் குண இயல்புகளைப் பார்க்கும் பொழுது சிறு வயது முதலே பகைவர்களிடம் இருந்து நாட்டை விடுவிக்கும் நோக்குடன் மிகுந்த அக்கறையோடு செயல்பட்டதாகத் தெரிகின்றது.

இந்த நோக்கத்தை அடைவதற்கு முதலில் உருகுணையில் அரசுரிமையைப் பெறுவதற்காக யுத்தம் புரிய வேண்டிய சூழ்நிலை இளவரசர் கீர்த்திக்கு ஏற்பட்டது. அப்பொழுது உருகுணையின் ஆட்சியாளனாக இருந்த கேசதாது காசியப்பனோடு ஏற்பட்ட மோதலில் புத்தராஜ உள்ளிட்ட குழுவினர் இளவரசருக்குப் பெரிதும் உதவி புரிந்தனர். இந்த மோதல்களின் போது கேசதாது தோற்கடிக்கப்பட்டு இளவரசர் கீர்த்தி 1055 ஆம் ஆண்டு கதிர்காமத்தை ஆட்சிமையமாகக் கொண்டு முதலாம் விஜயபாகு என்ற பெயரில் அரசனானான்.



உரு 2.4 விஜயபாகு மன்னனால் அநுராதபுரத்தில் அமைக்கப்பட்ட அரசமாளிகையின் சிதைவு

## இலங்கையை சோழர் ஆட்சியிலிருந்து விடுவித்தல்

முதலாம் விஜயபாகு உருகுணையில் ஆட்சி அதிகாரத்தைப் பெற்று சிறிது காலத்திலேயே சோழர்கள் உருகுணையை ஆக்கிரமித்தனர். அரசன் தனது அதிகாரத்தை நிலை நாட்டுவதற்கு முன் மன்னனின் படைகளை அழிப்பதே சோழர்களின் நோக்கமாக இருந்தது. எனினும் மன்னன் இது குறித்து அறிந்து கொண்டு மலையகப் பிரதேசத்திற்குத் தப்பிச் சென்றமையால் சோழர்களின் நோக்கம் நிறைவேறவில்லை. சோழர்கள் உருகுணையைக் கொள்ளை அடித்து விட்டு பொலன்னறுவைக்குச் சென்றனர். மீண்டும் உருகுணைக்குச் சென்று அரசியல் அதிகாரத்தைக்கட்டியெழுப்பிய விஜயபாகு எதிர்கால யுத்தங்களுக்குத் தேவையான வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்காக பர்மாவுடன் நட்புறவைக் கட்டி எழுப்பினான். மன்னன் விஜயபாகுவின் கீழ் உருகுணையில் தேசப்பற்றுள்ள போராட்டம் ஒன்று கட்டியெழுப்பப்படுவதை அறிந்த இராசரட்டை மக்கள் சோழர்களுக்கு வரிகொடுப்பதை நிறுத்தி அவர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமது ஆட்சிக்கு எதிராக இலங்கையர்கள் ஒன்று திரள்வதை அறிந்த சோழப் பேரரசன் பொலன்னறுவையில் இருந்த சோழ ஆட்சியாளனுக்கு உதவும் பொருட்டு ஓர் படையை அனுப்பினான். இவ்வாறு பலமடைந்த சோழர்கள் மீண்டும் ஒரு முறை உருகுணை பிரதேசத்தை ஆக்கிரமித்த போது விஜயபாகுவுடன் ஏற்பட்ட போரில் தோல்வி அடைந்தனர். இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட மகா விஜயபாகு மன்னன் தனது படைகளுடன் சென்று பொலன்னறுவையைக் கைப்பற்றினான். இச்சந்தர்ப்பத்தில் சோழப்பேரரசன் பொலன்னறுவையிலிருந்த தனது

ஆட்சியாளனுக்கு உதவும் பொருட்டு மீண்டும் படையொன்றை அனுப்பினான். அப்பொழுது விஜயபாகுவிற்கும் சோழர் களுக்கும் இடையே யுத்தம் மூண்டது. அதில் தோல்வி அடைந்த மன்னன் விஜய பாகு தனது பாதுகாப்பிற்காகக் கேகாலை மாவட்டத்தின் வாக்கிரிகலைக்குப் பின் வாங்கினான்.

இவ்வாறு பின்வாங்கியதன் பின்னர் முறையாகத் தமது படைகளை ஒழுங்க மைத்து அதன்பின் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மகாநாககுல பிரதேசத் திற்குச் சென்று இறுதி யுத்தத்திற்கு ஆயத்தமானான். அதனைத் தொடர்ந்து 1070 ஆம் ஆண்டு மன்னன் விஜயபாகு அனைத்துச் சக்திகளையும் பயன்படுத்தி பொலன்னறுவையை ஆக்கிரமித்ததோடு இந்தியாவிலிருந்து சோழப் படைகள் வந்தால் அவர்களைத் தாக்குவதற்கு மகா தித்தைக்கு படை ஒன்றை அனுப்பினான். இராசரட்டையில் ஏற்பட்ட யுத்தத்தில் மன்னன் விஜயபாகுவிற்கு வெற்றி கிடைத்தது. இவ்வாறு 1070 ஆம் ஆண்டு மன்னன் விஜயபாகு பொலன்னறுவை யைக் கைப்பற்றியதோடு 77 வருடங்களாக நீடித்த சோழரின் ஆட்சி வீழ்ச்சி அடைந்தது. இந்தியாவின் அதிபலம் வாய்ந்த சோழப் பேரரசுடன் யுத்தம் புரிந்து இலங்கையை சோழரின் ஆட்சி அதிகாரத்தில் இருந்து விடுவித்தமையானது விஜயபாகுவால் மேற்கொள்ளப்பட்ட பாரியதொரு சேவை ஆகும்.

## மன்னன் விஜயபாகுவின் ஆட்சிக் காலம்

மன்னன் விஜயபாகு 1070 ஆம் ஆண்டு முதல் 40 வருடங்கள் இலங்கையை ஆட்சி செய்தான். இக் காலத்தில் பொலன் னறுவையைத் தலைநகராகக் கொண்டு மீண்டும் ஒரு முறை ஐக்கியமானதும் சமாதானமானதுமான இலங்கை ஒன்று உருவாகியது. இதனால் பொலன்னறுவை யுகத்தின் முதலாவது மன்னன் விஜயபாகு ஆவான். அதனைத் தவிர அவனால் மேற்கொள்ளப்பட்ட சில பணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

- ஏப்பா, மாப்பா பதவிகள் ஏற்படுத் தப்பட்டு பாரம்பரிய முறையிலான நிர்வாகம் மீண்டும் உருவாக்கப் பட்டமை.
- நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனருத் தாரணம் செய்து பொருளாதார சுபீட் சத்தை ஏற்படுத்தியமை
- அநுராதபுரத்தில் அரசமாளிகை ஒன்று அமைத்தமை

## மன்னன் விஜயபாகுவின் வெளிநாட்டுக்கொள்கை

எதிர்காலத்தில் சோழர்களின் ஆக்கிர மிப்பைத் தவிர்த்துக் கொள்வதும் அயல் நாடுகளுடன் வர்த்தக உறவுகளைக் கட்டி எழுப்புவதுமே மன்னனின் பிரதான வெளிநாட்டுக் கொள்கைகளாக இருந்தன. எதிர்கால சோழ ஆக்கிரமிப்பிலிருந்து இந்நாட்டைப் பாதுகாப்பதற்காக அவன் இந்தியாவில் சோழர்களுக்கு எதிரான

வேறு அரசுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தினான். மன்னனின் சகோதரியான மித்தா எனும் இளவரசியைப் பாண்டிய இளவரசன் ஒருவனுக்குத் திருமணம் முடித்துக்கொடுத்துப் பாண்டிய நாட்டுடன் நட்புறவை வளர்த்தான்.

திரிலோகசுந்தரி எனும் கலிங்க வம்ச இளவரசியை இரண்டாந் தாரமாக திரு மணம் முடித்து கலிங்க நாட்டுடன் நட்பு றவைப் பேணினான். தூதர்களை அனுப்பி பரிசுப் பொருட்களை வழங்கி மேலை சாளுக்கிய அரச வம்சத்துடன் நட்புறவை வளர்த்தான்.

இதற்கு மேலாக இலங்கையின் பொரு ளாதார மற்றும் புத்தசாசன வளர்ச்சிக் காகப் பர்மாவுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ள மன்னன் நடவடிக்கையை மேற் கொண்டான்.

**விஜயபாகுவின் சமய நடவடிக்கைகள்**

- பர்மாவிலிருந்து பிக்குமாரை வரவ ழைத்து உபசம்பதா சடங்கினை நடாத்தியமை.
- பொலன்னறுவையில் மூன்றடுக்கு தலதா மாளிகையை அமைத்தமை.
- சிவனொளிபாதமலைக்குச் செல்லும் பாதையைச் சீரமைத்து, அதற்கு தானமளித்தமை.
- அநுராதபுரத்திலும் உருகுணையிலும் விகாரைகளைப் புனர்நிர்மாணம் செய்தமை.

## மன்னன் விஜயபாகுவிடமிருந்து பெறக்கூடிய முன்மாதிரி

மன்னன் விஜயபாகு பிள்ளைப் பருவம் முதலே சவால்கள் பலவற்றை வெற்றி கொண்டு நாட்டுக்குப் பாரிய சேவை யாற்றிய முன்மாதிரியான மன்னனாவான். சிறு வயதிலேயே காலூன்றிய இடமெங்கும் பகைவர்கள் தேடிவரும் பொழுது அதிலி ருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள காட்டிலே மிகவும் துன்பங்களை அனு பவித்த அந்தப் பிள்ளைப் பருவம் குறித்து பனாகடுவ செப்பேட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது. மன்னனாக முடி சூடிய பின் சிறுவயதில் தான் அனுபவித்த துயரங் களை வெளிப்படுத்தியமை அவரின் நேர்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். சிறு வயதில் தனக்கு உதவிய புத்தராஜனுக்கு தான் மன்னனாகிய பின் பல வரப்பிர சாதங்களைவழங்கியமையின்மூலம்இவன் செய்ந்நன்றி மிக்கவன் என்பதை உறுதிப் படுத்துகின்றது.சோழர்களுடன் போரிடும் பொழுது சிற்சில சந்தர்ப்பங்களில் தோல் வியடைய வேண்டிய நிலை இவனுக்கு ஏற்பட்டது. எனினும் அந்தத் தோல்விகள் மூலம் சோர்வடையாது மீண்டும் உள்ளூர் பலவீனங்களை இனங்கண்டு யுத்தத்திற்குத் தயாரானான். தோல்வியைக் கண்டு பின்னடையாது தொடர்ந்து முயற்சிக்கும் மன்னனின் குணாம்சம் நிகழ்கால சமூகத் திற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். மன்னனின் குண இயல்புகளைப் பார்க்கும் பொழுது தாய்நாட்டைப் பாதுகாக்கும் விடயத்தில் அவனிடம் பெரும் உத்வேகம் இருந்ததை அறியலாம். அதிகாரத்திற்கு வந்த பின்பும் வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளைத் தவிர்க் கும் பொருட்டு அவன் விசேட கவனம்

செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. அவனின் உயர் குணாம்சங்கள் அம்பகமுவ கல்வெட்டில் விவரிக்கப்பட்டுள்ளன.

விஜயபாகு மன்னனின் உயர் பண்பு தொடர்பாக அம்பகமுவ கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவைகளின் கருத்து பின்வருமாறு

| | | |
|---|---|---|
| மும்மணிகளுக்கு | - | பணிவிடை |
| ஆசான்களுக்கு | - | அடிபணிதல் |
| தார்மீக மக்களுக்கு | - | மரியாதை |
| கல்விமான்களுக்கு | - | சௌபாக்கியம் |
| உறவினர்களுக்கு | - | அனுசரணை |
| நண்பர்களுக்கு | - | நட்பு |
| பகைவருக்கு | - | தோல்வி |
| அனைத்து உயிரினங்களுக்கு | - | கருணை |
| சபைக்கு | - | அறிவு |
| தமக்கு | - | நிறைவு |

செயற்பாடு

விஜயபாகு மன்னன் பற்றிய பாடத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு கீழ் வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| எதிர்நோக்கிய சவால்கள் | அச்சவால்களை வெற்றி கொண்ட விதம் |
|---|---|
| 1. பிள்ளைப் பராயம் | |
| 2. உருகுணையின் ஆட்சியைப் பெற்றுக் கொள்ளல் | |
| 3. பொலன்னறுவை நகரைத் தலைநகராகக் கட்டியெழுப்புதல் | |

## மகா பராக்கிரமபாகு மன்னன்

மகா பராக்கிரமபாகு பிளவுபட்டிருந்த இலங்கையை ஒன்றுபடுத்தி நாட்டின் முன்னேற்றத்திற்கு அளப்பரிய பணிகளை ஆற்றிய மன்னனாவான்.

விஜயபாகு மன்னன் கட்டியெழுப்பிய அரசியல் ஒற்றுமை மன்னனின் மரணத்தின் பின் தகர்ந்தது. மன்னன் விஜயபாகுவின் மறைவின் பின் இந்நாட்டில் கலிங்க வம்ச ஆதரவாளர்களுக்கும் பாண்டிய அரசவம்ச ஆதரவாளர்களுக்கும் இடையே அரசுரிமை குறித்து மோதல்கள் ஏற்பட்டன. அந்த மோதல்களால் எந்தவொரு தலைவருக்கும் நிலையான ஆட்சியுரிமை ஒன்றைக் கட்டியெழுப்ப முடியவில்லை. அதன் பெறுபேறாக இராசரட்டை, தக்கிண தேசம் மற்றும் உருகுணை என நாடு மூன்று பிரிவுகளாகப் பிரிந்து நாட்டின் ஆட்சி மையங்கள் உருவாகின. பராக்கிரமபாகு இளவரசனின் பிறப்பு இத்தகைய பின்னணியிலேயே நிகழ்ந்தது.

மேல்குறிப்பிட்ட இளவரசி மித்தாவின் மகனாகிய மானாபரணன் பராக்கிரமபாகுவின் தந்தை ஆவான். இவனை முதலாம் மானாபரணன் எனக் கருதலாம். இளவரசன் பராக்கிரமபாகுவின் தாய் இளவரசி இரத்னாவலி என்பவராவார். முதலாவது மானாபரணன் தக்கிண தேசத்து ஆட்சியாளனாகத் தெதிகம பிரதேசத்தில் இருக்கும் போது பராக்கிரமபாகுவின் பிறப்பு நிகழ்ந்துள்ளது. தெதிகம கொட்ட வெஹெர அல்லது சூதிகர சைத்திய இளவரசர் பராக்கிமபாகு பிறந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.



உரு 2.5 தெதிகம கொட்ட வெஹர

பராக்கிரமபாகுவின் இளமைப் பராயத் திலேயே தந்தையார் இறந்து விட்டார். இதனால் தனது தாயுடன் சிறிய தந்தையான கீர்த்தி ஸ்ரீ மேவன் இருந்த இடத்திற்குச் சென்ற அவன் அங்கு சிறிய தந்தையின் பாதுகாப்பில் வளர்ந்தான். சிறுவன் பராக்கிரமபாகு எதிர்கால அரசுரிமைக் குரியவன் என்பதால் அவனுக்குக் கல்வி வழங்குவதில் சிறிய தகப்பனார் அதிக அக்கறை கொண்டார். சிறுவன் பராக்கிரமபாகுவும் அதிக விருப்பத் துடன் மொழி, வில் வித்தைக்கலை, யானைப்பயிற்சி போன்ற விடயங்களைக் கற்றான்.

பராக்கிரமபாகுவின் தந்தையானமானா பரணனின் பின் இளவரசனின் சிறிய தந்தையாகிய கீர்த்திஸ்ரீமேவன் தக்கிண தேசத்து ஆட்சியாளன் ஆனான். அவனின் மரணத்தின் பின் இளவரசன் பராக்கிரமபாகுவிற்கு அப்பிரதேச ஆட்சி அதிகாரம் கிடைத்தது. அவன் தக்கிண தேசத்தில் பராக்கிரமபுரம் எனும் புதிய நகரமொன்றைக் கட்டி எழுப்பினான். தற் பொழுது பண்டுவஸ்நுவர என அழைக் கப்படும் அப்பிரதேத்தில் அக்காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்களையும் சிதைவு களையும் இன்றும் காணக்கூடியதாக உள்ளது.

தூர நோக்குடனான பராக்கிரமபாகு தக்கிண தேசத்தின் ஆட்சியாளனாக இருந்த போது அப் பிரதேசத்தைப் பொருளாதார ரீதியில் வளப்படுத்துவதற்கு செயற்றிட்டம் ஒன்றினை முன்னெடுத்துச் சென்றான். 'வானிலிருந்து விழும் ஒருதுளி நீரேனும் வீணாகக் கடலை அடையக் கூடாது.' என்ற கொள்கையுடன் மன்னன் செயற்பட்டான். பராக்கிரமபாகு தக்கிண தேசத்தின் ஆட்சியாளனாக இருந்த போது பொலன்னறுவையில் இருந்த விக்கிரமபாகு மரணமடைந்தான்.

அவனது மரணத்தின் பின்னர் அவனது மகனான இரண்டாம் கஜபாகு ஆட்சி யாளனானான். அவ்வாறே உருகுணையை ஆண்ட சிறிவல்லபனின் மரணத்தின் பின்னர் அவனது மகன் இரண்டாம் மானாபரணன் உருகுணையின் ஆட்சியாள னானான். பொலன்னறுவையின் ஆட்சி யைப் பெறுவதற்குப் பராக்கிரம பாகு, இரண்டாம் கஜபாகு, இரண்டாம் மானாபரணன் ஆகியோருக்கிடையே பல மோதல்கள் ஏற்பட்டன. அவ்வேளையில் பராக்கிரமபாகுவிற்கும் இரண்டாம் கஜபாகுவிற்கும் இடையே இரண்டாம் மானாபரணனுக்கு எதிராக உடன்படிக்கை செய்யப்பட்டது. அந்த உடன்படிக்கையின் படி முதலில் ஒருவர் இறந்த பின் மற்றவருக்கு அரசு உரிமையாகும். இந்த உடன்படிக்கை கல்வெட்டாக எழுதப் பட்டது. அது பிற்காலத்தில் குருணாகல் மாவட்டத்தில் சங்கமுவ விகாரையில் கண்டு பிடிக்கப்பட்டது. அது **சங்கமு விகாரைக் கல்வெட்டு** எனப்படும்.



உரு 2.6 மகாபராக்கிரமபாகுவின் அரச மாளிகையின் சிதைவு

பராக்கிரமபாகுவிற்கும் இரண்டாம் கஜ பாகுவிற்கும் இடையே உடன்படிக்கை செய்த பின்னரும் மானாபரணன் போரைக் கைவிடவில்லை. இரண்டாம் கஜபாகு வின் மரணத்தின் பின்னர் இரண்டாம் மானாபரணன் பராக்கிரமபாகுவுடன் போரில் ஈடுபட்டான். அப்போரில் மானா பரணன் தோல்வியுற்று உருகுணைக்குத் தப்பிச் சென்றான்.

எனவே பராக்கிரமபாகுவால் பொலன்ன றுவையின் ஆட்சியைக் கைப்பற்றக் கூடியதாக இருந்தது. சிறிது காலத்தில் மானாபரணன் உருகுணையில் இறந்த போதிலும் அவனது தாய் சுகலாதேவி அந்தப் படைக்குத் தலைமை தாங்கிப் பராக்கிரமபாகுவிற்கு எதிராகப் போரினை முன்னெடுத்துச் சென்றாள். அக்காலத் தில் ஆட்சியின் சின்னமாக விளங்கிய தந்ததாதுவும், பாத்திரதாதுவும் சுகலா தேவியிடம் இருந்தன. அந்தப் புனிதச் சின்னங்களைத் தான் வைத்துக் கொண்டு தொடர்ந்து போரில் ஈடுபட்டாள். எனி னும் ஒழுங்கமைப்புடன் போரினை முன்னெடுத்துச் சென்று சுகலா தேவியைத் தோற்கடிப்பதில் பராக்கிரமபாகு வெற்றி கண்டான்.

தந்ததாதுவையும், பாத்திரதாதுவையும் தன்வசம் பெற்றுக் கொள்ள பராக்கிரம பாகுவால் முடிந்தது. இதன்படி 1153 ஆம் ஆண்டு முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் தலைமையில் ஒன்றுபட்ட பலமான நாடு உதயமாகியது.



உரு 2.7 மகா பராக்கிரமபாகு மன்னரின் அரச சபையின் சிதைவு

## பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கை


பராக்கிரமபாகு தக்கிணதேசத்தின் ஆட்சியாளனாக இருந்தபோதே அவனது பொருளாதார நடவடிக்கைகள் ஆரம்ப மாகின. தெதுரு ஓயாவின் நீரை விவசா யத்திற்குப் பயன்படுத்தும் பொருட்டு அணைகட்டி நீரைத் திசை திருப்பினான். அவ்வாறான மூன்று இடங்கள் வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. கொட்ட பத்த, சூக்கர நிஜ்கர, தோரதக்கித என்பனவே அந்த இடங்களாகும். சிறிய குளங்களைப் பெருப்பித்தல், குளங்கள் அணைகள் பலவற்றைச் சீர்திருத்தல் என்பன அக்காலத்தில் மேற்கொள்ளப் பட்டன.

களுகங்கை, பெந்தரகங்கை என்பவற் றிற்கு இடையே அமைந்துள்ள பஸ்துன் கோறளையின் சதுப்பு நிலங்களின் நீரை வழிந்தோடச் செய்து அந்த இடங் களை அபிவிருத்தி செய்தான். மன்னன் பொலன்னறுவையின் ஆட்சியாளனான பின்னர் விவசாயத்தின் பொருட்டுப் பெரும் பணியாற்றினான். இவனது நீர்ப் பாசனப் பணியில் பொலன்னறுவையில் அமைந்துள்ள பராக்கிரம சமுத்திரம் சிறப்பிடம் பெறுகிறது. தோப்பாவாவி, தும்புட்டுளு வாவி ஆகியவற்றை இணைத்து இது அமைக்கப்பட்டது. இவனது காலத்தில் 3910 கால்வாய்களும் 163 குளங்களும் அமைக்கப்பட்டதாக சூளவம்ச த்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை தவிர அணைகள், சிறு குளங்கள் என்பனவும் கட்டப்பட்டன. பராக்கிரமபாகு மன்னன் கப்பல்களிலிருந்து வரி அறவிட்டமை தொடர்பாக நயினாதீவு கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சாசனப் பணிகள்

பௌத்த சமயத்தின் மேம்பாட்டின் பொருட்டு மகா பராக்கிரமபாகு மன்னன் அரும்பணியாற்றினான்.

பிக்குகளின் முப்பிரிவினரையும் ஒன்றிணைத்து சங்கத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தினான். பொலன்னறுவை கத்திகாவத்தையை (ஒழுக்கக்கோவை) நிறுவுவதிலும் முன்னின்று செயற்பட்டான். இது பொலன்னறுயில் உத்தரராம எனும் கல் விகாரையின் கற்றூணில் எழுதப்பட்டுள்ளது. பொத்குல் விகாரை, பொலன்னறுவை கிரி விகாரை, பபலு விகாரை என்பன இவனால் நிறுவப்பட்ட விகாரைகளில் சிலவாகும். மேலும் இவன் அநுராதபுரத்தில் விகாரைகளைப் புனர்நிர்மாணம் செய்துள்ளான்.



உரு 2.8 பொலன்னறுவை கல்விகாரை புத்தர் சிலை

## பராக்கிரமபாகு மன்னனின் வெளிநாட்டுக் கொள்கை

பராக்கிரமபாகு மன்னன் பர்மா, தென் இந்தியா ஆகிய நாடுகளுடன் தொடர்பு வைத்திருந்தான். இலங்கைக்கும் பர்மாவுக்கும் (ராமஞ்ஞதேசம்) இடையே வர்த்தகம் மற்றும் சமயத் தொடர்பு நீண்ட காலமாக நிலவியது. அந்தத் தொடர்பிற்கு இவனது காலத்தில் குந்தகம் ஏற்பட்டது. அக்கால கட்டத்தில் பர்மாவின் மன்னனாக இருந்த அலவுங்சித் என்பவனின் சில செயற்பாடுகள் இதற்குக் காரணமாகின.

எனவே கி.பி 1164 ஆம் ஆண்டு பர்மாவை ஆக்கிரமிப்பதற்குப் பராக்கிரமபாகு நடவடிக்கை எடுத்தான். இதன் பொருட்டு நகரகிரிகீர்த்தி என்ற சேனாதிபதியின் கீழ் கடற்படை ஒன்றை அனுப்பினான். பர்மாவை ஆக்கிரமித்து வெற்றி கொள்ள இலங்கைப் படையினரால் இயலுமானதாக இருந்தது. இப்போரில் வெற்றி பெற்ற சேனாதிபதி நகரகிரி கீர்த்தி என்பவனுக்கு மன்னன் கிராமங்களை நன்கொடையாக வழங்கினான். இது பற்றி தெவனகலக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் பாண்டிய அரசின் ஆட்சியுரிமை பற்றிய மோதல்களிலும் பராக்கிரமபாகு தலையிட்டு செயற்பட்டான். இக்கால கட்டத்தில் பாண்டிய அரசின் ஆட்சியாளனாக விளங்கிய பராக்கிரம பாண்டியனுக்கு எதிராகக் குலசேகரன் எனும் இளவரசன் போரிட்டான். பராக்கிரம பாண்டியன் பராக்கிரமபாகுவின் உதவியை நாடியதால் லங்காபுர, ஜகத் விஜய ஆகிய இரு சேனாதிபதிகளின் கீழ்ப் படைகளை அனுப்ப அரசன் நடவடிக்கை எடுத்தான்.

செயற்பாடு

பராக்கிரமபாகு மன்னன் எனும் தலைப்பில் வினா - விடை நிகழ்ச்சி ஒன்றை நடாத்தவும்.

## நிசங்கமல்ல மன்னன் (கி.பி. 1187 - 1196

முதலாம் பராக்கிரமபாகு மன்னனுக்குப் பின்னர் பொலன்னறுவையை ஆட்சி செய்த மன்னர்களுள் நிசங்கமல்ல மன்னன் முக்கிய இடம் வகிக்கிறான் மன்னன் பராக்கிரமபாகுவிற்குப் பிள்ளைகள் இன் மையால் அவனுக்குப் பின்னர் இரண்டாம் விஜயபாகு அரசனானான். இரண்டாம் விஜயபாகு பராக்கிரமபாகுவின் சகோத ரியின் மகனாவான் இவனது காலத்தில் நிசங்கமல்லன் உபராஜாவாக இருந்தான். இரண்டாம் விஜயபாகு ஒரு வருடம் மாத்திரமே அரசனாக இருந்தான். இவ னைக் கொன்று மகிந்த என்பவன் அரச னானான். மகிந்த அரசனாகி ஐந்து நாட்களில் அவனைக் கொன்று நிசங்கமல்லன் அரச னானான். சிக்கலான அரசியல் பின்னணியி லேயே நிசங்கமல்லன் அரசனானான்.

## நிசங்கமல்லன் எதிர் நோக்கிய சவால்கள்

1. வெளிநாட்டில் பிறந்த, கலிங்க வம்சத் தைச் சேர்ந்தவனாக இருந்தமை

நிசங்கமல்லன் இந்தியாவில் கலிங்கதேசத் தில் இருந்த ஜயகோப மன்னனின் மகனா வான். இவனது தாய் பார்வதி தேவியாவாள். இதன்படி இவன் கலிங்க இனத்தைச் சேர்ந்தவன். இவன் அடிக்கடி இது பற்றிக் கூறியுள்ளான். அது மட்டுமன்றி பொலன்ன றுவையைக் கலிங்கபுரம் எனவும் அறிமுகப்படுத்தினான். இதற்கு முன்னர் இலங்கையை ஆட்சி செய்த கலிங்க வம்சத் தினர் இலங்கையில் பிறந்தவர்களாவர். எனினும் நிசங்கமல்லன் இந்தியாவில் கலிங்க தேசத்தில் பிறந்தவனாவான். இந்த வெளிநாட்டு பூர்வீகம் அவன் எதிர் நோக்கிய பெரும் சவாலாகும்.

அது தவிர மேலும் பல சவால்களை அவன் எதிர்கொண்டான். அவையாவன :

2. பராக்கிரமபாகுவின் சிறந்த சேனாதி பதிகளைத் தன் வசப்படுத்தல்.
3. பாண்டியர்களின் எழுச்சியைத் தடுத் தல்.
4. உருகுணையைத் தன்வசமாக்கிக் கொள் ளல்.

மேற்கூறப்பட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் பொருட்டு மன்னன் நாடு முழுவதும் பிரயாணம் செய்து மக்களின் மனதினைக் கவரும் வகையில் செயற்பட்டான். நீண்ட கல்வெட்டுக்கள் அமைத்து மக்களுக்கு அறிவுரை வழங் கினான். தம்புளை விகாரை, சிவனொளி பாதமலை எனுமிடங்கள் அவன் யாத்திரை செய்த இடங்களுக்கு எடுத்துக் காட்டாகும். நாட்டு மக்களின் நலனுக்காகப் பல வசதி களைச் செய்தான்.

துலாபாரக் கொடை வழங்கினான். துலா பாரக் கொடை என்பது ஒருவரின் உடலின் நிறைக்கு சமனாக வழங்கப்படும் கொடை யாகும்.



உரு 2.9 நிசங்க மல்ல மன்னனின் அரசவைச் சிதைவுகள்

சிம்மாசனத்திற்கு உரிமை கோரிய இளவரசர்கள், பலம் வாய்ந்த தேசிய சேனாதிபதிகள் என்போர் அரசனுக்கு எதிராக செயலாற்றிய மற்றுமொரு பிரிவினராவர். இவ்வாறு பல்வேறு விதமான சவால்களுக்கு நிசங்க மல்லன் முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவை அனைத்தையும் வெற்றி கொண்டு ஒன்பது ஆண்டுகள் நிசங்கமல்லன் நாட்டை ஆட்சி செய்தான். இக்காலத்தில் மன்னனது ஆதிக்கம் நாடு முழுவதும் நிலவியது. அவனது கல்வெட்டுக்களின் மூலம் இது உறுதி செய்யப்படுகிறது.

நிசங்கமல்லன் மக்களின் விசுவாசத்தைப் பெற்று செயற்பட்டான். அவன் நாடு முழுவதும் பிரயாணம் செய்தான். நாட்டு மக்களின் நலன் கருதி பல பணிகளையாற்றினான். நாட்டு மக்களுக்குத் துலாபாரக் கொடை மற்றும் செல்வங்களை வழங்கினான். திருடர், பகைவர் தொல்லைகளை நீக்கிடவும், எளியோரைக் கவனிக்கவும் நடவடிக்கை எடுத்தான். இந்த விபரங்கள் அரசனது கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. பொலன்னறுவை கல்பொத கல்வெட்டு, அட்டதாகே கல்வெட்டு, தம்புள்ளை பாறைக் கல்வெட்டு, வாதுரூப்பே கல் வெட்டு ஆகிய கல்வெட்டுக்களில் அவை காணப்படுகின்றன.

நாட்டு மக்களின் நலன் கருதி மன்னன் பின்பற்றிய மற்றைய கொள்கையானது வரிச் சுமையைச் குறைத்ததாகும். முன்னைய அரசர்கள் அறவிட்ட சில வரிகளை நீக்கியதுடன் வரிச்சலுகையும் வழங்கிட நடவடிக்கை எடுத்தான்.

பொலன்னறுவையில் காணப்படும் சமயக் கட்டிடங்களில் சில இம் மன்னனால் நிறுவப்பட்டவையாகும். தந்ததாதுவை வைக்கும் பொருட்டு தலதா மாளிகையை நிறுவினான். அது அட்டதாகே எனப் பிரசித்தி பெற்றுள்ளது. அவ்வாறே ரன்கொத் விகாரை, வட்டதாகே, நிசங்கலதா மண்டபம் என்பன இம் மன்னனால் நிறுவப்பட்ட கட்டடங்களாகும்.

பொலன்னறுவையில் நிசங்கமல்ல இராஜ சபை மண்டபம் எனப்படும் கட்டிடமும் இம் மன்னானல் நிறுவப்பட்டதாகக் கூறப்படுகிறது. அங்கு இராஜ சபைகள் நடைபெற்றுள்ளன. அங்கு காணப்படும் கற்றூண்களில் இராஜ சபையின் அதிகாரிகள் அமரும் இடங்கள் குறிப்பிடப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.



உரு 2.10 நிசங்கமல்லனின் அரசவைக் கற்றூண்களில் அதிகாரிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருந்த விதம்.

அரசன் அரியாசனத்தில் அமர்ந்திருக்கும் போது தளபதிகள் அமரும் இடம் என்று இக்கற்றூண்களில் எழுதப்பட்டுள்ளது.

செயற்பாடு

நிசங்கமல்ல மன்னன் பற்றி கட்டுரை ஒன்று எழுதுக.

**சாராம்சம்**

- இலம்பகர்ண மற்றும் மௌரிய அரச வம்சஆட்சியாளர்கள்அநுராதபுரத்தில் அதிககாலம் ஆட்சி புரிந்துள்ளதுடன் அவ்விரு வம்சங்களிடையேயும் அரசியல் அதிகாரத்திற்கான போட்டி நிலவியது.
- மானவர்ம அரச பரம்பரையும் இலங் கையின் முக்கியமான அரச வம்ச மொன்றாகும்.
- முதலாம் சேன மன்னனின் ஆட்சிக் காலத்தில் இலங்கையை பாண்டியர் ஆக்கிரமித்தனர்.
- இரண்டாம் சேன மன்னன் பாண்டிய நாட்டை ஆக்கிரமித்தான்
- அநுராதபுரத்தின் இறுதிக் காலப் பகுதியில் தென்னிந்திய இராசதா னிகள் இலங்கை மீது செல்வாக்குச் செலுத்தின.
- முதலாம் விஜயபாகு மன்னன் சோழர் ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டை மீட்டான்.
- முதலாம் விஜயபாகு மன்னன் நாட்டை ஐக்கியப்படுத்தியதுடன் செழிப்பான இலங்கையை உருவாக் கினான்.
- முதலாம் பராக்கிரமபாகு மன்னனால் ஐக்கியப்படுத்தப்பட்ட செழிப்பான தொரு இலங்கையைக் கட்டியெழுப்ப முடிந்தது.
- நிசங்கமல்ல மன்னன் முதலாம் பராக்கிரமபாகு மன்னனை அடுத்து வந்த சிறந்த ஆட்சியாளனாவான்.

# 3 எமது கலாசார மரபுரிமைகள்


**அறிமுகம்**

அனுராதபுரம், பொலன்னறுவை போன்ற பழைய நகரங்களைப் பற்றிப் பேசும் போது எமது புராதன கலாசாரம் பற்றிய நினைவுகள் எழுகின்றன. எமது முன்னோர்களால் கட்டப்பட்ட கட்டிடங்கள், சிற்பங்கள், குளங்கள், அணைகள் ஆகியவற்றின் எச்சங்கள் அங்கு காணப்படுகின்றன. அவை எமது தேசிய சொத்துக்களாகக் கருதிப் பாதுகாக்கப்படுகின்றன. இந்தத் தேசிய சொத்துக்கள் நாட்டின் தேசிய மரபுரிமையாகவும் கருதப்படுகின்றன. எமது தேசிய மரபுரிமை பற்றியும் நாம் அதனைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் பற்றியும் இந்தப் பாடத்தில் கவனம் செலுத்தப்படுகிறது.

***கலாசார மரபுரிமைகள் என்றால் என்ன?***

மழை நீரைச் சேகரிப்பதற்கு முற்காலத்தில் அமைக்கப்பட்ட பாரிய குளங்கள், அக் குளங்களினதும், அணைகளினதும் பரப் பளவு, அதன் தொழினுட்பம் என்பன எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றன. அவ்வாறே எமது முன்னோர் கருங்கற்களை செதுக்கிப் பல்வேறு நிர்மாணிப்புக்களை உருவாக்கியுள்ளனர்.

இவ்வாறு பௌதிகப் பொருள்கள் மட்டுமன்றி முற்காலத்திலிருந்து பரம்பரை பரம்பரையாக நடைமுறையிலுள்ள பழக்க வழக்கங்கள்,ஸூ வழிபாடுகள், நம்பிக்கைகள், நாட்டார் பாடல்கள், ஆடல்கள், கர்ணபரம்பரைக் கதைகள், கலைநுட்பங்கள், சம்பிரதாய வைத்திய



உரு 3.1 ரன்மசு பூங்கா



உரு 3.2 நிஸ்ஸங்க லதா மண்டபம்

முறைகள் என்பனவும் எமது கலாசார மரபுரிமைக்கு உரியவை ஆகும். முற் கூறப்பட்ட பல்வேறுபட்ட அறிவினை தற்காலத்திலும் எமது அன்றாடப் பிரச்சி னைகளைத் தீர்த்துக் கொள்வதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

எமது நாட்டின் பண்டைய மரபுரிமை பல்வேறுபட்ட கை வைத்திய முறைகள், பயிர்ச்செய்கையின் பொருட்டுப் பயன் படுத்தப்படும் சடங்குகள், சம்பிரதாயங்கள் என்பன இவற்றிற்கு எடுத்துக்காட்டு களாகும்.

நீண்ட கால வரலாற்றையுடைய எமது நாடு, பல கலாசார மரபுரிமைகளுக்கு உரிமையுடையதாகும். அவற்றில் சமய வழிபாட்டு நிலையங்கள், பூங்காக்கள், வரலாற்று இடங்கள், கட்டிடங்கள், அரச மாளிகைகள், கோட்டைகள், பல்வேறு கலையாக்கங்கள், உணவுபானங்கள், சம்பிரதாயங்கள், சடங்குகள், பழக்க வழக்கங்கள் ஆகியன எம்மிடம் உள்ளன. இவை அனைத்தையும் எமது கலாசார மரபுரிமை எனக் கொள்ளலாம். உரு 3.1 இல் காணப்படுவது அநுராதபுரத்தில் அமைந்துள்ள ரன்மசு பூங்காவாகும். உரு 3.2 இல் காணப்படுவது பொலன்னறுவையில் அமைந்துள்ள நிஸ்ஸங்கலதா மண்டப மாகும். இவை எமது கலாசார மரபு ரிமைகளுக்குச் சில உதாரணங்களாகும்.

அவ்வாறே இந்த மரபுரிமைகளைக் கைக ளால் தொட்டுணர முடியும். எனவே இந்தச் சொத்துக்கள் தொட்டுணரக் கூடியவை எனப்படும். இதற்கமைய எமது நாட்டில் காணப்படும் சமய வழிபாட்டுத் தலங்கள், அரச மாளிகைகள், கோட்டைகள், பூங்காக்கள் போலவே, மேலும் பல வரலாற்று இடங்கள், கட்டிடங்கள், கலை அம்சங்கள், அணைகள், குளங்கள், கால்வாய்கள், பழைய நூல்கள் என்பன எம்மால் தொடக்கூடியவையாக இருப்ப தால் அவை தொட்டுணரக்கூடிய பாரம் பரியங்கள் எனப் பெயர் பெறுகின்றன.

பெரியோரை வணங்குதல், புதுவருடத்தில் சமய வழிபாடுகளில் ஈடுபடல் என்பன முற்கூறப்பட்ட மரபுரிமைகள் போன்று கைகளால் தொடக்கூடியவை அல்ல.

அவை எமக்குப் பரம்பரை பரம்பரையாக உரிமையான பழக்க வழக்கங்களாகும். அவை தொட்டுணர முடியாத உரிமை எனப்படும். குறிப்பிட்ட இனத்திற்கு உரித்தான சம்பிரதாயங்கள், மொழிகள், நாட்டார் பாடல்கள், ஆடல்கள், பல்வேறு கலை தொடர்பான அறிவு, பழக்கவழக்கங்கள், வழிபாடு, நம்பிக்கை என்பன தொட்டுணர முடியாத மரபுரிமைக்கு உரித்தானவை.

## தொட்டுணரக் கூடிய மரபுரிமைகள்

கைகளால் தொட்டுணரக் கூடியவை தொட்டுணரக் கூடிய பாரம்பரியங்கள் என மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை சிறிய தீவாக இருக்கின்ற போதிலும் பழைய வரலாற்றையுடைய தொட்டுணரக்கூடிய பாரம்பரியங்கள் பலவற்றைக் கொண்ட நாடாக விளங்குகிறது. இது தொடர்பான சான்றுகள் நாட்டின் பல பாகங்களிலுமிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன தொல்பொருள் பெறுமதியுடனான பௌதிகப் பொருள்களைப் போன்றே, மேம்பாடடைந்த நீர்ப்பாசன முறையும் எம்மிடமுண்டு. இவை எமது நாட்டின் தனித்துவத்தைக் காட்டுவதாகும்.

இவ்வாறு கலாசார மரபுரிமைகள் பல எம்மிடம் உள்ளதால் பெருமைமிக்க இனமாக நாம் உலகில் விளங்கலாம்.

உலகின் பல்வேறு கலாசாரங்களின் முன்னிலையில் இலங்கையின் தனித்துவத்தைக் காண்பிப்பதற்கு எமது கலாசார மரபுரிமைகள் உதவுகின்றன.

எமது பண்டைய குளங்கள், அணைகள், வாவிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள தொழில்நுட்பம், பாரிய கருங்கற்களால் செய்யப்பட்டுள்ள நிர்மாணங்கள், அம்பக்க மரச்செதுக்கல்கள், சீகிரியா என்பன உலகின் ஏனைய நாடுகளுக்கு இணையானவையாக உள்ளன. இது எமது முன்னோர்களால் எமக்கு மரபுரிமையாக்கப்பட்டுள்ளவை. இது எமது தனித்துவத்தைப் பறை சாற்றும் உயிரோட்டமான சாட்சிகளாகும்.

செயற்பாடு

எமது பழைய அரும்பொருள்களின் படங்களைச் சேகரித்துக் கையேடு ஒன்று தயாரிக்குக.

## உலக கலாசார மரபுரிமைகள்


எமது நாட்டைப் போன்றே உலகின் ஏனைய நாடுகளுக்கும் தமக்கே உரித்தான கலாசார மரபுரிமைகள் உண்டு. அவற்றில் மிக அருமையான பெறுமதிமிக்க கலாசார மரபுரிமைகள் அந்த நாட்டிற்கு மட்டுமன்றி, முழு மனித குலத்திற்கும் உரித்தான மரபுரிமைகளாகக் கொள்ளப்படுகின்றன. மரபுரிமை தொடர்பான செயற்பாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் விஞ்ஞான, பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோ நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது மரபுரிமைகளுக்கு எவ்வித அழிவோ, சேதமோ ஏற்படாது பாதுகாப்பது யுனெஸ்கோ அமைப்பின் செயற்பாடாகும். கி.பி. 2011 ஆம் ஆண்டாகும் போது அந்த அமைப்பினால் 704 கலாசார மரபுரிமைகள் உலக மரபுரிமையாக அடையாளங்காணப்பட்டுள்ளன. அவற்றில் ஆறு இலங்கையில் உள்ளன.

இலங்கையில் உள்ள உலக கலாசார மரபுரிமைகள் தொடர்பாகக் கலந்துரையாடு முன் உலக கலாசார மரபுரிமைகளைத் தெரிவு செய்வது பற்றி நாம் கவனம் செலுத் துவோம்.

யுனெஸ்கோ அமைப்பால் பல்வேறு நாடு களின் உலக கலாசார மரபுரிமைகளைத் தெரிவு செய்யும் போது பின்வரும் விடயங் கள் கவனத்தில் கொள்ளப்படும் :

- மனிதனின் உன்னதமான ஆக்கத் திறனுள்ள அல்லது அறிவினை வெளிப்படுத்தும் ஆக்கங்கள்.
- யாதேனுமொரு கலாசாரத்திற்கு உரித் தான கட்டடக்கலை, நகர அமைப்பு, கலை, தொழில்நுட்பம் என்பவற்றின் வளர்ச்சியைக் காட்டும் ஆக்கங்கள்.
- தற்போது காணப்படும் அல்லது அழிந்துள்ள பண்பாடொன்றில் அது நிலவியமைமையைக் காட்டும் சான்றாக இருத்தல்.
- மனித வரலாற்றில் முக்கிய சந்தர்ப் பங்களை எடுத்துக்காட்டும் கட்டடங் கள் அல்லது தொழில்நுட்பம் தொடர் பானவையாக இருத்தல்.
- தவிர்க்க முடியாத காரணங்களால் அழிவுக்கு உள்ளாகும் அச்சுறுத்தல் களுக்கு உள்ளான பழைய பண்பாட்டு நிலங்கள் அல்லது சமூக வசிப்பிடங்கள் அல்லது அதற்குரிய நினைவுச்சின்ன மாக இருத்தல்.

**பழைய மொஹஞ்சதாரோ நகர்**



உரு 3.3

இந்தப்பண்டைய நகர அமைப்பு உலக பண்பாட்டுச் சொத்தாகும். பாகிஸ்தானில் அமைந்துள்ள மொஹஞ்சதாரோ நகர், அழிவுற்ற பண்பாடாக, பண்டைய நகர அமைப்பிற்கு சான்றாக உலகமரபுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.



உரு 3.4

**சீனப் பெருஞ் சுவர்**

பண்டைய பாதுகாப்பு சுவராகக் குறிப்பிடப்பட்டுள்ள சீனப் பெருஞ்சுவர் உலகப் பண்பாட்டு பாரம்பரியமாகும்.

சீனாவில் அமைந்துள்ள இது பாதுகாப்புச் சுவராக அமைக்கப்பட்டதுடன் சீனப் பண்பாட்டின் முக்கிய அடையாளமுமாகும்.

## இலங்கையில் அமைந்துள்ள உலக மரபுரிமைகள்

மேற்குறிப்பிட்ட மொஹஞ்சதாரோ நகரமும், சீனப்பெருஞ் சுவரும் வெளிநாடுகளில் உள்ள உலக மரபுரிமைகளாகும். இனி நாம் இலங்கையில் அமைந்துள்ள உலக மரபுரிமைகள் பற்றிக் கவனம் செலுத்துவோம் இப்போது எமதுநாடான இலங்கையில் உலக கலாசார மரபுரிமைகளாக ஆறு இடங்கள் யுனெஸ்கோ நிறுவனத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு.

1. பழைய அநுராதபுர நகரம்
2. பழைய பொலன்னறுவை நகரம்
3. சீகிரியா
4. ரன்கிரி தம்புள்ளைக் குகை விகாரை
5. தலதா மாளிகை உள்ளிட்ட கண்டி நகரம்
6. காலி கோட்டை

இந்த ஆறு இடங்களும் உலக மரபுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதால் இலங்கை சிறிய நாடாக இருந்த போதிலும் அதன் உயர்மட்ட வரலாறு, பண்பாட்டு முக்கியத்துவம் என்பன பற்றி உலகம் அறியக் கூடியதாக உள்ளது. இதனால் அவற்றைப் பார்வையிட சுற்றுலாப் பயணிகள் அடிக்கடி இங்கு வருகின்றனர். இதன் மூலம் எமது பண்டைய பெருமையை உலகிற்கு வெளிப்படுத்த எம்மால் முடியும். எமது வரலாற்று மரபுரிமைகளைக் கண்டறிந்து அவற்றைப் பாதுகாப்பது எமது கடமையாகும்.



உரு 3.5

**பழைய அனுராதபுர நகரம்**

இலங்கையின் புராதன தலை நகரமான அனு ராதபுர நகரத்தில் ஸ்ரீ மகாபோதி, ருவன் வெலிசாய, லோவ மகாபாய, அபய கிரிய, ஜேத்தவனராம, குட்டம் பொய்கை (இரட்டைத் தடாகம்), யானைப் பொய்கை, இசுருமுனி என்பவற்றுடன் ரன்மசு உயன முதலிய பூங்காக்களையும் காணக்கூடியதாக உள்ளது. இவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தையும் பண்பாட்டு முக்கியத்துவத்தையும் கருத்திற் கொண்டு 1982 ஆம் ஆண்டு அனுராதபுரம் உலக மரபுரிமைப்பட்டியிலில் சேர்க்கப்பட்டது.




உரு 3.6

**பண்டைய பொலன்னறுவை நகரம்**

12 ஆம், 13 ஆம் நூற்றாண்டுகளில் பொலன்னறுவை மிகவும் சிறந்த நகராக விளங்கியது. சிதைவடைந்த பௌத்த, இந்து வழிபாட்டுத் தலங்கள், அரசர்களின் சிறந்த நிர்மாணங்கள் பல இங்கு காணப்படுகின்றன.

இங்கு காணப்படும் பௌத்த, இந்து நினைவுச் சின்னங்களாக வட்டதாகே, திவங்க சிலைமனை, ரன்கொத்விகாரை, கிரிவிகாரை, லங்காதிலக்க, அரச மாளிகை, நிசங்க லதா மண்டம், கல் விகாரை, சிவ தேவாலயம், சத்மஹல் பிரசாத, பராக்கிம சமுத்திரம் போன்ற மிகச்சிறந்த நிர்மாணங்களினால் பொலன்னறுவை நகரம் 1982 ஆம் ஆண்டு உலக மரபுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.



உரு 3.7

**சீகிரிய**

இது காசியப்ப மன்னனால் நிறுவப்பட்ட சீகிரிய பழைய கோட்டை, அரச மாளிகை, கலைக்கூடம் என்பன உள்ளடக்கிய முக்கிய இடமாகும்.

இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து 1982 ஆம் ஆண்டு இது உலக மரபுரிமை பட்டியலில் உள்ளடக்கப்பட்டது. இது தொடர்பான கூடிய விளக்கத்தை வியத்தகு சீகிரிய என்ற தலைப்பில் காணலாம்.



உரு 3.8 தம்புள்ளை ரஜ மகாவிகாரை

**தம்புள்ளை ரஜமஹா விகாரை**

இது இலங்கையில் உள்ள சித்திரங்களுடனான பாரிய குகை விகாரையாகும். இயற்கையான கல்லினுள் நிர்மாணிக்கப்பட்டுள்ள பௌத்த விகாரையான இது மிகவும் குளிர்ச்சியான ஆரோக்கியமான இடமாகும். இங்கு காணப்படும் சிறப்பு வாய்ந்த சித்திரங்களின் காரணமாக 1991 ஆம் ஆண்டு இது உலக மரபுரிமைப்பட்டியலில் சேர்க்கப்பட்டது.



உரு 3.9 காலி கோட்டை

### காலி கோட்டை

போர்த்துக்கேயரால் சிறிய அளவில் கட்டப்பட்ட காலி கோட்டை, ஒல்லாந்தரால் பாதுகாப்பு அரணாகப் பலமிக்கதாகக் கட்டப்பட்டது.

இதற்கமைய ஒல்லாந்தக் கட்டடக் கலை மரபைச் சேர்ந்த கட்டடங்கள், தொல்பொருள் நினைவுச் சின்னங்கள் பல இன்றும் இங்கு காணப்படுகின்றன.

தென் கடற்கரையில் அழகிய சுற்றாடலில் அமைந்துள்ள காலி கோட்டையினுள் காணப்படும் புராதன நிர்மாணங்களால் அது 1988 ஆம் ஆண்டு உலக மரபுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.




உரு 3.10 கண்டி புனித நகரம்

### தலதா மாளிகை உள்ளிட்ட கண்டி நகரம்

கண்டி நகரின் வரலாறு, அங்கு காணப்படும் பழைய கட்டடங்கள், தற்போது அந்நகரைச் சுற்றிலும் நடைபெறும் சமயப் பண்பாட்டு செயற்பாடுகள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு 1988 ஆம் ஆண்டு அது யுனெஸ்கோ உலக மரபுரிமையாகப் பிரகடனம் செய்யப்பட்டது. தலதா மாளிகை, பழைய அரச மாளிகை, மகுல்மடுவ என்பன கண்டி நகரில் காணப்படும் பழைய கட்டடங்களுக்கு எடுத்துக் காட்டுகளாகும். கண்டியில் நடைபெறும் எசல பெரஹர (ஊர்வலம்) இந்நாட்டின் பண்டைய பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள், பாரம்பரிய கலை அம்சங்கள் என்பவற்றை எடுத்துக் காட்டுகின்றன.

## வியத்தகு சீகிரியா



உரு 3.11

இலங்கையில் உள்ள கலாசார மரபுரிமை களில் சீகிரிய உலக மரபுரிமையாக விளங்குகின்றமை பற்றி இதற்கு முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்போது நாம் வியத்தகு இம்மரபுரிமை பற்றி மேலும் நோக்குவோம்.

காசியப்ப மன்னனால் நிறுவப்பட்ட சீகிரிய பற்றிப் பல கதைகள் உண்டு. தனது தந்தையான தாதுசேன மன்னனைக் கொலை செய்து அரசினைப் பெற்ற காசியப்பன், முகலானன் என்ற தனது சகோதரனுக்குப் பயந்து பாதுகாப்புக் கருதி சீகிரியாக் குன்றில் அரணொன்றைக் கட்டியதாக மூலாதாரங்களில் குறிப்பிடப்படுகிறது. சீகிரியாவில் உள்ள சிறந்த கட்டடக்கலை, பளிங்குச்சுவர், படிக்கட்டு, ஓவியம், சிங்கத் தின் வாய், பூங்கா, நீர்த்தேக்கம், குளியல் தடாகம், அகழி என்பவற்றை நோக்கின் அது அரணாக விளங்குவதுடன் சிறப்பு வாய்ந்த கலையரங்கமாகவும் உள்ளது.

### சீகிரியக் கட்டடக் கலை

கடல் மட்டத்திலிருந்து 1214 அடி உயரத் தில் அமைந்துள்ள மலையில் உள்ள கற்பாறையின் உச்சியில் பழைய அரச மாளிகையையும், ஏனைய கட்டடங்களின் அழிவுச் சின்னங்களையும் இன்றும் காணக் கூடியதாக உள்ளது. பாறை உச்சியில் அழிவுகளுடன் கூடிய பிரதேசம் மூன்று ஏக்கரை உள்ளடக்குகிறது. உச்சி வரை முன்னர் அமைக்கப்பட்ட படிக்கட்டு, பாலம், பாதுகாப்புச்சுவர் என்பனவற்று டனான வியப்பிற்குரிய நிர்மாணமாக இது காணப்படுகின்றது.



உரு 3.12 பளிங்குச் சுவர்

இது பளிங்குச்சுவர் அல்லது கண்ணாடிச்சுவர் எனப்படுகிறது. இதில் எழுதப்பட்டுள்ள கவிதைகள் சீகிரிய கிறுக்கல் கவிதைகள் எனப்படும்.


## சீகிரியப் பூங்கா

சீகிரியக் குன்றின் உச்சியில் இருந்து பார்க்கும் போது மேற்கில் இருந்து பரந்த பிரதேசத்தில் மகுல் உயன என்ற பூங்கா பரந்துள்ளது. பரணவிதான அவர்கள் இதனை ‘பிரமத’ வனம் எனப் பெயரிட்டுள்ளார். சீகிரிப் பூங்கா நீர்ப்பூங்காவுடன் கூடியதாக அமைந்துள்ளது.



உரு 3.13 சிங்கத்தின் பாதமும், படிக்கட்டுக்களும்

பாறையின் கடினமான பகுதிக்கு ஏறுவதற்கு இருந்த வழி சிங்கத்தின் வாயிலிருந்து ஆரம்பமாகிறது. பாரிய சிங்க உருவின் காரணமாக இந்த இடம் சீகிரியா என அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. சிங்க உருவுடன் கூடிய பகுதியை அடைவதற்கு முன்னர், போக்குவரத்துப் பாதையின் பாதுகாப்புக் கருதி அமைக்கப்பட்டிருந்த நீண்ட பாதுகாப்புச் சுவரின் உட்பகுதி செப்பனிடப்பட்டு அமைக்கப்பட்டிருந்தது.



உரு 3.14 சீகிரியா பூங்கா

## சீகிரிய ஓவியம்

சீகிரியாப் படிக்கட்டின் மேற்பகுதியில் ஏறிய பின்னர் குகையினுள் உள்ள சீகிரிய ஓவியங்களைக் காணலாம். குன்றின் அடிவாரத்தில் உள்ள குகைகளிலும் ஓவியங்களின் பகுதிகளைக் காணக் கூடியதாக உள்ள போதிலும் சீகிரிய ஓவியங்கள் என மிகவும் பிரசித்தி பெற்றவை குன்றின் உட்குழிவான இடத்தில் காணப்படும் பெண்களின் உரு வங்களாகும். மேகங்களிலிருந்து எழும்பி, உடலின் மேற்பாகம் தெரியும் வண்ணம் இந்தப் பெண்களின் உருவங்களாகும். வரையப்பட்டுள்ளன. ஏறக்குறைய 1500 ஆண்டு பழைமை வாய்ந்த இந்தக் கலைப்படைப்புகள் உலகின் உன்னத கலைப்படைப்புக்கள் எனப் பிரசித்தி பெற்றுள்ளன.



உரு 3.15 சீகிரிய ஓவியம்

## சீகிரியபொய்கையும் நீர்த் தொழினுட்பமும்

சீகிரியின் நீர்மலர் மிகச் சிறந்த தொழில் நுட்பப் படைப்பாகும். சீகிரியக் கட்டடக் கலைஞன் நீர்மலரினை அமைக்கும் போது, வேகமாகப் பாய்ந்தோடும் நீர்ப் பாய்ச்சலுக்குத் தடை ஏற்படுத்தல் மூலம் நீரினை மேலே எழச் செய்யலாம் என்ற எண்ணக்கருவினை விஞ்ஞான ரீதியாகச் சிந்தித்துள்ளான்.

இதன்படி மேலேயுள்ள குளங்களி லிருந்து வேகமாகக் கீழே பாய்ந்து வரும் நீரோட்டத்துக்குப் படத்தில் காணப்படுவது போன்று துளைசெய்த கற்களைப் பதித்து நீர்ப்பூவினை அலங்காரமாக அமைத்துள் ளனர். இந்த நீர்மலர் தற்போதும் கூட மழைக் காலத்தில் செயற்படுகின்றது.

உண்மையில் சீகிரிய மிகச்சிறந்த படைப்பு என்பதனை இப்போது நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்.

குன்றின் உச்சியில் பெரிய மாளிகை அமைந்தமை, அதற்குத் தேவையான பொருட்களைக் கொண்டு சென்ற முறை என்பனவற்றை நோக்கும் போது தற்காலத்தைப் போன்று வசதிகள் இல்லாத அக்காலத்தில் இவ்வாறான கட்டடங்கள்



உரு 3.16 நீர்மலர்

அமைப்பதில் அவர்கள் எதிர்நோக்கிய சிரமங்களை அறிய எமக்கு உதவுவதுடன், எம்மை ஆச்சரியத்திலும் ஆழ்த்துகிறது. இது மிகச் சிறந்த நிர்மாணமாகும். சிறிய நாடான இலங்கையின் சிறப்பினை உலகம் அறிந்திட அளித்த வாய்ப்பினை வழங்கிய கலைஞர்கள் பற்றி நாம் பெருமையடைய வேண்டும்.

செயற்பாடு

1. இலங்கையின் உலக மரபுரிமை இடங்களின் படங்களை உள்ளடக்கிய வகையில் புத்தகம் ஒன்றைத் தயாரிக்கவும்.
2. சீகிரியவைப் பற்றிய கையேடு ஒன்றைத் தயாரிக்கவும்.
3. இவற்றைக் குழுச் செயற்பாடாக மேற்கொள்ளவும்.



உரு 3.17 நீராடும் தடாகம்

## தொட்டுணர முடியாத மரபுரிமைகள்

இரவு வேளையில் தனியாகச் செல்ல வேண்டாம் என்று எமது தாத்தா அல்லது பாட்டி சில சமயங்களில் எமக்கு எச்சரிக்கையாக சில அறிவுரைகள் வழங்குவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அதாவது இரவு வேளையில் தனியாகப் பயணம் செய்வது உகந்ததல்ல என்ற நம்பிக்கை முன்னர் நிலவியது. அவ்வாறான நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் பற்றி எமது தாத்தா, பாட்டி கூறுவது உமக்கு நினைவில் உள்ளதா? இது தொடர்பான விளக்கங்களை அவர்கள் தங்கள் முன்னோரிடமிருந்து பெற்றிருப்பர். இவ்வாறு பரம்பரை பரம்பரையாக மக்கள் குழுவால்

முன்னெடுத்துச் செல்லப்படும் கலாசார மரபுரிமைகள் தொட்டுணர முடியாத மரபுரிமைகள் எனப்படும். இவற்றைப் பழைய கட்டடங்கள், சித்திரங்கள், சிலைகள், சிற்பங்கள் என்பன போன்று தொட்டுணர முடியாது. யுனெஸ்கோ நிறுவனம் தொட்டுணரமுடியாத உரிமைகள் பற்றிய ஐந்து முறைகளை இனங்கண்டுள்ளது. அதன்படி பல்வேறு நாடுகளின் சமூகங்களின் தனித்துவத்தை இனங் காணலாம்.

1. நாட்டார் மொழிவழக்கும் கருத்து வெளிப்பாடும்
2. அரங்கக் கலைகள், நாட்டார் பாடல்கள், நாட்டார் இசை.
3. சமூகப் பழக்கவழக்கங்கள், வழிபாடுகள், நம்பிக்கைகள், விழாக்கள்
4. இயற்கையும் சுற்றாடலிலிருந்து பெறும் அறிவும் பழக்கமும்
5. மரபு ரீதியான கலைநுட்பங்கள்

மேற்கூறப்பட்ட அம்சங்களுக்கு அமைய எமது நாட்டில் காணப்படும் தொட்டுணர முடியாத உரிமைகள் மூலம் எமது தனித்துவத்தை அறியலாம். இப்போது நாம் அவற்றைத் தேடிப் பார்ப்போம்.

## நாட்டார் மொழிவழக்கும் கருத்து வெளிப்பாடும்

தற்போது இலங்கையில் பேசப்படும் சிங்கள மொழிக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் அளவிலான வரலாறு உண்டு. தமிழ் மொழிக்கும் நீண்ட வரலாறு உண்டு.

நீண்ட காலம் இம் மொழிகள் பயன்படுத்தப்பட்டு வந்தமையால் அவற்றிற்கே உரித்தான மொழி அமைப்புக்கள் உருவாகியுள்ளன. அவ்வாறே உவமைகள், உருவகங்கள், பழமொழிகள் போன்றவற்றால் இம்மொழிகள் ஊட்டம் பெறுகின்றன.

சிங்கள மொழியானது தமிழ் மொழியினாலும் முற்காலத்தில் நிலவிய ஏனைய மொழிகளாலும் தாக்கம் பெற்றுள்ளது. தமிழ்மொழியும் சமகால ஏனைய மொழிகளின் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளது. எனவே மொழியைக் கையாள்வது தொடர்பாக இலங்கைக்கே உரித்தான நடை மரபு நிலவுகின்றது. இது தொட்டுணர முடியாத எமது பாரம்பரியமாகும்.

## அரங்கக் கலை

தற்போது எமது கலாசாரத்துடன் தொடர்புடைய அரங்கக் கலை இந்நாட்டில் நிலவுகிறது. அதுவும் புராதன மரபுரிமையின் விளைவாகும்.

ருவன்வெலிசாயவிற்கு அடிக்கல் நாட்டும் வைபவத்திற்கு துட்டகைமுனு மன்னன், நடனப்பெண்களும் வாத்தியங்களும் கொண்ட குழுவினரால் அழைத்து வரப்பட்டதாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்காலத்தில் சில விழாக்களுக்கு சிறப்பு அதிதிகளை அழைத்து வரும் போது ஆடல், பாடல், வாத்தியம் என்பன பயன்படுத்தப்படுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இது முற்காலந்தொடக்கம் இந்நாட்டில் நிலவி வரும் சம்பிரதாயம் என்பதைத் துட்டகைமுனு பற்றிய எடுத்துக்காட்டிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்திலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆடல், பாடல் நிலவியதாகக் கூறப்படு

கிறது. ஆடல், பாடலுக்கென கட்டடங்களை அம்மன்னன் நிறுவியுள்ளான். அவனது மனைவியான ரூபவதி ஆடல், பாடலில் சிறந்து விளங்கிய பெண் என மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் முற்காலத்தில் காணப்பட்ட ஆடல், பாடல்கள் பற்றி மகாவம்சம், கவிசிலுமின, சத்தர்மலங்கார போன்ற நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் பல்வேறு ஆடல்கள், மதுர கீதங்களுடனான விழாக்கள் நடாத்தியதாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. முற்கால ஆடல், பாடல்களில் பலவித மேளங்கள், வீணை, குழல் போன்ற சங்கீத உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பண்டைய நடனம், சங்கீதக் கலைகளில் சில சம்பிரதாயங்கள் இன்றைய சாந்திகர்ம சடங்குகள், பூஜைகளிலும் காணப்படுகின்றன. கண்டி எசல பெரஹரவிலும் இவ்வாறான ஆடல், பாடல்களைக் காணலாம்.

நாட்டார் பாடல்களும் எமது கலாசார மரபுகளின் ஒரு பகுதியாகும். பெரும்பாலும் அரங்கக்கலைகள் சமய வழிபாடுகளில் பயன்படுத்தப்பட்டமை தெளிவாகிறது. அலங்கார உடைகள் அணிந்த பல்வேறு சடங்குகளை நடாத்தும் பொருட்டு நடனம் பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்காலத்திலும் சமய விழாக்களில் மட்டுமன்றி வேறு விழாக்கள் நடைபெறும் சந்தர்ப்பங்களிலும், ஆடல், பாடல். வாத்தியங்கள் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். இவை தொட்டுணர முடியாத மரபுரிமைகள் எனப்படும்.

## நாட்டார் பாடல்கள்

இந்நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் அப்பிரதேசத்திற்கே உரித்தான நாட்டார் பாடல்கள் உண்டு. அந்தந்தப் பிரதேச முதியோர்களால் பாடப்பட்ட பாடல்களைச் செவிமடுத்தல் மூலம் அவை தற்போதைய பரம்பரைக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. ஆதலால் நாட்டார் பாடல்களும், ஏனைய பல்வேறு மக்கள் பாடல்களும் பரம்பரை பரம்பரையாக வந்த தொட்டுணர முடியாத மரபுரிமை எனக் கொள்ளலாம். தாதுசேன மன்னன் கலாவாவியை அமைத்தமை பற்றிய நாட்டார்பாடலொன்றுஅநுராதபுரப் பகுதியில் வழக்கத்தில் இருந்து வருகிறது. அதே போன்று தமிழ்மொழியிலும் பிரதேச ரீதியாக நாட்டார் பாடல்கள் வழக்கில் உள்ளன.

தண்ணிக் குடமெடுத்து
தனிவழியே போறபுள்ள
தண்ணிக் குடத்தினுள்ளே
தளும்புதடி எம் மனசு

என்பது இலங்கையில் பிரபலமானதொரு நாட்டார் பாடலாகும்.

நாட்டார் பாடல்களைப் பாடியவர்கள், பாடப்பட்ட காலம் என்பது பற்றிப் பெரும்பாலும் அறிய முடியாது. பண்டைய விவசாயப் பாடல்கள், வண்டில் பாடல்கள், மீனவர் பாடல்கள், சுரங்கப் பாடல்கள் என்பன களைப்பைப் போக்குவதற்கும், தனிமையை நீக்குவதற்கும் பாடப்பட்டவையாகும். அந்தந்தத் துறைகளில் பண்டைய மக்கள் பெற்ற அனுபவங்கள், அக்காலத்தில் இருந்த தொழில்கள் என்பன பற்றி அறிய இவை எமக்கு உதவுகின்றன.

அவ்வாறே பெற்றோர், பெரியோரின் குண நலன்களை எடுத்துரைத்தல், தாலாட்டு தல் இளைய பரம்பரையை நல்வழியில் கொண்டுவரல், பசியை வெளிப்படுத்துதல், உறவினரிடையே தொடர்பை வெளிப் படுத்துதல் என்பவற்றின் பொருட்டு நாட்டார் பாடல்கள் பயன்படுத்தப்பட்டன. எனவே மனதில் எழும் எண்ணங்களை வெளிப்படுத்தி அவற்றைத் தாளத்துடன் பாடுதல் நாட்டார் பாடலில் காணப்பட்டது. இவை எந்தவொரு சமூகத்தினதும், மக்கள் குழுவினதும் மரபுரிமையாகும்.

செயற்பாடு

நாட்டார்பாடல்களை உள்ளடங்கிய கையேடு ஒன்றினைத் தயாரிக்குக.

## சமூகப் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்

பல்வேறு சமூகப் பழக்க வழக்கங்கள், வழிபாடுகள், நம்பிக்கைகள் ஆகியன பரம்பரை பரம்பரையாக வரும் தொட் டுணரமுடியாத மரபுரிமைகளாகும். விகாரைகள், ஏனைய மதவழிபாட்டுத் தலங்கள் என்பவற்றிற்கு செல்வதற்கு முன்னர் காலணிகள், தலைக்கவசம் என்பனவற்றை கழற்றுதல், பெற்றோர், ஆசிரியர்களை வணங்குதல், மரியாதை செலுத்துதல், கைகழுவி உணவு உண்ணல், சீவராசிகளுக்குக் கருணை காட்டுதல், ஏழை எளியோருக்கு உதவுதல் என்பன பரம்பரை பரம்பரையாக மரபுரிமையாகி வரும் நற்பழக்கங்களாகும். இவற்றின் மூலம் எம்மில் கருணை, அன்பு, ஒழுக்கம், நேர்மை போன்ற உயர்பண்புகள் வளர்ச்சியடையும்.

## விழாக்கள் நடாத்துதல்

தற்காலத்தில் பல்வேறு விழாக்கள் நடை பெறுவதை நீங்கள் கண்டிருப்பீர்கள். பண்டைய சமூகத்தில் மனிதனின் பிறப்பிலிருந்து இறப்பு வரை பல்வேறு கொண்டாட்டங்கள் இடம் பெற்றுவந்தன. அநுராதபுரக் காலத்திலிருந்து இவ்வாறான விழாக்கள் எமது நாட்டில் வழக்கத்தில் இருந்தமைக்கு அயல் நாடான இந்தியா வில் வழக்கத்தில் இருந்த இந்து பழக்க வழக்கங்களின் செல்வாக்கே காரணமாகும். ஒருவரின் பிறப்பு முதல், கல்வி நடவடிக் கையினை ஆரம்பிக்கும் வரை செயற்படுத்த வேண்டிய பழக்க வழக்கங்கள் பற்றி இந்து நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இது தொடர்பான சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

**பிறப்பில் செய்யவேண்டிய சடங்குகள்**

**பெயர் வைத்தல்** -

**காது குத்துதல்** -

**சோறு ஊட்டுதல்** -

**ஏடு தொடக்குதல்** -

இலங்கையில் முற்காலந் தொட்டே ஒருவர் பிறந்த பின்னர் பெயர் வைத்தல், சோறு ஊட்டுதல், ஏடு தொடக்குதல், விவாகம் போன்ற சடங்கு சம்பிரதாயங்கள் நிலவி வந்தன.

பரம்பரை பரம்பரையாக மரபுரிமையாக இன்றும் இவ்வாறான நிகழ்வுகள் நடை பெறுகின்றன. இவை அநேகமாக வீடு களில் நடைபெறும் வைபவங்கள் ஆகும். இவை தவிர்ந்த மக்கள் ஒன்று கூடி நடாத்தும் பொது வைபவங்கள் பலவும்

உண்டு. இராசரட்டை நாகரிக காலத்தில் நடைபெற்ற இவ்வாறான வைபவங்கள் பல கீழே தரப்பட்டுள்ளன.

**வெசாக் விழா**

**நீர் விளையாட்டு விழா**

**ஏர்பூட்டு விழா**

தற்காலத்திலும் வருடத்தில் குறிப்பிட்ட காலங்களில் நடைபெறும் பல்வேறு விழாக்கள் உண்டு. வெசாக், எசல பெரஹர, உபசம்பதா என்பன முற் காலத்தில் நடைபெற்ற விழாக்கள் பழக்கவழக்கங்களின் செல்வாக்கினைப் பெற்றுள்ளன. அவையும் பரம்பரை பரம் பரையாக வந்த அறிவைப் போன்று தொட் டுணரமுடியாத மரபுரிமையாக உள்ளன.



உரு 3.18 கண்டி பெரஹரா

எமது நாட்டில் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களைப் பின்பற்றும் மக்கள் வாழ்கின்றனர். அந்தந்த மதங்களின் பண்பாடுகள், பழக்க வழக்கங்கள் பல்வேறுபட்டவை. சிங்களப் புதுவருட வைபவம் பெரும் பாலும் பௌத்த பழக்க வழக்கங்களுக்கு முதலிடம் கொடுத்து நடைபெறுகின்றது. சைவ சமயத்தவரின் தைப்பொங்கல் விழா, இஸ்லாமிய மக்களின் ரம்ழான் பெருநாள் என்பன அந்தந்த மதப் பழக்க வழக்கங்களுக்கு முதலிடம் கொடுத்து நடைபெறுகின்றன. இந்த விழாக்களுடன் தொடர்புடைய பழக்க வழக்கங்கள் பரம்பரைபரம்பரையாகத் தொடர்ந்து வரும் தொட்டுணர முடியாத மரபுரிமைகளாகும்.

செயற்பாடு

உங்களது வாழ்வுடன் தொடர்புடைய விழா ஒன்றினைத் தெரிவு செய்து அவ்விழாவின் சடங்கு சம்பிரதா யங்கள் பற்றிய விபரங்களை வகுப்பில் முன் வைக்குக.

## இயற்கையின் வெளிப்புறச் செல்வாக்கினால் ஏற்பட்ட அறிவும் பழக்கவழக்கங்களும்

நீண்ட வரலாற்றையுடைய நாடு என்ற வகையில் பண்டைய மனித அனுபவங்கள் மூலம் உரிமையாகிய மரபு ரீதியான அறிவு செல்வம் எம்மிடம் உள்ளது. விவசா யத் துறையில் குளங்கள் அமைத்தல், மடைக்கதவுகள், கால்வாய்கள் அமைத்தல், விதை விதைத்தல், பயிரினைப் பாது காத்தல், அறுவடை என்பன முன்னைய மரபுவழி அறிவாக இருந்தவை. பயிர் களுக்கு ஏற்படும் நோய்கள், அவற்றிற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரணங் கள் என்பன அவ்வாறு பரம்பரை பரம்பரையாக நிலவி வந்த மரபுவழி அறிவிற்கான எடுத்துக் காட்டுக்களாகும். மரபு ரீதியான வைத்திய முறைகள், தச்சுத் தொழில், இரத்தினக்கல் தொழில் போன்ற பல தொழில்களில் இவ்வாறான மரபுவழி முறைகள் நிலவுகின்றன. அவை இனமொன்றினது தொட்டுணர முடியாத மரபுரிமையின் ஒரு பகுதியாகும்.

## பாரம்பரிய கலை நுட்பங்கள்

இந்நாட்டின் மரபு ரீதியான கலை நுட்பங்களை நோக்குமிடத்து முற்காலம் முதற்கொண்டு வரும் அறிவினைத் தற்போதும் அந்தந் தக் கலை அம்சங்களுக்குப் பயன் படுத்துவதைக் காணலாம்.

செதுக்கல் சுவரோவியம், பாய் பின்னல், பித்தளைப் பாத்திரங்கள் செய்தலும் செப்பனிடுதலும், முகமூடி செய்தல், கலை, பொம்மலாட்டம், மெழுகுக் கலை என்பன அதற்கான எடுத்துக் காட்டுக்களாகும்.

## எமது கலாசார உரிமைகளைப் பாதுகாத்தல்

எமது நாடு சிறிய நாடாக இருக் கின்ற பொழுதிலும் பண்டைய வரலாற்றினையுடைய நாடாகப் பல பண்பாட்டு பாரம்பரியங் களைக் கொண்டுள்ளமையை இந்தப் பாடத்தின் மூலம் நீங்கள் அறிந்துள்ளீர்கள். தொட்டு ணரக் கூடிய, தொட்டுணரமுடியாத இந்தக் கலாசார மரபுரிமைகளைப் பரம்பரை பரம்பரையாகப் பாது காத்ததினால் அவை இன்றைய சமூகத்திற்குக் கிடைக்கப்பெற்று உள்ளன.



உரு 3.19 ஓலை இழைத்தல்



உரு 3.20 பன் புல்லால் தயாரிக்கப்பட்ட கைப்பைகள்



உரு 3.21 பித்தளை செதுக்கல்



உரு 3.22

### முக மூடிகளும் பொம்மலாட்டக்கலையும்

பல்வேறு சாந்திகர்ம சடங்குகளின் பொருட்டும் கூத்துக்களின் பொருட்டும் முகமூடிகள் செய்யப்பட்டன.

இங்கு பெரும்பாலும் பிசாசுகளினதும், தேவர்களினதும் உருவங்கள் பயன்படுத்தப்பட்டன. பயத்தையும் மகிமையையும் காட்டுவதற்கு முகமூடிகள் பயன்படுத்தப்பட்டன.

அம்பலாங்கொடை, உடுபில போன்ற பிரதேசங்கள் இலங்கையின் தென்பகுதியில் முகமூடி செய்வதில் பிரசித்தி பெற்றவையாகும்.



உரு 3.23

### அரக்கு சித்திரக் கலை

மத்திய மலைநாடு இத்தொழிலுக்கு மிகவும் பிரசித்தி பெற்ற இடமாகும். கெப்பெட்டியா செடியில் வாழும் லாக்ஷா என்ற சிற்றுயிரினத்திலிருந்து பெறப்படும் பசை இந்தக் கைத்தொழிலுக்கு மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது

ஊன்றுகோல், கைத்தடி, மரத்தாலான வெற்றிலைத் தட்டம், மரத்தாலான சாடிகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், விசிறிக் கைப்பிடி, ஆலவட்டம், ஏட்டுச் சுவடிகளின் அட்டையலங்காரம் முதலியவற்றிற்கு இக்கைத்தொழில் பயன்படுத்தப்படுகின்றது.

## எமது பண்பாட்டு பாரம் பரியங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம்

கடினமான கருங்கல்லில் கூடக் காண் போரைக் கவரும் மிக உயர்ந்த கலை அம்சங்களைப் படைப்பாக்கம் செய்ய எமது முன்னோர் திறமை பெற்றிருந்தனர். படைப்பாக்கம் தொடர்பாக அவர்களிடம் காணப்பட்ட அறிவு மற்றும் நாடு, இனம், மதம் என்பன தொடர்பாக அவர் களிடம் இருந்த நல்ல மனப்பாங்கும் அனுபவங்களும் இந்த பாரம்பரியங்களுடன் இணைந்து காணப்படுவதால் எமது எதிர்கால பரம்பரையினரும் அவற்றை அனுபவிக்கும் பொருட்டு நாம் அவற்றைப் பாதுகாக்க வேண்டும்.

உலகில் உள்ள பல்வேறு நாடுகளில் அவ்வவ் நாடுகளுக்கே உரித்தான கலாசா ரங்கள் உண்டு. அவ்வாறான பல்வேறு கலாசாரங்களில் இலங்கைக்கே உரித்தான கலாசாரத்தினை உலகிற்கு எடுத்தியம்ப எமது கலாசார மரபுரிமைகளைப் பாது காத்தல் அவசியமாகும். அவ்வாறே எமது கலாசாரத்திலிருந்து உலகிற்கு மரபு ரிமையான ஆறு இடங்களைப் பற்றி நீங்கள் கற்றுள்ளீர்கள். இதன் மூலம் எமது தேசிய பாரம்பரியங்களை உலகம் அறிந்துள்ளது. அது எமது சுற்றுலாக் கைத்தொழில் வளர்ச்சிக்குக் காரணமாக உள்ளது.

எமது முன்னோரின் படைப்பாக்கம் திறமை, கலையாற்றல்கள், சிறந்த அம்சங்கள், பொறியியல், தொழினுட்ப நிர்மாணங்கள் என்பனவற்றை இன்றைய சமூகம் அறிதல் மூலம் நாட்டின் மீது உயர் எண்ணமும் பற்றுதலும் கொள்ள வழி பிறக்கிறது.

எமது பிரதான உணவான சோற்றிற்குத் தேவையான நெல்லைப் பெறுவதற்கு எமது முன்னோரால் எமக்கு மரபுரிமை யாகக் கொடுக்கப்பட்ட குளங்கள், அணைகள் என்பன துணை புரிகின்றன. முற்காலத்தில் மரபுரிமையாக எமக்குத் தரப்பட்டவை இன்றைய சமுதாயத்தின் நிலைத்திருப்புக்கு உதவுதல் தெளிவாகிறது. கலாசார மரபுரிமைகளும் அவ்வாறான வையாகும். முற்காலத்தில் மரபுரிமையான நற்பண்புகள், பழக்க வழக்கங்கள் என்பன தற்கால சமுதாயத்தின் நிலைத்திருப்புக்குத் தேவைப்படுகின்றன. இந்த அனைத்துக் கலாசார மரபுரிமைகளும் எமக்கு உரித் தாவதற்கான காரணம் எமது முன்னோர் கள் அவற்றைப் பாதுகாத்து எமக்குக் கையளித்தமையேயாகும். எனவே அவற்றைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியி னருக்குக் கையளிப்பது எமது பொறுப்பும் கடமையுமாகும்.

செயற்பாடு

''எமது பண்பாட்டு உரிமைக ளைப் பாதுகாப்போம்'' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக.

**சாராம்சம்**

- இலங்கை கலாசார உரிமைகள் பலவற்றைக் கொண்டதொரு நாடாகும்.
- கலாசார மரபுரிமைகளை தொட்டுணரக்கூடிய உரிமைகள், தொட்டுணரமுடியாத உரிமைகள் என இரு வகைப்படுத்தலாம்.
- இலங்கை உலக மரபுரிமையாக ஆறு இடங்களை உலகுக்கு வழங்கியுள்ளது.
- இலங்கையின் தனித்துவத்தை உலகுக்கு எடுத்துக் காட்டவும் எமது பண்பாட்டைப் பேணவும் எமது கலாசார மரபுரிமைகளை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

# 4 பிற்கால ஆட்சி மையங்கள்

**அறிமுகம்**

அநுராதபுர இராச்சியம் 1500 வருடங் களாகவும் பொலன்னறுவை இராச் சியம் 150 வருடங்களாகவும் ஆட்சி மையங்களாகத் திகழ்ந்தமை பற்றி இதற்கு முன்பு கற்றுள்ளோம். இவ்வாறு அநுராதபுரமும், பொலன்ன றுவையும் தலைநகர்களாகத் திகழ்ந் துள்ள காலப்பகுதி இராசரட்டை நாகரிகம் எனப்படுகிறது. கி.பி. 1215 இல் பொலன்னறுவையின் வீழ்ச்சி யைத் தொடர்ந்து கி.பி. 1415 இல் கோட்டை இராச்சியத்தின் ஆரம்பம் வரையான 200 வருட காலத்தில் ஐந்து தலைநகரங்கள் உருவாகின. இவ்வாறு தலைநகர்கள் இடம் பெயர்ந்தமைக்கான காரணங்கள், அந்தந்த இராச்சியங்களின் முக்கிய ஆட்சியாளர்கள், இக்கால கட்டத்தில் நாட்டின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த காரணிகள், அரசியல் பொருளி யல் வெற்றிகள் பற்றி இப்பாடத்தின் மூலம் உங்களுக்குக் கற்றுக் கொள்ள முடியும்.

முதலாம் விஜயபாகு, மகா பராக்கிரம பாகு ஆகிய மிக முக்கியமான அரசர்களின் தலைநகராகத் திகழ்ந்த பொலன்னறுவை நிசங்கமல்லனின் ஆட்சியை அடுத்து வீழ்ச்சியுறத் தொடங்கியது. நிசங்கமல்ல மன்னனுக்குப் பின்னர் பலவீனமான ஆட்சியாளர்கள் பதவிக்கு வந்தமையால் அவர்களுக்கு அரசியல் உறுதியைக் கட்டியெழுப்பிக் கொள்ளக்கூடிய ஆற்றல் காணப்படவில்லை. இவ்வாறு ஆட்சி பலவீனப்பட்டுச் செல்கையில் கலிங்க மாகன் பெரும் படையுடன் இலங்கைக்குப் படையெடுத்து வந்தான். 1215 இல் இடம்பெற்ற படையெடுப்பிற்கு முகம் கொடுப்பதற்கு அக்காலத்தில் பொலன்ன றுவையின் அரசனாக இருந்த பராக்கிரம பாண்டியனுக்கு இயலாமையால், நாடு ஆக்கிரமிப்புக்கு உள்ளானது.

மாகனின் படை பொலன்னறுவையைக் கைப்பற்றி ஆட்சி செய்கையில், பாது காப்பான பல்வேறு இடங்களில் கோட் டைகளை நிறுவிக் கொண்டு கலிங்கமாகன் தெற்கிற்கு வருவதற்கு இடங் கொடாமல் நாட்டையும் மக்களையும் பாதுகாத்த தலைவர்கள் சிலரைப்பற்றி மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- மினிப்பேயில் கந்தெனிய குன்றில் கோட்டை ஒன்றை அமைத்துக் கொண்ட சங்க சேனாதிபதி
- யாப்பகுவ குன்றின் உச்சியில் கோட்டை ஒன்றை அமைத்துக் கொண்ட சுப சேனாதிபதி.
- உறுகுணையில் கோவிந்த மலையின் உச்சியில் கோட்டை ஒன்றை அமைத்துக் கொண்ட புவனேகபாகு இளவரசன்.


இவ்வாறு எதிரிகளின் படை நகர்வைக் கட்டுப்படுத்திய தலைவர்கள் இவர்களாவர். அவர்களின் நடவடிக்கையால் உரு 4.1 ஆம் வரைபில் காட்டப்பட்டுள்ளபடி தெற்கிற்கு ஆக்கிரமிப்பாளர் வருவதைத் தடை செய்த விதம் உங்களுக்கு விளங்கியிருக்கும்.

இத் தலைவர்கள் மாகனின் படையினர் தெற்கிற்கு வருவதைத் தடுத்தாலும் சக்தி வாய்ந்த அரசு ஒன்றை உருவாக்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டதாக அறியமுடியவில்லை. இச் சவாலை எதிர்கொள்வதற்கு துணிந்து செயற்பட்டவர் வன்னித் தலைவராகப் புகழ்பெற்ற 3 ஆம் விஜயபாகு மன்னரா வார். அவர் தம்பதெனிய இராச்சியத்தைத் தோற்றுவித்தார். இதிலிருந்து கோட்டை தலைநகராகும் வரை மற்றும் மூன்று தலை நகர்கள் உருவாயின.


இவ்வாறு காலத்துக்குக் காலம் இராச் சியங்கள் உருவாவதற்கான தேவைகளா வன.

1. பாதுகாப்புக் காரணிகள்
2. பொருளாதாரக் காரணிகள்

பொலன்னறுவை இராச்சியம் வீழ்ச்சியுற் றதன் பின்னர் புதிய அரச வம்சங்கள் பலவும் அதிகாரத்திற்கு வந்தன. காலத்திற்குக் காலம் இவ்வரசு உரிமையாளர்களிடையே ஏற்பட்ட மோதல்கள் போன்ற உள்வாரி யான விடயங்களிலிருந்தும் அந்நிய நாடுகளில் இருந்து எழுந்த ஆக்கிரமிப்பு, அச்சுறுத்தல்கள் போன்ற வெளிவாரியான தாக்குதல்களிலிருந்தும் தலைநகரைப் பாதுகாத்துக் கொள்வது மிக முக்கியமான ஒரு விடயமாக இருந்தது. இதனால் தம்பதெனியவிலிருந்து யாப்பகுவவிற்கும் அங்கிருந்து குருநாகலுக்கும் பிறகு கம்பளைக்கும் பாதுகாப்புக் கருதி அடிக்கடி தலைநகரம் இடம் மாறியது.




உரு 4.1 இலங்கையின் புராதன பிரதேசப் பிரிவுகள்





உரு 4.2 பொலன்னறுவை இராச்சியத்தின் பின்னர் நிலவிய தலைநகரங்கள்

இக்காலத்தில் உலகில் நிலவிய புதிய வர்த்தக நடவடிக்கைக்கு அமைவாக இலங்கையிலும் வெளிநாட்டு வர்த்தகத்தில் புதிய போக்குகள் ஏற்பட ஆரம்பித்தன. இராசரட்டை நாகரிக காலத்தில் பாரம்பரிய வர்த்தகப் பொருட்களான யானை, முத்து, இரத்தினம் என்பவற்றைப் போல இலங்கையின் வாசனைத் திரவியங்களுக்கும் குறிப்பிடத்தக்க கேள்வி ஏற்பட்டது. இதனால் வாசனைத் திரவியங்கள் விளையும் ஈரவலயம், பொருளாதார நடவடிக்கைகளுக்கு மிகவும் பொருத்தமானதாக இருந்தது. இவ்வாறான வெளிவாரிப் பொருளாதார விளைவுகளுக்கு விவசாய, வர்த்தகத் துறைகளுக்கு முகம்கொடுக்க நேர்ந்த உள்நாட்டுப் பொருளியல் நடவடிக்கைகளும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. இராசரட்டை நீர்ப்பாசனத் தொகுதி அழிவுற்று, ஒரு காலகட்டத்தில் அப்பிரதேசம் கைவிடப் பட்டபடியால் திரும்பவும் அவற்றை அபிவிருத்தி அடையச் செய்வது சிரமமாக இருந்தது. ஈரவலயத்திற்குப் பொருத்தமான சிறிய வயல்களில் பயிரிடுவதற்கும் படிமுறைப் பயிர்ச் செய்கைக்கும் மக்கள் பழக்கப்பட்டனர். தினையரிசி, மெனேரி போன்ற உலர் தானியங்களையும் மரக்கறி, பழவகைகள் என்பவற்றையும்பயிரிட்டனர். இவ்வாறான பாதுகாப்புத் தேவைகளாலும் பொருளியல் காரணிகளாலும் இராச்சியங்கள் ஈரவலயத்தை அண்டி உருவாக்கிக் கொள்ளப் பட்டதாக அறியமுடிகிறது.

## தம்பதெனிய இராச்சிய காலம் கி.பி. 1232 - 1272

### மூன்றாம் விஜயபாகு மன்னன் (கி.பி. 1232 - 1236)

பிரதேசத் தலைவரான இவர், தம்பதெனியவைத் தலைநகராகக் கொண்டு அரசரானார். அக்கால இலங்கை உருகுணை, பிஹிட்டி, மாயா என்று பிதேசங்களாகப் பிரிந்து காணப்பட்டது. இவற்றுள் மாயரட்டையை ஐக்கியப்படுத்திக் கொள்வதற்கு இவரால் முடிந்தது.



உரு 4.1 தம்பதெனிய அரச மாளிகைக்குள் பிரவேசிக்கும் படிவரிசையின் ஒரு பகுதி இராசரட்டை நாகரிகத்தின் பின்னர், இவ்வாறான பாதுகாப்பான இடங்களிலேயே இராச்சியங்கள் உருவாக்கிக் கொள்ளப்பட்டன.

கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு இடம் பெற்ற சந்தர்ப்பத்தில் பௌத்த குருமார் தந்த, பாத்திர தாதுக்களை கொத்மலைக்கு

எடுத்துச் சென்று பாதுகாப்பான ஓரிட டத்தில் வைத்திருந்தனர். மூன்றாம் விஜய பாகு மன்னன் இப்புனிதப் பொருட்களை எடுத்துவந்து கேகாலை மாவட்டத்தில் பெலிகலை மலையின் உச்சியில் தலதா மாளிகை ஒன்றைக் கட்டி அதில் பிரதிஷ்டை செய்தான். இது இவனால் ஆற்றப்பட்ட பெரும் பணியாகும். இலங்கையின் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு புனித தந்தத்தின் உரிமையாளராக இருக்க வேண்டும் என்ற நம்பிக்கை நிலவி வந்தது. இதனால் இவருக்கு மக்களின் ஆதரவு கிட்டியிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

### இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன்
### (கி.பி. 1236 - 1270)

மூன்றாம் விஜயபாகு மன்னனை அடுத்து, அவரது மூத்த மகனான இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனானான்.



உரு 4.2 பெலிகல விகாரை

அவன் இலங்கையை மீண்டுமொருமுறை ஐக்கியப்படுத்தி, அமைதியான நாடு ஒன்றைத் தோற்றுவித்தான். இதற்காகப் பல சவால்களை அவன் எதிர் கொண்டான். எதிரிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாத்துக் கொண்டமை அவற்றில் பிரதானமான ஒன்றாகும். அதற்காக அவன் மூன்று போர்களை மேற்கொண்டான்.

1. கலிங்க மாகனைக் கொன்று நாட்டை மீட்டமை.
2. சந்திரபானுவின் முதலாவது ஆக்கிர மிப்பை வென்றமை
3. சந்திரபானுவின் இரண்டாவது ஆக்கிர மிப்பின் போது அவனைக் கொன்று வெற்றி பெற்றமை.

#### கலிங்க மாகனை வெற்றிகொள்ளல்

கி.பி. 1215 இலிருந்து 40 ஆண்டு காலமாக மாகன் இலங்கையை ஆட்சி புரிந்தான். அவனது படையை வென்று இராசரட்டையை மீளவும் கைப்பற்றிக் கொள்வதற்காகப் பெரும் போர் ஒன்றை மேற்கொள்வதற்கு இரண்டாம் பராக்கிரமபாகு மன்னுக்கு நேர்ந்தது. இறுதியில் பொலன்னறுவை நகரத்தை முற்றுகையிட்டு இம்மன்னனால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் மாகன் தோல்வியுற்றான்.

#### சந்திரபானுவின் ஆக்கிரமிப்பு

தென்கிழக்கு ஆசியாவில் மலாயா குடாநாட்டில் இருந்து சந்திரபானு எனும் ஆக்கிரமிப்பாளன் இருமுறை படையெடுப்புகளை மேற்

கொண்டான். இவ்விரு சந்தர்ப்பங்களிலும் அவனை வெற்றி கொள்வதற்கு இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனால் முடிந்தது.

## இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் பணிகள்

- ★ தனது தந்தையால் பெலிகலை விகாரையில் வைக்கப்பட்டிருந்த புனித தந்தத்தை தம்பதெனியா விற்கு எடுத்து வந்து அங்கு தலதா மாளிகையைக் கட்டுவித்தமை.
- ★ தேவபதிராஜ என்ற அமைச்சர் மூலம் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண் டமை.
- ★ சிவனொளிபாதமலைக்குச் செல் லும் பாதைகளைச் சீர்திருத்தி அமைத்தமை.
- ★ நந்தவனங்களை அமைத்தமை, பாலங்களை நிர்மாணித்தமை
- ★ பொருளியல் நடவடிக்கையாக தெங்குப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டமை.

## சிறந்த அறிஞனாகத் திகழ்ந்தமை

இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் சிங்களம், பாளி, சமஸ்கிருத மொழிகளைக் கற்ற சிறந்த கல்விமானாவான். எனவே ‘கலிகால சாஹித்ய சர்வக்ஞ பண்டித’ எனும் புகழ் நாமத்தைப் பெற்றான். ‘கவிசிலுமின’ இம்மன்னனால் எழுதப் பட்ட காவிய நூலாகும்.

## யாப்பகுவ இராச்சியம்

இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் 1270 ஆம் ஆண்டில் மரணமடைந்தான். அடுத்து அவரது மகனான நான்காம் விஜயபாகு தம்பதெனியாவின் மன்னனானான். இரண்டே ஆண்டுகளுக்குள் மாளிகையில் ஏற்பட்ட சதி ஒன்றினால் இவன் கொலை செய்யப்பட்டான். இவரது சகோதரனான முதலாம் புவனேகபாகு (கி.பி. 1272 - 1284) அடுத்து மன்னனானான். இவன் பாதுகாப்புக் கருதி யாப்பகுவவைத் தனது தலைநகராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டான்.

முதலாம் புவனேகபாகுவால் ஆற்றப்பட்ட பணிகளாவன :

- ➢ யாப்பகுவவில் தலதா மாளிகையைக் கட்டுவித்தமை.
- ➢ பௌத்த நூல்களை எழுதுவித்தமை.
- ➢ எகிப்துடன் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

எகிப்துடன் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முதலாம் புவனே கபாகு மன்னன், கெய்ரோ நகரத்திற்குத் தூதுக் குழு ஒன்றை அனுப்பி வைத்தான். அக்குழுவினர்வசம் தம்மால் வழங்கக் கூடிய பொருள்களின் பட்டியல் ஒன்றையும் சமர்ப்பித்திருந்தான்.

## குருணாகலை இராச்சியம்

முதலாம் புவனேகபாகு மன்னனின் பின்னர் அவரது மகன் இரண்டாம் புவனேகபாகு அரசனானான். அவன் தனது தலைநகராகக் குருணாகலையைத் தெரிவுசெய்து கொண் டான்.

இரண்டாம் புவனேகபாகுவின் பின்னர் அவரது மகனான நான்காம் பராக்கிரம பாகு அரசேற்றான். இவன் குருணாகலைக் காலத்தின் சிரேஷ்ட அரசனாவான்.

குருணாகல் காலத்தில் இடம்பெற்ற பணிகள் வருமாறு :

- பாளி மொழியில் எழுதப்பட்டிருந்த 'பன்சிய பனஸ் ஜாதகய' எனும் நூல் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டமை.
- தலதா சிரித, சிங்கள போதி வங்ஸய, அநாகத வங்ஸய போன்ற இலக்கியங்கள் எழுதப்பட்டமை.

## கம்பளை இராச்சியம்

குருணாகலை இராச்சியத்திற்குப் பின்னர் நான்காம் புவனேகுபாகு மன்னனால் கம்பளை இராச்சியம் தோற்றுவிக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் ஆரியச்சகரவர்த்தி அரச வம்சத்தினரால் யாழ்ப்பாண இராச்சியம் ஆளப்பட்டு வந்தது. அழகேஸ்வர வம்சத்தின் கீழ் றைகமையிலும் ஆட்சி இடம்பெற்று வந்தது. நான்காம் புவனேக பாகு அரசனின் பின்னர் ஐந்தாம் புவனேக பாகு கம்பளைக்கு அரசனானான். இக்கால கட்டத்தில் இடம்பெற்ற முக்கியமான நடவடிக்கைகள்.

- ★ அரசருக்கு மேலதிகமாக நிஸ்ஸங்க அழகேஸ்வர, சேனாதி லங்காதீகார எனும் அதிகாரம் மிக்க தலைவர்கள் இருவர் காணப்பட்டமை.
- ★ நிஸ்ஸங்க அழகேஸ்வர அமைச்சர் ஸ்ரீ ஜயவர்தனபுரவில் கோட்டை ஒன்றை நிறுவி, ஆரியச் சக்கரவர்த்தியின் படைகளைப் பின்வாங்கச் செய்தமை.
- ★ இபன் பதூதா என்ற அராபிய தேச சஞ்சாரி இலங்கைக்கு வந்தமை. கம்பளைக் காலத்தின் இறுதிப் பகுதியில் சீனாவின் செங்ஹோ என்ற தளபதி இலங்கையை ஆக்கிரமித்தமை.
- ★ கடலாதெனிய, லங்காதிலக விகாரைகளும், எம்பெக்க தேவாலயமும் கட்டப்பட்டமை.



உரு 4.3 லங்காதிலக



உரு 4.4 கடலாதெனிய விகாரை

## கோட்டை இராச்சியம்

கம்பளை இராச்சியத்தை அடுத்து, ஆறாம் பராக்கிமபாகு மன்னனால் கோட்டை தலைநகராக்கிக் கொள்ளப்பட்டது.பராக் கிரமபாகுவின் தந்தை ஜயமஹலே என்பவராவார். தாயார் சுனேத்ராதேவி ஆவார். அவன் வன்னிப் பிரதேசத்தையும் யாழ்ப்பாணத்தையும் வென்று நாட்டை ஒன்று படுத்தினான்.

யாழ்ப்பாணத்தை வெற்றிகொள்வதற்கு ஆறாம்பராக்கிரமபாகு மன்னனால்சப்புமல் குமரன் அனுப்பப்பட்டான். அவன் யாழ்ப் பாணத்தைக் கைப்பற்றிக் கொண்டான். மலைநாட்டு ஆட்சியாளனான ஜோதிய இளவரசனும் அரசனுக்கு எதிராக மலை நாட்டில்கிளர்ச்சி ஒன்றை மேற்கொள்ளவே, அரசன் அம்புலுகல குமாரனை அனுப்பி அக்கிளர்ச்சியை அடக்கினான்.



உரு 4.5 யாப்பஹூவ கோட்டை

**ஆறாம் பராக்கிரமபாகு மன்னனது காலத் தில் இடம்பெற்ற முக்கிய விடயங்களா வன:**

1. ஐக்கியப்பட்ட நாட்டில் அமைதியான ஆட்சியை ஏற்படுத்தியமை
2. நாட்டில் கல்வித்துறை எழுச்சியுற் றமை. முக்கிய பிரிவெனாக்கள் உரு வாக்கப்பட்டமை. பெப்பிலியானே சுனேத்ராதேவி பிரிவெனா, கேரகல பத்மாவதி பிரிவெனா என்பன இதற்கு உதாரணங்களாகும்.



உரு 4.6. கேரகல பத்மாவதி பிரிவெனா


3. கல்விமான்கள் தோற்றம் பெற்றமை. வீதாகம மைத்திரி தேரர், தொட்ட கமுவே ஸ்ரீ ராகுல தேரர் என்போர் அத்தகையவர்களுள் குறிப்பிடத்தக்க வர்கள்.

4. சிறப்பான இலக்கிய ஆக்கங்கள் எழுதப்பட்டமை. செலலிஹினி சந் தேச, ஹங்ஸ சந்தேச, கிரா சந்தேச, (தூது பிரபந்தங்கள்), பெரகும்பா சிரித, காவியசேகர என்பன இக்காலத்தில் எழுதப்பட்ட நூல்களுள் சிலவாகும்.

## யாழ்ப்பாண இராச்சியம்

பொலன்னறுவை இராச்சியம் வீழ்ச்சியுற்ற தன் பின்னர் யாழ்ப்பாணத்தில் பிராந்திய அரசொன்று உருவானது. யாழ்ப்பாண வைபவமாலை, செகராசசேகர மாலை என்ற நூல்கள் அவ்விராச்சியத்தைப் பற்றிய தகவல்களை முன்வைக்கும் மூலாதாரங் களாகும்.

யாழ்ப்பாண அரசவம்சம் ஆரியச்சக்கர வர்த்தி பரம்பரை என்று குறிப்பிடப்படு கிறது. விஜய கூழங்கை சிங்கை ஆரியனே இவ்வம்சத்தின் முதல் மன்னனாவான். இவ்வம்சத்தைச் சேர்ந்த பன்னிரு மன்னர்கள் யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்துள்ளனர். கோட்டைக் காலத்தில் இவ்விராச்சியம் அதன்கீழ் கொண்டு வரப்பட்டது. என்றாலும் பின்னர் அவர்கள் தமது இராச்சியத்தை மீட்டுக் கொண்டனர். போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது பரராஜசேகர மன்னன் யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்தான். சங்கிலி மன்னனுடைய காலத்தில் போர்த்துக்கேயருடன் தொடர்பு ஏற்பட்டு, இறுதியாக 1619 ஆம் ஆண்டு அவர்கள் இவ்விராச்சியத்தைத் தமதாக்கிக் கொண்டனர்.





உரு 4.6 நல்லூர் கந்தசுவாமி கோவில்

**சாராம்சம்**

- இராசரட்டை நாகரிக காலத்திற்குப் பின்னர் பாதுகாப்பு, பொருளாதார காரணங்களுக்காக இந்நாட்டில் இராச்சியங்கள் குறுகிய காலத்தில் இடத்திற்கிடம் மாற்றமுற்றுச் சென்றன.
- அரசியல் உறுதி காணப்பட்ட சந்தர்ப்பங்களில் பொருளியல் முன்னேற்றம் காணப்பட்டது.
- அக்கால கட்டத்தில் கல்வி, சமயத் துறைகளிலும் அபிவிருத்தி காணப் பட்டது.
- அதிகாரத்தைப் பெற்றுக் கொள் வதற்காக உள்நாட்டு வெளிநாட்டுப் போராட்டங்கள் இக்காலத்தில் இடம் பெற்று வந்தன.
- இலங்கை முழுவதும் ஒரே ஆட்சி யின் கீழ் கொண்டு வரப்பட்டது கோட்டைக் காலத்திலாகும்.

## குறுக்கெழுத்து புதிர்




மேலிருந்து கீழ்

2. கோட்டை இராச்சிய காலத்தில் மலை நாட்டில் இருந்த இராச்சியம் இவ்வாறு அழைக்கப்பட்டது.
3. கம்பளைக் காலத்தில் செதுக்கல் வேலைப் பாட்டிற்குப் பிரசித்தி பெற்ற ஆலயம்.
4. ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் தன் ஆட்சி மையமாகத் தெரிவு செய்த இந்தப்பிரதேசம் அக்காலத்தில் பிரசித்தி பெற்ற அரணாக விளங்கியது.
5. தம்பதெனியக் காலத்தில் சிறந்த கல்வி மானாக விளங்கிய மன்னன்.
10. நான்காம் புவனேகுபாகு இந்த இரசதானியின் முதலாவது மன்னனாவான்.
11. தம்பதெனியாவின் பின்னர் இலங்கையின் தென்மேற்குப் பிரதேசத்தில் இராசதானியாக விளங்கியது.
12. கோட்டை இராச்சியக் காலத்தில் படைதிரட்டி யாழ்பாணத்தைக் கைப்பற்றியவன்.
15. பெலிகல அமைந்துள்ள மாவட்டம் (தலை கீழாக உள்ளது.)

இடமிருந்து வலம்

1. பொலன்னறுவையின் வீழ்ச்சிக்கு இவனது கடுமையான செயல்களும் காரணமாயின.
3. பாரிய கற்குன்றிற்கு அருகில் அமைந்துள்ள குருணாகல் இப்பெயரால் அழைக்கப்பட்து.
6. குருணாகல் இராசதானிக் காலத்தில் சிங்களத் தில் மொழி பெயர்க்கப்பட்ட பெறுமதி வாய்ந்த நூல்
7. ஜோதிய சிடான கண்டி இராச்சியத்தில் ஏற்படுத் திய கலகத்தை முறியடித்த இளவரசன்.
8. யாப்பகுவ இராசதானிக் காலத்தில் இலங்கை யுடன் வர்த்தக தொடர்பினை ஏற்படுத்திய நாடு.
9. பொலன்னறுவையின் பின்னர் இலங்கையின் இராசதானியாக விளங்கியது.
11. ஆரியச் சக்கரவத்திகளால் ஆட்சி செய்யப்பட்ட இராச்சியம்
12. இரண்டாம் பராக்கிமபாகுவின் ஆட்சிக் காலத்தில் படையெடுத்து வந்த ஜாவகன்.
13. தம்பதெனியாவிலிருந்து தன் இராச்சியத்தை யாப்பகுவைக்கு மாற்றிக் கொண்டவன்.
14. மூன்றாம் விஜயபாகு மன்னன் இந்த இடத்தில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த தந்ததாதுவைப் பெலிகலைக்குக் கொண்டு வந்தான்.

# 5 ஐரோப்பாவின் புராதன நாகரிகங்கள்

**அறிமுகம்**

உலகில் நிலவிய புராதன நாகரிகங்கள் பற்றி ஆறாந் தரத்தில் கற்றவை உங்கள் நினைவில் இருக்கலாம். அந்நாகரிகங்கள் பற்றிய விடயங்களுள் பலவும் அண்மைக்கால தொல்பொருள் அகழ்வுகளின்போது பெறப்பட்டவை ஆகும். இங்கு நாம் கவனத்தில் கொள்ளும் கிரேக்க, உரோம நாகரிகங்கள் அவ்வாறானவை அல்ல. இலக்கிய உலகிற்கு அவை வெகு தொலைவானவையுமல்ல. அந்நாகரிகங்கள் மூலம் நவீன ஐரோப்பிய நாகரிகம் ஊட்டம் பெற்றிருப்பதே அவற்றின் முக்கியத்துவமாகும். கிரேக்க, உரோம நாகரிகங்களின் சிறப்பியல்புகளை இப்பாடத்தின் ஊடாக கற்கப்போகின்றீர்கள்.


## 5.1 கிரேக்க நாகரிகம்

### அமைவிடம்

மேற்காக அயோனியன் கடலுக்கும் கிழக்காக ஈஜியன் கடலுக்கும் மத்தியில் மத்தியதரைக் கடலினுள் வியாபித்துள்ள குடாநாடும் அதற்குத் தெற்காக அமைந்துள்ள கிரீட் தீவு உட்பட ஏனைய தீவுக்கூட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு கிரேக்க நாகரிகம் உருவானது.

இந் நாகரிகத்துக்குரிய தீவுகளில் பெரியது கிரீட் ஆகும். கிரேக்கம் மலைகள் நிரம்பிய நாடாகும். அவற்றினுள் அழகான ஒலிம்பஸ் மலை மிகவும் புகழ் பெற்றதாகும். இம்மலைத் தொடர்களில் இருந்து பாய்ந்தோடும் நதிகளால் விவசாயத்திற்கு உகந்த சூழல் ஒன்று நிலவியது. அங்கு நிலவிய சிறந்த காலநிலை மந்தை வளர்ப்புக்கும் மக்கள் வாழ்க்கைக்கும் பொருத்தமானதாகும்.

பல்லுருக் கடற்கரையானபடியால் இயற்கைத் துறைமுகங்கள் பலவும் காணப்படுகின்றன. புராதன கிரேக்கத்தின் வெளிநாட்டு உறவுகளுக்கும் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் அது பேருதவியாய் அமைந்தது.




உரு 5.1 கிரேக்க நாகரிகம்

## கிரேக்க நாகரிகத்தின் ஆரம்பம்

கிரேக்க நாகரிகம் ஆரம்பமாவதற்கு முன்னர் கிரீட் தீவை அடிப்படையாகக் கொண்டு புராதன நாகரிகம் ஒன்று நிலவியது. அது மினோவன் நாகரிகம் எனப்பட்டது.

வேறு பிரதேசங்களிலிருந்து பல்வேறு கோத்திரங்களினதும் இனக் குழுக்களினதும் ஆக்கிரமிப்புக் காரணமாக மினோவன் நாகரிகம் வீழ்ச்சியடைந்தது. அவ்வாறு ஆக்கிரமித்தது இந்தோ ஐரோப்பிய இனக்குழு எனக் கருதப்படுகின்றது. அக் குழுவினர் சிறு கிராமங்களை அமைத்துக் கொண்டதன் மூலம் கி.மு 2000 ஆம் ஆண்டளவில் கிரேக்க நாகரிகம் தோன்றியது.

## நிர்வாகம்

மேற் குறிப்பிட்ட பல்வேறு கோத்திரத்தவர்களாலும் மக்கள் கூட்டத்தினராலும் உருவாக்கிக் கொள்ளப்பட்ட கிராமங்கள் அபிவிருத்தி அடைந்து நகரங்கள் தோன்றின. இவ்வாறான நகரங்களை அண்டி கி. மு 700 ஆம் ஆண்டளவில் நகர அரசுகள் பலவும் உருவாயின. கிரீஸில் நிலவிய இந்நகர அரசுமுறை **நகரஅரசு முறை** எனப் பெயர் பெற்றது. அந்நகர அரசுகளுள் எதென்ஸ், ஸ்பாட்டா என்பன பிரதானமானவையாகும். இந்நகர அரசுகளுள் துலாம்பரமான பண்புகள் பல காணப்பட்டன. அவற்றுள் முக்கியமானவை சில வருமாறு :

- நிலப்பரப்பு சிறியதாயிருந்தமை
- சனத்தொகை வரையறைக்குட்பட்டிருந்தமை.

➢ பிரஜைகளுக்கு மாத்திரமே அரசியல் உரிமை இருந்தமை.

நகர அரசுகளின் மக்கள் ஒரே இடத்தில் ஒன்றுகூடி கலந்துரையாடி அரசியல் தீர்மானங்களை மேற்கொண்டனர். இவ் வாறாக பிரஜைகள் தாமே அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வது நேரடி ஜனநாயகமுறை எனப்பட்டது. இதிலிருந்து தான் இன்றைய நவீன உலகில் நிலவும் பாராளுமன்ற ஜனநாயகத்திற்கான எண்ணக் கரு பிறந்தது.

பெரிக்ளீஸ் எனும் ஆட்சியாளனின் காலம் கிரேக்கத்தின் பொற்காலம் எனக் கருதப்படுகிறது. அவன் எதென்ஸ் நகர மத்தியில் உள்ள சிறிய குன்று ஒன்றில் அக்ரோபொலிஸ் எனும் தலைநகரத்தை உருவாக்கிக் கொண்டான்.

பிற்காலத்தில் கிரேக்க நகர அரசுகள் ஒன்றை ஒன்று முந்திச் செல்வதற்கு முயற்சி களை மேற்கொண்டன. இந்த குழப்ப நிலையைப் பயன்படுத்திக் கொண்ட மெஸிடோனியாவின் பிலிப் மன்னன் கிரேக்கத்தை ஆக்கிரமித்தான். அவனின் திடீர் மரணத்தை அடுத்து அவனது மகனான மகா அலெக்ஸாந்தர் கிரேக்கத்தைக் கைப் பற்றி அதன் அரசனானான்.

செயற்பாடு

கிரேக்கத்தின் தேசப்படத்தை பிரதி செய்து, அதில் எதென்ஸ் ஸ்பாட்டா, திரோய், கொரிந்து நகரங்களையும் கிரீட் தீவையும் அயோனியன் கடல், ஈஜியன் கடல், ஒலிம்பஸ் மலை என்பவற்றையும் குறித்துப் பெயரிடுக.

## பொருளாதாரம்

புராதன கிரேக்க மக்களின் வாழ்க்கை முறை விவசாயம், மந்தை வளர்ப்பு, வர்த்தகம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

**விவசாயம்**

➢ கோதுமை, பார்லி போன்ற தானியங் களும் திராட்சை, ஒலிவ் போன்ற பழவகைகளும் முக்கியத்துவம் பெற்றி ருந்தன.





உரு 5.2 கிரேக்க அலங்கார மட்பாண்டங்கள்



உரு 5.3 ஒலிவ் மரம்

**மந்தை வளர்ப்பு**

- மாடு, ஆடு, செம்மறியாடு போன்ற மிருகங்களை வளர்த்தனர்.

**வியாபாரம்**

- இந்தியா, சீனா, இலங்கை போன்ற நாடுகளுடன் வியாபாரத் தொடர்பு களைக் கொண்டிருந்தனர்.
- கிரேக்கர் இலங்கையைத் தப்ரபேன் எனக் குறிப்பிட்டனர்.
- கிரேக்கரின் வர்த்தகப் பொருள்களாக நறுமணப் பொருள்களும் அலங் கார மட்பாண்டங்களும் லினன் துணி வகைகளும் வைன் பானமும் (திராட்சை ரசமும்) காணப்பட்டன.


## வாழ்க்கை முறை

புராதன கிரேக்க மக்கள் சமூகம் பிரபுக்கள், சாதாரண குடிமக்கள், அடிமைகள் எனும் முப்பிரிவினரைக் கொண்டிருந்தது. குடும்பம் சிறிய அலகாகக் காணப்பட்டது. மக்கள் எளிமையான வாழ்க்கை முறைக்குப் பழக்கப்பட்டிருந்தனர். கிரேக்கரின் உடலமைப்பு பொதுவாக ஒத்த தன்மையைக் கொண்டிருந்தது.

- மரக்கறி, இறைச்சி, மீன், பார்லி, வைன் என்பன உணவு பானங்களாக இருந்தன.
- பிரபுக்கள் மாடி வீடுகளில் வாழ்ந்தனர்.
- நடுமுற்றத்தைச் சூழ படுக்கை அறைகள், சமையலறை, களஞ் சிய அறைகள் என்பன கட்டப் பட்டிருந்தன.
- சாதாரண மக்கள் சிறிய வீடுகளில் வாழ்ந்தனர்.




உரு 5.4 கிரேக்கத்தின் புராதன வீடொன்றின் மாதிரி



உரு 5.5 புராதன கிரேக்கரின் ஆடையணிகள்

## கலை நடவடிக்கை

### கட்டடக் கலை

- பெரிய கட்டடங்களையும் மிகவும் அழகான தேவாலயங்களையும் அமைப்பதில் கிரேக்கர்கள் திறமை பெற்றிருந்தனர்.
- தேவாலயங்களைக் கட்டும்போது செப்பனிடப்பட்ட சுண்ணாம்புக்கல், வெண்பளிங்குக்கல், வர்ணசெங்கற்கள் என்பவற்றைப் பயன்படுத்தினர்.
- பாதீனன் ஆலயம் இதற்குச் சிறந்த உதாரணமாகும்.



உரு 5.6 பாதீனன் ஆலயம்

## சிற்பங்கள், சிலைகள்

- மனித சரீர அமைப்புகளின் இயற்கைத் தன்மை புலனாகும் விதமாக சிலை களை வடிவமைத்தனர்.
- பரிதி வட்டம் வீசும் விளையாட்டு வீரனின் சிலை இதற்குத் தகுந்த உதாரணமாகும்.
- சிலைகளை நிர்மாணிக்கும்போது யானைத் தந்தம், தங்கம் போன்ற வற்றைப் பயன்படுத்தியுள்ளனர். அதீனா தேவதையின் சிலை இதற்கு உதாரணமாகும்.

## நாடகம்


இன்பியல், துன்பியல் என இரு வகை நாடகங்கள் காணப்பட்டன. ஈசிகளஸ், செபொக்லீஸ், யூரிபீடிஸ், அரிஸ்டோபனிஸ் என்போர் பிரசித்தி பெற்ற நாடகக் கலைஞர்களாவர்.



உரு 5.7 திறந்த நாடக அரங்கு

## இலக்கியம்

- இலக்கிய நூல்களை எழுதுவதற்கு கிரேக்க மொழியைப் பயன்படுத்தினர்.
- வரலாற்றுக் கதைகள், வீர காவியங்கள் என்று உயர் இலக்கியங்கள் படைக் கப்பட்டன.
- ஹோமரின் இலியட், ஒடிஸி என்பவை வீர காவியங்களுக்கான உதாரணங்க ளாகும்.



உரு 5.8 ஹோமர்

➢ பெசிடிடீஸ் ஹெரடோடஸ், தியுசீடிஸ், அரிஸ் டோட்டல் என்போர் சிறந்த இலக்கிய கர்த்தாக்களாவர்.

## கல்வியும் தத்துவமும்

### கல்வி

பல்வேறு தொழில் தகைமை சார்ந்தோ ரையும், தத்துவ ஞானிகளையும், கலை ஞர்களையும் உருவாக்கக்கூடிய முன் னேற்றகரமான கல்வி முறை ஒன்று காணப் பட்டது. பிளேட்டோவின் அகடமி, அரிஸ்டோட்டலின் லைசியம் என்பன உன்னதமான கல்வி நிலையங்கள் ஆகும்.

### தத்துவம்

சோக்கிரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டோட் டல் என்போர் மகத்தான தத்துவ ஞானிகள் ஆவர்.

கிரேக்கரான ஹிப்போகிரடிஸ் மேற்குலக வைத்திய முறையின் தந்தையாக மதிக்கப்படுகிறார். ஆக்கிமிடிஸ் கணித, விஞ்ஞானத் துறைகளின் மகத்துவம் மிக்க அறிஞராவார்.

## சமயம்

➢ கிரேக்கத்தில் புனித யாத்திரைகளை மேற்கொள்ளல் பெருமளவுக்குக் காணக்கூடியதாக இருந்தது.

➢ அங்கு ஒவ்வொரு நகர அரசுக்கும் வெவ்வேறான தெய்வங்கள் காணப் பட்டன.

➢ சியுஸ் கிரேக்க தெய்வங்களுள் முதன் மையானவராகக் கருதப்படுகிறார்.

➢ சியுஸின் மகளான அதீனா கிரேக்கரின் வணக்கத்துக்குரிய பிரதான தெய்வ மாகும். பாதீனிய தேவாலயம் அவருக் கென்றே கட்டப்பட்டதாகும்.



உரு 5.9 அதீனா தேவதை


## விளையாட்டு

### விளையாட்டு வகைகள்

➢ ஓட்டம், மல்யுத்தம், பளு தூக்குதல், பரிதிவட்டம் வீசுதல் என்பன கிரேக் கரின் விளையாட்டுக்களில் முக்கிய மானவை ஆகும்.

இன்றைய ஒலிம்பிக் விளையாட்டின் ஆரம்பமும் கிரேக்கர்களிடம் இருந்தே தொடங்குகிறது. ஆதி காலத்தில் சியுஸ் தெய்வத்தை நினைவு கூர்வதற்காக மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் எல்லா நகர அரசுகளின் குடிமக்களும் பங்குபற்றினர்.

ஒலிம்பிக் விளையாட்டு கிரேக்கரின் ஒற்றுமையை வெளிக்காட்டும் ஒரு சந்தர்ப்பமாகும்.



உரு 5.10 பரிதிவட்டம் வீசும் வீரன்

செயற்பாடு

பின்வரும் தலைப்புக்களுக்கேற்ப கிரேக்க நாகரிகம் பற்றிய தகவல்களைத் தேடியறிந்து கையேடு ஒன்றைத் தயாரிக்குக.

- ஆரம்பம்
- பிரதான இயல்புகள்
- உலகுக்கு வழங்கிய அருஞ்செல்வங்கள்

### கிரேக்க நாகரிகத்தால் உலகிற்கு கிடைக்கப்பெற்ற கொடைகள்

நவீன ஐரோப்பாவைக் கட்டியெழுப்புவதற்கான ஆரம்ப அடித்தளம் கிரேக்க நாகரிகத்தாலேயே இடப்பட்டது.

- ஐரோப்பாவின் அரசியல், இலக்கியம், விஞ்ஞானம், கலைகள் உருவாவதற்கு கிரேக்க நாகரிகம் பெரும்பங்களிப்பை வழங்கியுள்ளது.
- கிரேக்க தத்துவஞானிகளினதும் சிந்தனையாளர்களினதும் போதனைகள், நவீன ஐரோப்பியச் சிந்தனைகளுக்கு வழிகாட்டியது.
- நவீன ஜனநாயக ஆட்சி முறையை உலகிற்குத் தந்துதவியவர்களும் கிரேக்கர்களேயாவர்.
- ஒலிம்பிக் விளையாட்டு, கிரேக்கர்களிடம் இருந்து நவீன உலகம் பெற்றுக் கொண்ட பெருங்கொடையாகும்.

## 5.2 உரோம நாகரிகம்

### அமைவிடம்

இத்தாலியின் உரோம நகரத்தை மையமாகக் கொண்டு இந்நாகரிகம் தோன்றியது. இத்தாலி, மத்தியதரைக் கடலை நோக்கி நீண்டுள்ள குடா நாடு ஒன்றாகும். கிழக்கில் அட்றியாட்டிக் கடலும் மேற்கில் மத்தியதரைக் கடலும் தெற்கில் அயோனியன் கடலும் இதனைச் சூழ்ந்து அமைந்துள்ளன. வடக்காக அமைந்துள்ள அல்ப்ஸ் மலையால் ஐரோப்பாவில் இருந்து இந்நாடு பிரிக்கப்பட்டுள்ளது. இத்தாலியின் மத்தியினூடாக வடக்கில் இருந்து தெற்காக அப்பினைன் மலை நீண்டு செல்கிறது. இம்மலையில் இருந்து ஊற்றெடுக்கும் தைபர் நதியின் ஊடாக உரோம் நகரம் வரை கப்பற் பயணத்தை மேற்கொள்ளக் கூடியதாக இருப்பது இந்நகரத்தின் வளர்ச்சிக்கான காரணிகளுள் ஒன்றாய் அமைந்தது.

## தோற்றம்

உரோம நாகரிகத்தின் தோற்றம் பற்றி பல்வேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன. ஐரோப்பாவில் இருந்து இத்தாலிக்கு வந்த இலத்தீனியர்கள் உரோமை உருவாக்கினர் என்பது ஒரு கருத்தாகும்.

ரொமியுலஸ் எனும் வீரன் ஒருவன் உரோம நகரைக் கட்டியெழுப்பினான் எனும் வாய்மொழிக் கதை ஒன்றும் நிலவுகிறது. உரோம் ஆதிகாலத்தில் இருந்தே சிறந்த வணிக நிலையமாக இருந்தமையால் ஏனைய பிரதேசங்களில் இருந்து வந்த மக்கள் இந்நாகரிகத்தினைக் கட்டியெழுப்பினர் என்பது பொதுவான ஒரு கருத்தாகும்.



உரு 5.11 உரோம நாகரிகம்

### ரொமியுலஸ் உரோம நகரத்தை உருவாக்கியமை பற்றிய வாய் மொழிக் கதை

அரச குடும்பத்தில் ஏற்பட்ட சதி ஒன்றினால் அரசுரிமையாளர்களான ரொமியுலஸ், ரீமஸ் எனும் இரட்டை சிசுக்களை நீரில் மூழ்கடித்துக் கொல்வதற்கு அரசன் ஆணை பிறப்பித்தான். இதனை செயற்படுத்துவதற்குப் பணிக்கப்பட்ட சேவகனுக்கு இக்குழந்தைகள் மீது ஏற்பட்ட அனுதாபத்தால் தடிகளாலான தொட்டில் ஒன்றில் மிதக்க விட்டு விட்டார். தனது குட்டிகள் இறந்து போன ஓநாய் ஒன்றிற்கு நதிக்கரையில் இவ்விரு சிசுக்களும் கிடைக்கப் பெற்றன.

அந்த ஓநாய் தனது குகைக்கு அக் குழந்தைகளை எடுத்துச் சென்று வளர்த்து வந்தது. வளர்ந்த பின்னர் இடையர் ஒருவரை இவர்கள் எதிர் கொண்டனர். அவர் தமது பிள்ளைகள் போல் இவர்களை வளர்த்து வந்தார். பின்னர் வாலிபப்பிராயத்தை அடைந்த இவர்கள், தமக்கென்று ஒவ்வொரு ஆட்சி மையத்தை உருவாக்கிக்கொள்ள எண்ணினார். ஆகையால் இருவரும் ஒவ்வொரு நகரத்தை உருவாக்கத் தொடங்கினர். ரொமியுலஸ் கட்டியெழுப்பிய நகருக்கு உரோம் என்ற பெயர் சூட்டப்பட்டது.

## ஆட்சி முறை

ஆரம்ப காலத்தில் கோத்திரம் அல்லது குடும்பத்தை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி முறை ஒன்று நிலவி வந்த தாகக் கருதப்படுகிறது. காலப்போக்கில் முடியாட்சி முறை உருவானது. பின்னர் முடியாட்சி முறையும் அழிவுற்று கி.மு. 509 இல் உரோமில் குழு ஆட்சிமுறை ஒன்று உருவானது. அம்முறையின் கீழ் ‘கொன்சல்’ எனப்பட்ட அதிகாரிகள் இருவரிடம் ஆட்சியதிகாரம் கையளிக்கப்பட்டு இருந்தது. அவர்களின் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக ‘செனட்’ சபை ஒன்றும் இருந்து வந்தது.

இவ்வாறாக உரோம், அரசியல் ரீதியாக முன்னிலைக்கு வந்ததுடன் முழு இத்தாலியத் தீபகற்பமும் உரோம ஆட்சிக்கு உட்பட்டது. ஆகையால் கி.மு. 27 இல் உரோமப்பேரரசு உருவானது. பின்னர் ஸ்பானியா, இங்கிலாந்து, பிரான்ஸ், மத்தியதரைக்கடலைச் சூழவுள்ள பிரதேசங்களை அது தமது பேரரசில் இணைத்துக் கொண்டது.

செயற்பாடு

ஐரோப்பியப் படம் ஒன்றில், இத்தாலியத் தீபகற்பம், உரோம நகரம், தைபர் நதி, அல்ப்ஸ் மலை, அப்பினைன் மலை, மத்தியதரைக் கடல், எட்றியாடிக்கடல், பொம்பே என்பவற்றைக் குறிக்குக.

## புகழ் பெற்ற உரோமப் பேரரசர்கள்

- ஜூலியஸ் சீசர் போர் நடவடிக்கைகளில் திறமையுள்ள வீரராவார்.
- ஆரம்பத்தில் உரோமப் பேரரசைக் கட்டியெழுப்பியவர் இவராவார்.
- இவர் நேர்மையான ஆட்சியாளராகத் திகழ்ந்தார்.

**ஒகஸ்டஸ் சீசர்**

- இவரது ஆட்சிக் காலம் உரோமானிய வரலாற்றின் பொற்காலமாகக் கருதப் படுகிறது.



உரு 5.12 ஜூலியஸ் சீசர்

- உரோமின் முக்கிய புராதனச் சின்னங்களான கொலோசியம், கெர கெல்லா எனும் பெருங்குளியல் தடாகம் என்பவை இவரது கால நிர் மாணங்களாகும்.
- ஒகஸ்டஸ் சீசரின் ஆட்சிக் காலத்தில் உரோமப் பேரரசுக்குட்பட்டிருந்த பெத்லகேம் என்னும் இடத்தில் இயேசு நாதரின் பிறப்பு இடம்பெற்றது.

## மக்களது வாழ்க்கை முறை

உரோமானிய சமூகத்தில் குடும்பத் தலைவர் தந்தையாவார். அவர் குடும்பத்தின் சகல விடயங்களையும் மேற்கொண்டு வந்தார். உரோம சமூகத்தில் பெண்களுக்கு உயர் அந்தஸ்து காணப்பட்டது. அவர்கள் உயர் பதவிகளையும் வகித்துள்ளனர். வைத்தியர்களாகவும் திகழ்ந்துள்ளனர். தாய் புனிதமானவளாக கருதப்பட்டாள்.

## சமூகம்

பிரபுக்கள், குடிமக்கள், அடிமைகள் என சமூகம் மூன்று பிரிவினரைக் கொண் டிருந்தது.

## நகர நிர்மாணமும் வீடமைப்பும்

திட்டமிட்ட முறையில் நகர்களை நிர்மாணித்திருந்தனர். பிரபுக்கள் நகரங் களில் ஆடம்பரமான வீடுகளில் வாழ்ந்து வந்தனர். மாடிவீடுகளும் அவற்றினிடையே காணப்பட்டன.

நீர்வசதி, சுகாதார வழிமுறைகள் தொடர் பாகக் கூடிய கவனம் செலுத்தியுள்ளனர்.

ஒவ்வொரு நகரமும் வீதித் தொகுதியால் இணைக்கப்பட்டிருந்தது. பாலம் கட்டும் கலையில் விசேடத்துவமானவர்களாக உரோமானியர்கள் காணப்பட்டனர்.



உரு 5.13 பெரிய குளியல் தடாகம்



உரு 5.14

உரோமர்கள் தாம் அடிமைப்படுத்திய நாடுகளில் இருந்து பெருந்தொகையான கைதிகளை உரோமுக்குக் கொண்டு சென்றனர். இவர்களை அடிமைகளாகச் சந்தைகளில் விற்றனர்



உரு 5.15

உரோம பிரபுக்கள் சமூகத்தின் முதன்மைப் பிரிவினர் ஆவர். அவர்கள் ஆடம்பரமான மாளிகைகளில் வாழ்ந்து கொண்டு சுகபோக வாழ்க்கையை அனுபவித்து வந்தனர். ஒரு பிரபுவிடம் நூற்றுக்கணக்கான அடிமைகள் காணப்பட்டனர்.



உரு 5.16 புராதன உரோமானிய பாலம்

## கலைகள்

கிரேக்கர்களைப் போன்றே உரோமானியர்களும் சிறந்த இலக்கியவாதிகளாகத் திகழ்ந்தனர். உயர்தரத்திலான கவிதை உரைநடை நூல்கள் பலவற்றை ரோமானிய எழுத்தாளர்கள் படைத்துள்ளனர். வர்ஜில் எனும் நூலாசிரியர் எழுதிய ஈனிட் இவ்வாறான ஒரு படைப்பாகும்.

உரோமாபுரியில் கட்டப்பட்டிருந்த நாடக அரங்குகள், திறந்த வெளி நாடக அரங்குகள், என்பவை அம்மக்களின் கலை இரசனையை எடுத்துக்காட்டும் உதாரணங்களாகும்.

## சிற்பங்கள், சிலைகள்

உன்னத செதுக்கல் கலைக்கும் உரோமாபுரி புகழ்பெற்றிருந்தது. நீரோ மன்னரினது எனக் கருதப்படும் செம்பினாலான தலை, சிற்பக் கலையின் உயிர்த் துடிப்பான அமைப்புக்கு ஓர் உதாரணமாகும்.

## கட்டட நிர்மாணம்

உரோமாபுரி நகரில் அமைக்கப்பட்டுள்ள கொலோசியம், ஒரு திறந்தவெளி விளையாட்டு அரங்கமாகும். இங்கு 50,000 பேர் ஒரே நேரத்தில் ஒன்றுகூட முடியும். இது உலகின் ஏழு அதிசயங்களுள் ஒன்றாகும்.

பெந்தியன் ஆலயம் உரோமானியக் கட்டடக் கலையின் உன்னதத்தைக் காட்டும் பிரமாண்டமான நிர்மாணமாகும். உரோமரால் வணங்கப்பட்ட அனைத்து தெய்வங்களுக்காகவும் இது அமைக்கப் பட்டுள்ளது.



உரு 5.17 உரோமரின் கொலோசியம்

## விளையாட்டு

- கிரேக்கரை போன்று உரோமர் பொதுவாக விளையாட்டுக்களில் ஈடு பட்டிருந்தமைக்கான ஆதாரங்கள் குறைவாகும்.
- உரோமானியர்கள் வண்டி ஓட்டப் போட்டிகளை நடத்தியதற்கான ஆதா ரங்கள் கிடைத்துள்ளன.
- அவர்கள் சிங்கம் போன்ற மிருகங் களைப் பயன்படுத்தி, நடத்திய குரூரமான கொடிய சண்டைகளில் விருப்புக் கொண்டிருந்துள்ளனர் இவ்வாறான போட்டிகளின் போது நூற்றுக்கணக்கான மனிதர்களும் 200 மிருகங்களும் இறந்து போயின என்றால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். இதற்கு அடிமைகளைப் பயன்படுத் தினர் என நம்பப்படுகிறது.

## வணிகத் தொடர்புகள்

உரோமாபுரி மிகவும் செல்வந்த நகராவும், கிழக்கு, மேற்கு வர்த்தகத்தின் மத்திய நிலையமாகவும் திகழ்ந்துள்ளது. மத்திய தரைக் கடலைச் சூழ்ந்த நாடுகளுடனும் இந்தியா, சீனா, இலங்கை போன்ற ஆசிய நாடுகளுடனும் அது வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ளது. உரோமானிய வர்த்தகர்கள், இலங்கை பற்றிய பல்வேறு தகவல்களையும் முன்வைத்துள்ளனர்.

பாதிகாபய மன்னன் ருவன்வலிசாயவை அழகுபடுத்துவதற்கு உரோமாபுரியி லிருந்து பவளங்களை வரவழைத்தான் என்று இந்நாட்டு மூலாதாரங்களில் குறிப் பிடப்பட்டுள்ளது.

## உரோம நாகரிகத்தால் உலகிற்குக் கிடைக்க பெற்ற கொடைகள்

- ஐரோப்பிய நாகரிகத்திற்கு பாலம் கட்டுதல், நீர்க்குழாய்களை அமைத்தல், பெருந்தெருக்களை அமைத்தல் போன்ற தொழினுட்பங்கள் கிடைக்கப்பெற்றமை
- கிறிஸ்தவ சமயம், உரோமப் பேரரசில் பரவிய பின்னரே உலகம் முழுவதும் பரவலடைந்தது.
- உரோமானிய சட்டங்கள்
- இலத்தீன் மொழி
- உரோமானிய கட்டட நிர்மாணக்கலை

### முக்கியமான விடயங்கள்

- கிரிட் தீவை மையமாகக் கொண்டு கிரேக்க நாகரிகம் உருவானது.
- எதென்ஸ், ஸ்பாட்டா போன்ற நகர அரசுகள் காணப்பட்டன.
- கலை, விஞ்ஞானம், தத்துவம் போன்ற துறைகளில் கிரேக்கர்கள் உயர் நிலையை அடையப்பெற்றிருந்தனர்.
- இன்றைய உலகிற்கு புராதன கிரேக்க நாகரிகத்தின் மூலம் பல்வேறு விடயங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.
- இத்தாலியின் தலைநகரத்தை மையமாகக் கொண்டு உரோம நாகரிகம் கட்டியெழுப்பப்பட்டது.
- மத்தியதரைக் கடலைச் சூழ பரந்த பிரதேசத்தில் உரோமானிய ஆதிக்கம் மேலோங்கி, பேரரசாக விரிவடைந்தது.
- கிரேக்கத்தின் பின்னர் ஐரோப்பாவில் நிலவிய உயரிய நாகரிகத்தை உரோமானியர்கள் உருவாக்கினர்.
- நவீன உலகத்தின் முன்னேற்றத்திற்கு உரோம நாகரிகம் பாரிய அளவில் பங்களிப்புச் செய்துள்ளது.

### செயற்பாடு

1. ஐரோப்பிய வரைபடம் ஒன்றின் துணையுடன் இத்தாலியக் குடாநாடு, உரோம நகரம், தைபர் நதி, அல்ப்ஸ் மலை, அபினைன் மலை, இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பானியா என்பவற்றைக் குறிக்க.
2. உரோமானியரின் கலைப்படைப்புகள், கட்டட நிர்மாணங்கள், பொறியியல் நுட்பங்களைக் கொண்ட படங்களைத் திரட்டுக.
3. இலங்கையில் காணப்பட்ட புராதன உரோம நாணயங்கள் கொழும்பு நூதனசாலையில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. அவற்றைப் பார்வையிட்டு, அவை தொடர்பான தகவல்களைப் பெறுக.